REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 12 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 90 இல. 37 | Saturday 12, February, 2022 | 16 பக்கங்கள் | 30/-

## 'காதலுக்கு ஒரு மரம்'
### காதலர் தினத்துக்காக அரசின் விசேட திட்டம்



காதலர் தினமான பெப்ரவரி 14 ஆம் திகதி 'காதலுக்கு ஒரு மரம்' என்ற எண்ணக்கருவில் மரம் நடும் திட்டத்தை 06




யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்த வவுனியா வளாகம், "வவுனியா பல்கலைக்கழகம்" என்ற பெயரில் தேசிய பல்கலைக்கழகமாக அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று (11) நடைபெற்றது. நிகழ்வுக்கு வருகைதந்த ஜனாதிபதி வரவேற்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுவதையும் தேசிய பல்கலைக்கழகமாக மாற்றும் நிகழ்வைப் பதிவு செய்யும் கல்வெட்டை ஜனாதிபதி திரைநீக்கம் செய்து திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

**எனது தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளில் ஒன்று இது**

# சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தில் வவுனியா பல்கலைக்கழகம் உதயம்



### தொழில்நுட்ப சவால்களை முறியடிக்க இதனை பயன்படுத்துவோம்

**வவுனியா பல்கலைக்கழகத்தை திறந்துவைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரை**

**வவுனியா விசேட நிருபர்**

சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்துக்கமைய வவுனியா பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு பிரதேசத்தை கல்வி, பொருளாதார ரீதியில் உயர்வடையச் செய்யும் நோக்கில் இப் பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்படுகிறது. எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது போல நாட்டில் புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்படுவதில் பெருமையடைகிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தினூடாக தொழில்நுட்ப சவால்களை முறியடிப்போமென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

இது ஒரு விசேஷமான நாள், சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்துக்கமைய இந்த பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இந்த பிரதேசத்தை கல்வி பொருளாதார ரீதியில் உயர்வடைய இந்த வவுனியா 06

## நாட்டில் 98 சதவீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது



**சர்வதேச செஞ்சிலுவை சங்க செயலாளரிடம் சுகாதார அமைச்சர்**

உலகில் சில நாடுகள் இன்னும் தடுப்பூசி வழங்கும் பணிகளை ஆரம்பிக்காத நிலையிலும் கூட, இலங்கையில் 98 சதவீதமானோருக்கு, குறிப்பாக சிறுவர்களில் 95 06

## இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி சுங் பதவியேற்பு



இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவராக ஜூலி சுங் பதவியேற்றுள்ளார்.

இலங்கைக்கான தூதுவராக ஜூலி சுங்கிற்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பதில் பெருமையடைவதாக பிரதி 06

## மங்கள சமரவீர அரசியலில் இன்றும் இருந்திருக்க வேண்டிய அரசியல்வாதி

**அனுதாபப் பிரேரணையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ**

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



அமரர் மங்கள சமரவீர அரசியலிலிருந்து ஒதுங்கிய போதும் அவரின் மரணத்தின் போதும் நான் மிகவும் கவலையடைந்தேன். மங்கள என்பவர் அரசியலில் கட்டாயம் இருக்கவேண்டிய ஒரு அரசியல்வாதியென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமரர் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டதாவது. 06

## யாழ்ப்பாணத்துக்கு மேலுமொரு ஆசனம்

**வர்த்தமானி அறிவித்தல் வெளியானது**



புதுப்பிக்கப்பட்ட தேர்தல் பதிவேட்டின் கீழ், யாழ். மாவட்டத்திற்கான பாராளுமன்ற ஆசனங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய 6 ஆக இருந்த யாழ் 06

## IMFயிடம் இலங்கை நிதியுதவி எதனையும் கோரவில்லையாம்

சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை இதுவரையில் நிதி உதவி எதனையும் கோரவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் கெரி ரைஸ் இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார்.

தமது பிரதிநிதிகள் அண்மையில் 06

## திக்வெல்ல – பெலியத்த வீதியில் பஸ் விபத்து




திக்வெல்ல பெலியத்த வீதியில் நேற்று காலை 11.20 மணியளவில் இரு பஸ்கள் 06

**ஈஸ்டர் தாக்குதல் சம்பவ சந்தேக நபர்**

## பாத்திமாவிடம் வாக்குமூலம் பெற நீதிமன்றம் அனுமதி

**நேற்று முதல் CIDயினர் நடவடிக்கை**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதி ஸஹ்ரானின் மனைவி பாத்திமா ஹாதியாவிடம் வாக்குமூலம் பெற நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது கல்முனை மேல் நீதிமன்றத்திலுள்ள எச்.சி. 653/21 எனும் வழக்குக்கமைய வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 06

## போலி தடுப்பூசி அட்டையை பயன்படுத்தினால் நடவடிக்கை

**கடும் சட்ட நடவடிக்கை என எச்சரிக்கை**




போலி தடுப்பூசி அட்டைகளைப் பயன்படுத்துவோருக்கு இலங்கை சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. தடுப்பூசி பெற்றுக்கொண்ட அனைவரது தகவல்களும் சுகாதார அமைச்சகத்திடம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தடுப்பூசி பெற்றுக்கொள்வதை தவிர்ப்பது ஒரு பயனற்ற முயற்சி எனவும் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார். 06

## எதிர்வரும் 14 வரை மின் வெட்டு இல்லை



**சிக்கனம் பேணுமாறு அறிவுறுத்தல்**

மின்சாரத்துக்கான கேள்வியை தடையின்றி பூர்த்தி செய்வதற்கு தேவையான அளவு மின்சார உற்பத்தி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

எனவே, எதிர்வரும் திங்கட்கிழமை (14) வரை மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவை ஏற்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவதில் நுகர்வோர் கவனம் செலுத்த வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வத்தளையில் 02 Kg போதைப்பொருள் மீட்பு; ஒருவர் கைது



வத்தளையில் சுமார் 02 கிலோ ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை பேலியகொடை குற்ற விசாரணைப் 06

**மாகாணசபை தேர்தல் சட்ட திருத்தம்**

## அரசுக்கு யோசனையை முன்வைக்க த.மு.கூ முடிவு



மாகாணசபை தேர்தல் சட்டத்தை திருத்தி, பழைய விகிதாசார முறையில் மாகாணசபை தேர்தலை நடத்தும்படியான யோசனையை அரசுக்கு முன் வைக்க தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது.

நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்று வியாழக்கிழமை(10) கூடிய தேர்தல் முறை சீர்திருத்த குழுவில் இந்த விடயம் குறித்து தீர்மானிக்கப்பட்டதாக கூட்டணியின் தலைவர் 06

**மொறட்டுவ பகுதியில்**

## பாதாள உலக உறுப்பினர் துப்பாக்கி சூட்டில் பலி!

**மொறட்டுவை மத்திய விசேடநிருபர்**



மொறட்டுவை எகொடஉயன பொலிஸ் பிரிவில் பிரதான போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த நபர் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் வியாழனன்று இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

டுபாயிலிருந்து போதைவஸ்து 06

## லங்கா ஈ நியூஸ் கீர்த்தி ரத்நாயக்க

### பிணையில் விடுதலை!



கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தாக்குதலுக்கு இலக்காகும் அபாயம் உள்ளதாக தகவல் வழங்கிய, லங்கா ஈ நியூஸ் இணையத் தளத்தின் பிராந்திய அரசியல் மற்றும் பாதுகாப்பு விவகார எழுத்தாளரான கீர்த்தி ரத்நாயக்க கைது செய்யப்பட்டு 6 மாத தடுப்புக் காவலின் பின்னர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார். 06

## சவூதி விமான நிலையம் மீது ஆளில்லா விமான தாக்குதல்

### இலங்கையர் உட்பட 12 பேர் காயம்




சவூதிஅரேபியாவின் விமான நிலையம் மீது இடம்பெற்ற ஆளில்லா விமானத்தாக்குதலில் இலங்கையர்கள் உட்பட 12 பேர் காயமடைந்துள்ளனர்.

யேமன் சவூதிஅரேபியா எல்லையில் உள்ள விமானநிலையமொன்றை இலக்கு வைத்து ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் 06

**விக்கல் வீராச்சாமி**



18, 20 வருஷமா சிறையில வாடுற தமிழ் இளைஞர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் இல்லை எண்டு ரிசாத் எம்பி ஐயா கவலைப்பட்டிருக்கிறார்....

நல்லாட்சி அரசில ஐயா அஞ்சு வருஷம் இதைப்பற்றி வாயே திறக்கல, அதோட இப்ப இந்த அரசு அவங்கள விடுவிக்கிறது இவருக்கு தெரியாது போல...!!!

# தேசிய பல்கலைக்கழகமாக வவுனியா வளாகம் மாற்றம்





# ஜனாதிபதி மக்கள் சந்திப்பு











வவுனியா வளாகத்தை தேசிய பல்கலைக்கழகமாக மாற்றும் நிகழ்வைப் பதிவு செய்யும் நோக்கில் கல்வெட்டைத் திரைநீக்கம் செய்து திறந்துவைத்த ஜனாதிபதி, பல்கலைக்கழகத் தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையம் மற்றும் சகவாழ்வு மையம் போன்றவற்றை மாணவர் பாவனைக்கு கையளித்தார்.

# இந்து தமிழ்ப் பெரியார்களின் கனவாக உதித்த இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி

## 71 ஆம் ஆண்டு நிறைவு (12.02.2022)

மேல்மாகாணத்தில் பிலியந்தலை கல்விவலயத்தின் தெஹிவளை கோட்டக்கல்விப் பிரிவுக்குள் செயற்பட்டு வருகின்ற பழப் பெருமை வாய்ந்த இரத்மலானை, கொழும்பு இந்துக்கல்லூரி சவால்களுக்கு முகம் கொடுத்துத் தடைகளைத் தகர்த்து முன்னேறி வருகின்றது.

வறுமையான சூழலிலிருந்து வரும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு கல்வியளித்து வளப்படுத்துகின்ற ஒரு பாடசாலை இதுவாகும். இந்துக் கல்லூரியை நிறுவும் முயற்சியின் ஆரம்பமாக இந்து வித்தியாவிருத்திச் சஙகம் ஸ்தாபிக்கப்பட்டது. நீதியரசர் நாகலிங்கம் தலைமையில் 24 பிரமுகர்கள் இணைந்து இச்சங்கத்தை 05021951 இல் நிறுவினார்.

அமரர் நாகலிங்கத்தைத் தலைவராகவும் செயலாளராக மகாதேவன், பொருளாளராக மு.சச்சிதானந்தா ஆகியோரையும் கொண்டு செயற்பட ஆரம்பித்த இந்துவித்தியாபிவிருத்திச் சபை வேகமாகச் செயற்பட்டு பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் ஆலய மடத்தில் 48 பிள்ளைகளுடன் ‘பிள்ளையார் பாடசாலை' என்ற பெயரில் பாடசாலையொன்றை ஆரம்பித்தது. முதலாம் குறுக்குத் தெரு கதிர்வேலாயுத சுவாமி கோயில், பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சார்பில் மதராஸ் பழைய காட் கம்பனியின் இயக்கப் பணிப்பாளர் அண்ணாமலை முதலியார் பம்பலப்பிட்டியில் ஒரு ஏக்கர் காணியை இந்து வித்தியாபிவிருத்திச் சபைக்கு வழங்கினார். 1951 மார்ச் மாதத்தில் இக்காணிக்குப் பாடசாலை மாற்றப்பட்டது.





இரத்மலானையில் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் 1953 ஆம் ஆண்டு ஆரம்பமாகின. அவ்வேளை பாராளுமன்ற உறுப்பினர் சேர். ஜோன் கொத்தலாவல புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை 02051953 இல் நாட்டி வைத்தார். 1955 இல் கொழும்பு இந்துக் கல்லூரி இரத்மலானையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. உயர்தர வகுப்புக்களைக் கொண்டிருந்த இரத்மலானை கொழும்பு இந்துக் கலலூரியின் கனிஷ்ட பாடசாலையாக பம்பலப்பிட்டி பாடசாலை செயற்பட்டது. இரு பாடசாலைகளும் ஒரே அதிபரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கின. 1958 இன் இனக் கலவரங்களால் இப் பாடசாலை பாதிக்கப்பட்டது.

திரு. சுப்பிரமணியம் 1959 இல் அதிபராகக் கடமை ஏற்றார். நாட்டிலுள்ள பாடசாலைகளைத் தேசியமயமாக்கும் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்திற்கு அமைய 1961 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள ஒருசில கல்லூரிகளைத் தவிர அனைத்துப் பாடசாலைகளும் அரசினால் சுவீகரிக்கப்பட்டபோது கொழும்பு இந்துக் கல்லூரியும் அரசுடமையானது.

இரத்மலானையில் அமைந்திருந்த சிரேஷ்ட கல்லூரிக்கான ஆரம்பப் பாடசாலையாக இதுவரை இயங்கி வந்த பம்பலப்பிட்டிய பாடசாலை 1968 ஆம் ஆணடில் தனித்தியங்க ஆரம்பித்தது. படிப்படியாக சிரேஷ்ட வகுப்புகளை ஆரம்பித்துக் கொண்டு இரத்மலானை கொழும்பு இந்துக்கல்லூரி என்ற பெயரையும் தனக்குச் சூட்டிக் கொண்டது. இவ்விடத்தில் இரண்டு கொழும்பு இந்து கலலூரிகள் உருவாகியமையை சுட்டிக் காட்டுதல் அவசியமானது.

இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியைப் பொறுத்தவரை 1970 கள் காலப்பகுதியை 'பொற்காலம்' என அழைப்பது பொருதடதமானதாகவே உள்ளது. இக்காலப்பகுதியில் கல்லூரி மிகச்சிறப்பாக இயங்கி வந்ததையை அறிய முடிகின்றது. கல்லூரியை நிறுவிய இந்து வித்தியாவிருத்தச் சபையே 1961 ஆம் ஆண்டு கல்லூரி தேசிய உடைமையாக்கப்படும் வரை கல்லூரியை நிர்வகித்து வந்தது. ஆனால் கல்லூரி தேசியமயமாக்கப்பட்ட பின்னர் கல்லூரிக்கும் இந்து வித்தியதவிருத்திச் சபைக்கும் இருந்த தொடர்பு இல்லாமற் போயிற்று. எனினும் 1970களின் நடுப்பகுதியிலிருந்து இந்து விதிதியாவிருத்திச் சங்கம் கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிற்து.

எழுபதுகளில் கல்லூரி சிறந்த முறையில் கல்விப் பணியாற்றி வந்தது. பொதுப்பரீட்சைகளில் மாணவர்கள் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று உயர் கல்வி வாய்ப்பைப் பெற்றனர்.

கல்லூரின் வெள்ளிவிழா 1976 ஆம் ஆண்டில் சிறப்பாகக் கொண்டாப்பட்டது. 1983 கலவரங்களால் இரத்மலானை கொழும்பு இந்துக்கல்லூரிக்கு ஏற்பட்ட இழப்பு சொல்லி மாளாது. கல்விப்பணியில் சிகரத்திலிருந்த கல்லூரி அதலபாதாளத்திற்குள் தள்ளி வீழ்த்தப்பட்டது. தலைநகரில் தலைநிமிர்ந்து நின்ற தமிழர்களின் கல்விக்கூடம் முகவரியிழந்து, தொலைந்து போனது.



1983இல் கல்லூரி இடம்பெயர்ந்து முதல் 1992 இல் மீளக்குடியேறும் வரையான காலம் ஏறத்தாழ பத்தாண்டுக் காலப்பகுதி கல்லூரி வரலாற்றில் கண்ணீரும் கம்பலையும் நிறைந்த இருள்சூழ் காலமாகவே கழிந்தது. கல்லூரியின் நிலத்தை மீட்கப்பல தரப்பட்டோரும் அரும்பாடுபட்டனர்.

பலரின் வேண்டுகோளுக்குமிணங்கி இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரமேதாச கல்லூரியைப் பார்வையிட வந்தார். ஜனாதிபதி கல்லூரி வளாகத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். 1992ஆம் ஆண்டு மே மாதத்தில் கல்லூரிக் கட்டடம் அமைந்த பகுதி மட்டும் மீள ஒப்படைக்கப்பட்டன. கல்லூரி வளாகத்தை மீளப்பெறுவதில் அதிபர் காட்டிய விடாமுயற்சியும் இந்து வித்தியாபிவிருத்திச் சங்கம், அகில இலங்கை இந்து மாமன்றம் போன்ற நிறுவனங்களும் அரசியல் பிரமுகர்களும் வழங்கிய ஒத்துழைப்பும் இவ்விடத்தில் நினைவுகூரப்பட வேண்டியன.

இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரியை மீளப் பொலிவுறச் செய்யும் உறுதியுடன் 1995 ஆம் ஆண்டு திரு மன்மதராஜன் மீண்டும் அதிபரானார்.

கொழும்பு இந்துக்கல்லூரியை சைவத் தமிழ் மணங்கமழும் பூஞ்சோலையாக அமைக்க வேண்டும் என்ற ஸ்தாபகர்களின் கனவைத் தன் சிரமேற் கொண்டு உழைத்த அதிபர் ந. மன்மதராஜன் அவர்களை கல்லூரி வரலாற்றின் மீளுயிர்ப்புக்கால நாயகனாச் சுட்டுவதில் எந்தத் தயக்கமும் தேவையில்லை.

இரத்மலானை, கொழும்பு இந்துக் கல்லூரி இன்று பிலியந்தலைக கல்வி வலயத்தில் ஒர் முன்னணிப்பாடசாலையயாகத் திகழ்கின்றது. க.பொ.த.(உ/த), க.பொ.த.(சா/த) மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளில் கல்லூரி மாணவர்கள் விதந்து கூறத்தக்க பெறுபேறுகளை பெற்று வருகின்றனர் கல்லூரியின் மென்பந்து துடுப்பாட்ட அணியினர் 2008ஆம் ஆண்டு மேல்மாகாணத்தின் பல பிரபல, தேசிய கல்லூரிகளையும் பின்தள்ளி மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றனர். கல்லூரியினால் தயாரிக்கப்பட்ட நாடகம் கொழும்பு றோயல் கல்லூரியினால் நடத்தப்பட்ட நாடகப்போட்டியில் 2007 ஆம் ஆண்டு முதலாமிடத்தைப் பெற்றது.



தமிழ்த்தின ஆங்கிலதின மற்றும் கணித, விஞ்ஞான போட்டிகள் போன்றவற்றில் கல்லூரி மாணவர்கள் வலய, மாகாண மட்டங்களில் பல பரிசில்களைப் பெற்று வருகிறார்கள்.

கல்லூரியில் பல மன்றங்களும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. தமிழ் மன்றத்தினால் முத்தமிழ்விழா தரமிக்க விழாவாக வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நாடத்தப்பட்டு பலரது பாரட்டையும் பெற்று வருகின்றது. விஞ்ஞான மன்றம் ஆண்டுதோறும் கண்காட்சியையும், விஞ்ஞானதினத்தையும் நடத்துகின்றது. இஸ்லாமிய மன்றம் மீலாத் விழாவையும் கிறிஸ்தவ மன்றம் ஒளிவிழாவையும் நாடகமன்றம் நாடகவிழாவையும் ஆண்டுதோறும் நடத்துகின்றன. இந்துக்கல்லூரியாக இருந்தபோதிலும் இஸ்ஸாமிய, கிறிஸ்தவ மாணவர்களுக்கும் சமவாய்ப்பு வழங்கப்பட்டு வருவது சிறப்பானதொரு விடயமாகும் .

கல்லூரியின் ஸ்தாபகத்தில் பெரும் பங்கு வகித்த நீதியரசர் நாகலிங்கம், சேர் கந்தையா வைத்தியநாதன், சு. மகாதேவன், எஸ். நடேசன் ஆகியோரின் பெயர்களில் இல்லங்கள் அமைக்கப்பட்டு அப்பெரியார்கள் நினைவு கூரப்படுவதோடு வருடாந்தம் இல்ல மெய்வல்லுனர் போட்டி சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது.

இந்துத் தமிழ்ப் பெரியார்களின் கனவாக உதித்த இரத்மலானை, கொழும்பு இந்து கல்லூரியின் எதிர்காலத்தை மேலும் மிளரச் செய்ய வேண்டியது இந்துத் தமிழ்ச் சமூகத்தினதும் நிறுவனங்களினதும் கைகளிலேயே உள்ளது.

**தொழுகை நேரம்**
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.21
இஷா - 07.33

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் தை 30
ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: ஏகாதசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | சுகம் |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | செலவு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# 'பாராளுமன்ற சார சங்ஹிதா' இலக்கிய நூல் பிரதமரிடம் கையளிப்பு

பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் 'சார சங்ஹிதா' புலமை இலக்கிய நூலின் இரண்டாம் பதிப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று (11) கையளிக்கப்பட்டது.



பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க பிரதமரிடம் இந்நூலைக் கையளித்ததுடன், பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான எச். ஈ. ஜனகாந்த சில்வாவும் இதன்போது கலந்து கொண்டார்.

கடந்த 08 ஆம் திகதி பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

சட்டவாக்க செயற்பாடுகள், நிலைபேறான அபிவிருத்தி, தேர்தல் முறைமை மற்றும் அதன் திருத்தங்கள், பாராளுமன்ற அறிக்கையிடலும் வெகுஜன ஊடகமும், பொதுமக்கள் தொடர்பு மற்றும் இலங்கை பெண்கள் அரசியலில் புதிய போக்கு ஆகிய பல்வேறு தலைப்புகளில் கல்வித் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களின் கட்டுரைகள் இந்த நூலில் உள்ளடங்கப்பட்டுள்ளன.

ஹக்மன நகர் பகுதியில்

# மரணமான யாசகரிடம் ரூ 04 இலட்ச பணம் மீட்பு

ஹக்மன நகர் பகுதியில் வசிக்கும் யாசகர் ஒருவர் நேற்று முன்தினம்(10) திடீரென மரணமானபோது அவரது கால்சட்டைப் பையிலிருந்து பெருந்தொகை பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மரணமானவர் ஹக்மன பிரதேசத்தில் வசிக்கும் யாசகர் ஒருவர் என தெரிவிக்கப்படுகின்றது.அவரது கால்சட்டை பைகளில் கிட்டத்தட்ட 400,000 ரூபாய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

தென் மாகாணத்தைச் சேர்ந்த 69 வயதான ஹக்மன கொங்கல, தி. விமலதாச என்ற யாசகரே இவ்வாறு மரணித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இந் நபர் தான் தங்கியிருந்த வீட்டுக்கருகிலுள்ள மலையிலிருந்து தவறி விழுந்து மரணித்துள்ளார்.

தனியாக வசித்து வந்த இவர், இதற்கு முன்பு ஹெவிசி எனும் தோல் இசைக்கருவி வாசிப்பவராக பணியாற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இறந்தவருக்கு உறவினர்கள் எவரும் இருப்பதாக தகவல் இல்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

# தனது கொள்கைகளுக்கு இடமில்லாத இடத்தில் ஒரு நிமிடமும் இருந்ததில்லை

## மங்கள சமரவீரவின் அனுதாபப் பிரேரணையில் சஜித்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



தான் நம்பும் கொள்கையில் உறுதியாக இருந்ததால் மங்கள சமவீரவுக்கு பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. அவர் தனது கொள்கைகளுக்கு இடமில்லாத இடத்தில் ஒருநிமிடம் கூட இருந்ததில்லையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

நிரந்தரமான கொள்கையிலிருந்து கொண்டு தனது கொள்கையை மதித்துசெயற்பட்ட அரசியல்வாதி அவர். தான் நம்பும் கொள்கையை பிசகாமல் பின்பற்றக் கூடியவர். தனது சமூக, பொருளாதார, சர்வதேச கொள்கைகளை அவர் மாற்றவில்லை. இதனால் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது. பதவிக்காக வாழ்ந்தவரல்ல அவர். தனது கொள்கைக்கு இடமில்லாவிட்டால் ஒருநிமிடம் கூட அங்கிருக்கமாட்டார். மனசாட்சிக்குட்பட்டு செயற்பட்டார். அவர் பற்றி நம்பகத்தன்மை ஏற்பட்டது. சிலர் அவரின் கொள்கைகளுடன் உடன்பாடாவிட்டாலும் அவர் நிலையாக இருந்து செயற்பட்டார். பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் நம்பிக்கை வைத்திருந்தார்.நிதி அமைச்சராக அவர் முக்கிய பங்காற்றினார். எல்லா சந்தர்ப்பங்களிலும் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நேரடியாக பதில் கொடுத்தார். எதற்கும் அஞ்சுபவரல்ல அவர். தைரியமான நபர். விமர்சனங்கள், குற்றச்சாட்டுகளை தைரியமாக முகம் கொடுத்தார்.

06

# தோட்ட தொழிலாளர்களுக்கு மானிய முறையில் கோதுமை மா வழங்கல்

## பிரீமா, செரன்டிப் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடல்

ஜனாதிபதியின் என்னக்கருவுக்கமைய பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு மானிய முறையில் கோதுமை மா வழங்குவது தொடர்பான பிரீமா மற்றும் செரன்டிப் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்வது தொடர்பாக கலந்துரையாடல் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் கூட்டுறவு சேவைகள் சந்தைப்படுத்தல் மேம்பாடு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோர் இவ் ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.



இதன்போது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 80 ரூபா வீதம் 15 கிலோ கோதுமை மாவை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவும் இவ் திட்டத்தை விரைவாகவும் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர்கள்,அதிகாரிகள் பிரீமா,செரன்டிப் நிறுவனங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டார்.

# 10 இலட்சம் பேர் தடுப்பூசி செலுத்தவில்லை

## சுகாதார அமைச்சு தகவல்

கொரோனா தடுப்பூசி பெறுவதற்கான வயதெல்லையில் உள்ள சுமார் 10 இலட்சம் இலங்கையர்கள் இதுவரையில் எந்தவொரு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுகாதார பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா இரண்டாவது தடுப்பூசி பெற்றவர்களில் சுமார் 62 இலட்சம் பேர் இதுவரையில் பூஸ்டர் தடுப்பூசியை பெறாமல்

06

# உதவி கோரல்

தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்ட ஏ.எம்.கவிஷ் கிரினிது அத்தநாயக என்ற 3 வயது சிறுவனின் மருத்துவ சிகிச்சைகளுக்காக அவரது தந்தை பொதுமக்களிடம் உதவி கோரியுள்ளார்.

எலும்பு மச்சை பொருத்தும் சத்திரசிகிச்சை மூலமே தலசீமியா நோயினை முற்றாக குணப்படுத்த முடியும் என வைத்தியர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இச்சத்திரசிகிச்சை கொழும்பு ஆசிரி மத்திய வைத்தியசாலையிலேயே தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக 8 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே கருணை உள்ளம் கொண்டவர்கள் உதவிசெய்யுமாறு அவரது தந்தை கோரியுள்ளனர். ஏ.ஏ.எம்.சீ. அமரதுங்க ,101 352 397 494, சம்பத் வங்கி, மஹரகம கிளை அல்லது ஏ.ஏ.எம்.சீ அமரதுங்க , 884 25 324, இலங்கை வங்கி மஹரகம கிளை என்ற வங்கிக் கணக்குகளில் நிதி உதவிகளை வைப்பிலிடுமாறு கோரியுள்ள அவர் தனது தொலைபேசி இலக்கம் 0710746762 எனவும் அறியத் தந்துள்ளார்.

# கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு காண சிவில் சமூகங்களின் ஒத்துழைப்பு தேவை

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் கோரிக்கை

**பருத்தித்துறை விசேட நிருபர்**

இலங்கை இந்திய கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு புத்திஜீவிகள், சிவில் சமூகங்களின் ஒத்துழைப்பு தேவையென யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.



வடக்கில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாணத்திற்கு உட்பட்ட நான்கு மாவட்டங்களை சேர்ந்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுக்கிடையில் விசேட கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அன்னலிங்கம் அன்னராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை சரியாக ஆராய்ந்து அதனை இராஜதந்திர ரீதியில் நகர்த்த வேண்டிய தேவையுள்ளது. இவ்விடயம் தொடர்பில் கடந்த வாரமும் யாழ். மாவட்ட ரீதியில் கலந்துரையாடி இருந்தோம். அதேபோல நேற்றைய தினம்

06

பாராளுமன்ற துறைசார்

# மேற்பார்வை குழுக்களை நியமிக்க ஐ.ம.ச கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்கள் கடந்த 02 வருடங்களாக நியமிக்கப்படவில்லை. அவற்றை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு எதிர்த்தரப்பு பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று சபையில் கோரினார்.

ஆனால் அரசாங்கம் இது தொடர்பில் இன்னும் முடிவு எடுக்கவில்லையென ஆளும் தரப்பு சார்பில் பதில் வழங்கப்பட்டது.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் கூடியபோது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்த எதிர்த்தரப்பு பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல,

துறைசார் மேற்பார்வை குழுக்கள் கடந்த 02 வருடங்களாக நியமிக்கப்படவில்லை. ஒவ்வொரு மாதமும் நான் இது பற்றி கேள்வி எழுப்பி வருகிறேன். அவை முக்கியமானவை .சபாநாயகர் தான் எமது உரிமைகளை பாதுகாக்க வேண்டும்.கட்சித் தலைவர் கூட்டத்தில் துறைசார் மேற்பார்வை குழுக்கள் முக்கியம் பற்றி எடுத்துரைத்தேன். சட்ட மூலங்களின் ஒவ்வொரு சரத்து பற்றியும் இங்கு ஆராயப்படுகிறது என்றார்.

இதற்குப் பதிலளித்த ஆளும் தரப்பு பிரதம கொரடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ ,

06

# சம்பள நிலுவை, கொடுப்பனவுகள் கோரி வைத்தியர் ஷாபி ரிட் மனு தாக்கல்

சட்ட விரோதமாக கருத்தடை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு கட்டாய விடுமுறையில் அனுப்பட்ட குருணாகல் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று பிரிவின் வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹம்மட் ஷாபி, தனக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவை மற்றும் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க உத்தரவிடுமாறு கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

குருணாகல் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சந்தன கெந்தன்கமுவ, வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.எம்.எஸ். வீரபண்டார, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் வைத்தியர் எஸ்.எம். முணசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன ஆகியோர் இம்மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இம்மனு நேற்று முன்தினம் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான சோபித்த ராஜகருணா மற்றும் தம்மிக கனேபொல ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் ஆராயப்பட்டது.

இதன்போது மனுதாரரான வைத்தியர் ஷாபி சிஹாப்தீனுக்காக சிரேஷ்ட சட்டத்தரணி புலஸ்தி ஹேவமான்ன ஆஜராகியிருந்தார். பிரதிவாதிகள் தரப்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் சுமதி தர்மவர்தன ஆஜரானார்.

அதன்படி, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் சுமதி தர்மவர்தன, 'இம்மனு தொடர்பிலான ஆவணங்கள் எனக்கு கடந்த 9 ஆம் திகதியே கிடைத்தது.

06

# கோப் குழுவின் தலைவராக பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடருக்கான அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

பாராளுமன்ற வளாகத்தில் கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் அமைச்சர் கலாநிதி சரத் வீரசேகர பேராசிரியர் சரித ஹேரத்தின் பெயரை முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த இதனை வழிமொழிந்தார். பேராசிரியர் சரித ஹேரத் ஒன்பதாவது பாராளுமன்றத்தின்

06



**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் தை மாதம் 30ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 10

**குறள் தரும் சிந்தனை**



நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்

*நன்மை எது, தீமை எது என ஆராய்ந்து அறிந்த, நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.*

# எரிபொருளுக்கான மாற்றுவழிகளில் கவனம் செலுத்தப்படுவது அவசியம்

உலகில் புதைபடிம எரிபொருள் வளம் நிரந்தரமானதல்ல. அது படிப்படியாக குறைந்து கொண்டு வருகின்றது. புவியின் கீழுள்ள அந்த எரிபொருள் வளம் இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு தாக்குப் பிடிப்பது கூட சந்தேகம்தான் என்கின்றனர் விஞ்ஞானிகள். அதன் பின்னர் உலகம் மாற்றுவழியொன்றுக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

திண்ம நிலையிலுள்ள நிலக்கரி மற்றும் திரவ நிலை எரிபொருள் போன்றவையெல்லாம் குறிப்பிட்ட தொரு கொள்ளளவிலேயே பூமிக்கு உள்ளே காணப்படுகின்றன. மனிதன் தனது தேவைக்காக அவற்றை வெளியே எடுத்துக் கொண்டே இருக்கின்றான். அவை அள்ள அள்ள குறைந்து விடாமல் இருக்கப் போவதில்லை. எரிபொருள் வளம் படிப்படியாக குறைந்து கொண்டுதான் செல்கின்றது.

எதிர்காலத்தில் அந்த எரிபொருள் வளம் முற்றாகவே இல்லாமல் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் உலகின் சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப நவீன யுகத்துக்கான தேவைகளும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. எரிபொருளும் மின்சாரமும் மக்களுக்கு அதிகம் தேவைப்படுகின்றன. எனவே புவியின் உள்ளேயுள்ள எரிபொருள் மிக அதிகமாகவே அகழ்ந்தெடுக்கப்படுகின்றது. காலப்போக்கில் எரிபொருள் வளம் பற்றாக்குறையாகிப் போய் விடக் கூடும்.

எதிர்கால சூழ்நிலைக்கு மனிதன் இப்போதே தயாராக வேண்டுமென்பதுதான் விஞ்ஞானிகளின் அறிவுரையாகும். அதாவது எரிபொருளுக்குப் பதிலாக மாற்றுவழியொன்றைத் தேட வேண்டியது அவசியமென்பதுதான் அக்கருத்தாகும். புதுப்பிக்கத்தக்க சக்திகள் மற்றும் மாற்று எரிபொருள் கண்டுபிடிப்புகள் பற்றி அறிவியல் உலகம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டுமென அவர்கள் கூறுகின்றனர். இந்த எண்ணக்கருவானது சமீப காலமாக இலங்கையிலும் பரவலாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இறக்குமதி செய்யப்படுகின்ற எரிபொருளில் மாத்திரம் நாம் முற்றுமுழுதாக தங்கியிருக்கக் கூடாது. மின்சார உற்பத்திக்கும் ஏனைய தேவைகளுக்கும் மாற்றுவழிகளை சிறிதளவேனும் நாட வேண்டியது அவசியம் என்பதுதான் அந்த ஆலோசனையாக உள்ளது. ஏனெனில் எரிபொருள் இறக்குமதிக்காக அதிக நிதியை செலவு செய்ய வேண்டியுள்ளது. வாகனப் போக்குவரத்துக்காக மாத்திரமன்றி, மின்சார உற்பத்திக்காகவும் எரிபொருளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. மின்சார உற்பத்திக்காக எரிபொருளைப் பயன்படுத்துவதென்பது அதிக செலவினம் மிகுந்ததாகும்.

அன்றைய காலத்தில் நீர்மின்சாரத்தினால் நாட்டின் மின்சாரத் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. நாட்டின் நீர்த்தேக்கங்களில் நீர்ப்பற்றாக்குறை நிலவியதில்லை. சனத்தொகைப் பெருக்கம் குறைவானதாகவே இருந்தது. நீர்த்தேக்கங்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் நாட்டின் தேவைக்குப் போதுமானதாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை அவ்வாறானதல்ல. நாட்டின் சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஏற்ப மின்சாரத் தேவையும் அதிகரித்து விட்டது. நீர்த்தேக்கங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம் எமது நாட்டின் அதிகரித்த மின்சாரத் தேவைக்குப் போதுமானதாக இல்லை.

வேறு வழிகள் மூலமும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் அதிகரித்ததன் காரணமாக எரிபொருள் மூலமான மின்னுற்பத்தி மற்றும் நிலக்கரி மூலமான மின்னுற்பத்தி வழிகளை நாட வேண்டியிருந்தது. இவற்றின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் அதிக செலவினமும், சூழல் பாதிப்பும் உள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது. எரிபொருள் தகனம் காரணமாக வளிமாசடைதல் அதிகரித்துக் கொண்டு செல்வதாக சூழலியல் நிபுணர்கள் அடிக்கடி எச்சரிக்கை செய்தபடி வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது.

இதன் காரணமாகவே எரிபொருள் வாகனங்களுக்குப் பதிலாக மின்சாரத்தில் இயங்கும் கார்களை நாட்டில் அதிகளவில் பயன்படுத்த வேண்டுமென்ற யோசனை அரசாங்கத் தரப்பினர் பலரால் முன்வைக்கப்பட்டு வருகின்றது. எரிபொருள் விரயம் என்பது ஒருபுறமிருக்க, சூழல் மாசடைவதும் தவிர்க்கப்படுமென்பது அவர்களின் அறிவுரையாகும். அதேசமயம் எரிபொருள் இறக்குமதிக்காக அதிக நிதியை செலவிட வேண்டுமென்ற அவசியமும் குறைகின்றது.

இலங்கையில் மின்சார உற்பத்திக்காக குறைந்தளவிலான மாற்றுவழிகளே தற்போது கையாளப்படுகின்றன. ஆனாலும் அவை நாட்டின் மின்தேவையை ஈடு செய்வதற்கு குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பை வழங்கவில்லை. காற்றாலை மூலமான மின்னுற்பத்தி நாட்டின் சில பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. சூரியப்படல் ஊடான மின்னுற்பத்தியும் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது. இவையெல்லாம் குறைந்தளவிலான மின்னுற்பத்திகளாகும்.

ஆனால் இவ்வாறான மின்னுற்பத்திகளை அதிகரிக்கும் பட்சத்தில் நாட்டின் மொத்த மின்சாரத் தேவையில் ஓரளவேனும் பங்களிப்புச் செய்யக் கூடியதாக இருக்கும். வீட்டின் மின்சாரத் தேவைக்காக சூரியப்படல்களைப் பொருத்துவது வெற்றியளிக்குமெனக் கூறப்படுகின்றது. இவ்விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும். அதே போன்று மின்சாரக் கார்களின் பாவனையை அதிகரிக்கும் திட்டங்களும் நாட்டில் அவசியம். எரிபொருளின் நெருக்கடி கருதி இவ்வாறான மாற்றுவழிகள் தவிர்க்க முடியாதவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# நடுத்தர வருமானமுள்ள குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்படும் 5000 வீடமைப்புத் திட்டம்

வீடற்ற நடுத்தர வருமான குடும்பங்களுக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் நிர்மாணிக்கப்படும் 5,000 வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மாலபேயில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 256 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நடுத்தர வருமானக் குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்படும் இந்த தொடர் மாடி குடியிருப்புக்கள் மாலபே புதிய புபுது மைதானத்திற்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

நடுத்தர வருமானக் குடும்பங்களுக்காக, மேலதிகமாக எவ்வித வருமானமுமற்ற வீடற்றோர் போன்றவர்களைக் கருத்தில் கொண்டு பிரதமரின் ஆலோசனையின் பேரில் பல்வேறு வகைப்படுத்தப்பட்ட வீடமைப்பு வேலைத்திட்டங்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் நாடு முழுவதும் பரந்த அளவிலான செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தின் கீழ் இந்த 5,000 அடுக்குமாடி குடியிருப்புகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய, 20 மாடிகளைக் கொண்ட இந்த அடுக்குமாடி குடியிருப்பின் நிர்மாணப் பணிகள் 2021 ஜனவரி 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், இதன் நிர்மாணப் பணிகள் விரைவில் நிறைவடையும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி, திண்மக்கழிவு அகற்றல் மற்றும் பொது சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

'கிரென்ஸ்டோ அபார்ட்மெண்ட்'' என்றழைக்கப்படும் இந்த வீடமைப்பு குடியிருப்பு வளாகம், தொழில் புரிவோர் மற்றும் புதிய வேலைவாய்ப்புகளைத் தேடும் நடுத்தர வர்க்கத்தினருக்கான வீட்டுத் திட்டமாகும்.

இந்த அடுக்குமாடி குடியிருப்பின் தனித்துவம் என்னவெனில், அதிக மக்கள் செறிந்து வாழும் பகுதிக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் தனிப்பட்ட சுதந்திரத்தைப் பாதுகாத்து, வீட்டு உரிமையாளர்கள் வசதியாக வாழ்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் வகையில் நிர்மாணிக்கப்படுவதாகும்.

இந்த 256 வீடுகள் தலா 128 வீடுகள் கொண்ட இரண்டு அலகுகளைக் கொண்டுள்ளன. இரண்டு அலகுகளும் 'யு வகை' வீடுகள் மற்றும் 'டீ வகை' வீடுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.' யு வகை' வீடுகள் 700 சதுர அடிகளும் மற்றும் 'டீ வகை' வீடுகள் 900 சதுர அடிகளும் கொண்டுள்ளதாகும்.

700 சதுர அடி கொண்ட 'யு வகை' வீடுகள் 2 படுக்கையறைகள், வரவேற்பறை , 2 குளியலறைகள் (பொது மற்றும் வேலையாளர்) சாப்பாட்டு அறை, சமையலறை மற்றும் தனி களஞ்சிய அறை ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

900 சதுர அடிகள் 'டீ வகை' வீடுகளில் 3 படுக்கையறைகள், வரவேற்பறை, 3 குளியலறைகள் (பிரதான, பொது மற்றும் வேலையாளர்) சாப்பாட்டு அறை, சமையலறை மற்றும் தனியான களஞ்சிய அறையும் உள்ளன.

இந்தக் குடியிருப்புகளை வாங்குவதற்கு மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றால் கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. இது ஒரு மாதத்திற்கு குறைந்தபட்சம் 6.25 வீத வட்டி வீதத்திற்கு உட்பட்டது. 25 ஆண்டுகளுக்கு மாதாந்த தவணை முறையில் கடனைத் திருப்பிச் செலுத்தும் வசதியும் இந்த வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.



## பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் மாலபேயில் நிர்மாணிக்கப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கான பணிகள் துரிதம்



## அரச வங்கிகளில் 6.25 வீத வட்டியில் கடன் வசதி

வீடு வாங்குபவர்களுக்கு அதிக நிவாரணம் அளிக்கும் வகையில் அரசு வழிகாட்டுதலின்படி இந்த வீட்டுக்கடன் திட்டத்தை அரச வங்கிகள் செயல்படுத்தி வருகின்றன. அடுக்குமாடி குடியிருப்பின் தரை தளம், முதல் தளம், இரண்டாவது தளம் மற்றும் மூன்றாவது தளம் ஆகியன வாகனங்களை நிறுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த வீடமைப்புத் தொகுதிக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 8293.9 சதுர மீட்டர் ஆகும். அந்த இடத்தில் 2812.5 சதுர மீட்டர் பரப்பளவு வீடமைப்பு கட்டடங்கள் கட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மலிவு விலையில் உள்ள குடியிருப்பு வளாகம் பல பொதுவான வசதிகளையும் கொண்டுள்ளது. அதன்படி பின்வரும் வசதிகளைக் கொண்டுள்ளது.

இதில் அடுக்குமாடி குடியிருப்புக்கான பொது வாகன நிறுத்துமிடம், உடற்பயிற்சி மையம், ஒரு சிறிய பல்பொருள் விற்பனை நிலையம், தீயணைப்பு பிரிவு, வீடுகளுக்கு தனித்தனி நீர் மற்றும் மின்சார மீட்டர்வசதி, அனைத்து வீடுகளுக்கும் பொதுநீர் வழங்கல் அமைப்பு, பிரதான எரிவாயு விநியோக அமைப்பு, கழிவுநீர் அகற்றும் வசதி ஆகியவை உள்ளடங்கும்.

மேலும் மின்துண்டிப்பு ஏற்டும் அவசர காலங்களில்உபயோகிக்கத்தக்கதான ஜெனரேட்டர்கள் மற்றும் சோலா விளக்குகள், மின்சார வாகனம் சார்ஜ் செய்யும் வசதிகள், 24 மணி நேர உள்பாதுகாப்பு, மழைநீர் வடிகால், அதிவேக லிஃப்ட், பொதுவடிகால் அமைப்புகள் மற்றும் வடிகால் சுத்தம் செய்யும் வசதிகள் ஆகியவை இதில் அடங்கும்.

அனைத்து வீடுகளிலும் உயர்தர, அதிநவீன குளியலறை சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டுதலுடன் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நகர அபிவிருத்தி, திண்மக்கழிவுநீர் அகற்றல் மற்றும் பொது சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவா, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறினிமால் பெரேரா, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் ஓய்வு பெற்ற மேஜனர் ஜெனரல் உதய நாணயக்கார, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் பிரசாத் ரணவீர ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் இந்த வீடமைப்புத் திட்டம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டது.

**டப்ளியூ.கே. பிரசாத் மஞ்சு**
*(நகர அபவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)*

# ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக்குப் பின்னர் தோட்டத் தொழிலாளருக்கு அதிக பாதிப்புகள்!

பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் பெருந்தோட்ட பொருளாதாரம் அடிமை முறை மற்றும் பலவந்த உழைப்பு என்பவற்றில் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. காலப்போக்கில் இந்த அடிமை முறையில் தளர்வு ஏற்பட்டது. எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தொழில் சட்டங்கள் ஓரளவு பாதுகாக்கப்பட்டன.

தொழில் சங்கங்கள் இச்சட்டங்களை அடிப்படையாக வைத்து தொழிலாளர்களின் நாளாந்த பிரச்சினைகளை ஓரளவிற்கு தீர்த்து வைத்தன. கூட்டு ஒப்பந்தம் 2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து வந்த ஒரு விடயமாகும். ஆனால் 2003 ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தம் பெருந்தோட்டத்திற்கே உரிய நடைமுறை சார்ந்த பல விடயங்களை உள்ளடக்கியுள்ள ஒரு ஒப்பந்தம் ஆகும்.

2003 ஆம் ஆண்டின் பின்னர் கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தங்கள் சம்பள உயர்வை மட்டுமே கருத்தில் கொண்டாலும், 2003 இல் சேர்க்கப்பட்ட பல விடயங்கள் தொடர்ந்தும் அமுலில் கொண்டு வரப்பட்டன.

இன்று 1000 ரூபா நாள் சம்பளம் என்பது மிகவும் குறைந்த சம்பளமாகும். இந்த 1000 ரூபா சம்பள உயர்வு கூட்டு ஒப்பந்தத்திற்கூடாக மேற்கொள்ளப்படாது, வேறாக பிரித்தெடுக்கப்பட்டு சம்பள நிர்ணய சபைக்கூடாக செய்யப்பட்டது. இதனை காரணம் காட்டி உயர்த்தப்பட்ட 1000 ரூபா சம்பளத்தை எமது தொழிலாளர்களுக்கு வழங்காதிருக்க கம்பனிகள் தங்களது காரயங்களை காட்டத் தொடங்கி விட்டன.

எடுக்கப்படும் கொழுந்தின் அளவு கூட்டு ஒப்பந்தப்படி அந்தந்தத் தோட்டங்களில் உள்ள தொழிற்சங்க தோட்ட கமிட்டி தலைவர்களுடன் கலந்துரையாடியே அதிகரிக்கப்பட முடியும். ஆனால் இன்று கம்பனிகள் தாம் நினைத்த அளவினை அதாவது தொழிலாளர்கள் எடுக்க முடியாத அளவினை நிர்ணயித்து அதற்கு குறைவான அளவு கொழுந்து, இறப்பர் பால் எடுக்கும் பட்சத்தில் □ பேர் போடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தொழிலாளர் சம்பள உயர்விற்கு முன்னர் எடுத்த சம்பள அளவினை விட தற்போது குறைந்த சம்பளத்தையே வருமானமாக பெருகின்றார்கள்.

அது மட்டுமல்ல, தோட்டங்களில் தொழிலாளர்களில் நிரந்தர தொழிலை இல்லாமல் செய்ய முறைசாரா முறையினை அறிமுகப்படுத்தி வருகின்றனர். தோட்டம் துப்புரவு செய்தல், அதிகமான தோட்டங்களில் இன்று கைக்காசுக்கு வழங்கப்படுகின்றது. இதுமட்டுமல்ல சில தோட்டங்களில் கொழுந்து எடுப்பது கூட துண்டு காணிகள் பிரித்து கொடுத்து எடுக்கப்படுகின்றது.

இதன் மூலம் தொழிலாளர்கள் இவ்வளவு காலமாக அனுபவித்து வந்த சகல தொழில் உரிமைகளையும் இழக்கின்றனர். குறிப்பாக EPF, ETF, பிரசவ சகாயநிதி, நட்டஈடுகள் மற்றும் சேவாகால பணம் போன்ற பல்வேறு தொழில் உரிமைகளும் நீக்கப்படுகின்றன.

இன்று தோட்டங்கள் கம்பனிகள் வைத்த சட்டத்திற்கே இயங்குகின்றன. யார் பெருந்தோட்டத்தை ஆட்சி செய்கின்றார்கள் எனப் புரியவில்லை. தேயிலை, இறப்பர் கம்பனிகள் 53 வருட கால குத்தகைக்கு தோட்ட முகாமைத்துவத்தை வாங்கின. அதற்கு அர்த்தம் தொழிலாளர்கள் அவர்களின் சொத்து என்பதல்ல, தொழிலாளர்களை அவர்கள் நினைத்தது போல அடிமைகளாக நடத்துவதற்குமல்ல.

அரசின் அனுமதியுடனே இக்கம்பனிகள் பெருந்தோட்டத் துறைக்குள் வந்தன. இக்கம்பனிகளின் கடமை இந்நாட்டில் உள்ள சகல தொழில் உரிமைகளையும் பின்பற்றுவது. அதனை இக்கம்பனிகள் செய்யத் தவறும் பட்சத்தில் அரசு தலையிட்டு தொழிலாளர்களுக்கெதிரான தொழில் உரிமை மீறல்களை தடுக்க வேண்டும். தற்போது இவ்வளவு அராஜகம் நடக்கும் போது எதுவும் தெரியாதது போல பாராமுகமாக இருப்பதும் மற்றுமொரு அராஜகமாகும்.

பெருந்தோட்டத் துறை தொழிலாளர்கள் தங்களுக்கு எந்த ஒரு உரிமையும் இல்லாது இந்நாட்டில் வாழ்கின்றார்கள். வீட்டு உரிமை, உடல்நல பாதுகாப்பு உரிமை என்று பல்வேறு உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் இன்று தொழில் உரிமையும் முற்றாக மறுக்கப்படுகின்றது.

கூட்டு ஒப்பந்தம் மட்டும் இவர்களின் பிரச்சினைக்கு தீர்வாகுமா? இல்லை. கூட்டு ஒப்பந்தம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சகல உரிமை மீறல்களுக்கும் தீர்வாகாது. தொழில் சார்ந்த பிரச்சினைகளுக்கு ஓரளவு மட்டுமே தீர்வு அதில் உள்ளது. பல இடைவெளிகள் கூட்டு ஒப்பந்தத்திலும் உள்ளன. அவை நிரப்பப்பட வேண்டும். இல்லையெனில் பெருந்தோட்டத் துறைக்கான ஒரு விசேட தொழில் சட்டம் உடனடியாக கொண்டு வரப்பட வேண்டும்.

பெருந்தோட்டத் துறை சார்ந்த தொழில் சட்டம் உருவாகும் இடங்கள் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் சகல பொறிமுறைக்குள்ளும் பெருந்தோட்ட தொழிலாளர் சிந்தனை உடைய பெண்கள் உள்வாங்கப்பட வேண்டும். ஒட்டுமொத்தமாக பெருந்தோட்டங்களில் வேலை செய்து வரும் அனைத்து தொழிலாளர்கள் தொடர்பாகவும் சட்டத்தை வலுவூட்டி அவர்களுக்கு சட்டத்தின் மூலமான சமத்துவமான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.



**பெருந்தோட்டத் துறை தொழிலாளர்கள் தங்களுக்கு எந்த ஒரு உரிமையும் இல்லாது இந்நாட்டில் வாழ்கின்றார்கள். வீட்டு உரிமை, உடல்நல பாதுகாப்பு உரிமை என்று பல்வேறு உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் இன்று தொழில் உரிமையும் முற்றாக மறுக்கப்படுகின்றது.**

**மேனகா கந்தசாமி**
*ஆலோசகர், செங்கொடி சங்கம்*

# முஸ்லிம் உலகை பெருமைப்படுத்தும் அறிவியல் முன்னேற்றத்தில் ஈரான்



**நாடுகடத்தப்பட்ட நிலையில் இமாம் ருஹுல்லா கொமேனி, பெப்ரவரி 1, 1979 இல், வெற்றிகரமான இஸ்லாமியப் புரட்சிக்கு வழிகாட்ட ஈரானுக்குத் திரும்பி, சமகால வரலாற்றில் உலகின் முதல் இஸ்லாமியக் குடியரசை ஸ்தாபித்தார். பொருளாதாரத் தடைகள் மற்றும் நாசவேலைகள் மூலம் ஈரானின் வளர்ச்சியைத் தடுப்பதன் மூலம், பிராந்தியத்தில் மேற்கத்திய கைப்பாவை (அரபு) ஆட்சிகளை பலப்படுத்துவதன் மூலம், இஸ்லாமிய புரட்சிகர சித்தாந்தம் மற்றும் நடைமுறை மற்ற நாடுகளுக்கு பரவுவதைத் தடுக்க முடியும் என்று ஏகாதிபத்திய மூலோபாயவாதிகள் நம்பினர்.**

ஈரானின் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பத்தை நிரந்தரமாக முடக்க முடியுமாயின், இஸ்லாமிய குடியரசு மற்ற மக்களுக்கு ஒரு தோல்வியடைந்த முன்மாதிரியாக அமையும் அதேநேரம் ஈரானியர்களும் விரைவில் தங்கள் புரட்சிகர சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்வார்கள் என்றும் ஏகாதிபத்தியவாதிகள் நம்பினர்.

இஸ்லாமிய புரட்சிகர சித்தாந்தமானது சர்வதேச மாதிரியாக வியாபிக்கும் வேகத்தை கட்டுப்படுத்துவதில் திட்டத்தின் மூலகர்த்தாக்கள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வெற்றி பெற்றனர் என்பது உண்மையே என்றாலும் அவர்கள் வன்முறையின் மூலம் அதைச் செய்தார்கள். அதற்காக அவர்கள் பயங்கரவாத வழிமுறையையே கையாண்டார்கள்.

ஈரான் பொருளாதார ரீதியிலும் தொழில்நுட்ப ரீதியிலும் தொடர்ந்து முன்னேறி வருவதன் மூலம் அழிவை எதிர்வுகூறி, பொருளாதாரத் தடைகள் விதித்தவர்களை திகைக்க வைத்துள்ளது. வரலாற்றில் மிகவும் சக்திவாய்ந்த ஏகாதிபத்திய சாம்ராஜ்யத்தின் தீவிர எதிர்ப்பையும் மீறி, மனித வளர்ச்சிக் குறியீட்டில் ஈரான் வேகமாக உயர்ந்து வருகிறது. 1979ஆம் ஆண்டு முதல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஈரானின் பாரிய முன்னேற்றம் மேற்கத்திய நோக்கர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது, அவர்களில் பலர் இஸ்லாமிய அடிப்படையிலான சமூகம் அந்தகாரத்தில் மூழ்கிவிடும் என்று கற்பனை செய்தனர், பாவம் அவர்கள்.

உண்மையில், ஈரானின் அரசியல் ஸ்தாபனம், சன்மார்க்க பள்ளிகளின் பயிற்சியுடன் வேகமாக முன்னேறுகிறது. இது உலகில் உள்ள உயர்ந்த கல்வி பெற்ற குழுவாக கூட இருக்கலாம். உண்மையில், செம்மொழிக் கல்வியை மதிக்கும் மக்களால் ஆளப்படும் ஒரே நாடு இஸ்லாமிய ஈரான் மட்டுமே.

எனவே, ஈரானின் பல்கலைக்கழக அமைப்பு 1979 முதல் செழித்தோங்கியது, கல்வி நிலைகள் (குறிப்பாக பெண்கள் மத்தியில்) பாரிய வளர்ச்சி கண்டுள்ளது, மேலும் ஈரானிய விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்கள் தங்கள் நாடு பொருளாதார ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளனர். இவை கடுமையான பொருளாதார தடைகளின் மத்தியில் நிகழ்ந்துள்ளது என்பது வியக்க வைக்கிறது.

வளரும் நாடுகளில், மனித வளர்ச்சிக் குறியீட்டின் (HDI) அடிப்படையில் ஈரான் முதலிடத்தை நெருங்கி உள்ளது. ஐக்கிய நாடுகளின் மனித மேம்பாட்டுத் திட்டத்தின்படி, 1990 முதல் மூன்று தசாப்தங்களில் ஈரானின் HDI ஏறக்குறைய 40% வளர்ந்தது இது எந்த நாட்டிலும் இல்லாத சிறந்த பதிவுகளில் ஒன்றாகும். மேலும் மனிதாபிமானமற்ற தடைகள் விதித்த சக்திகளுக்கு கொடுக்கப்பட்ட ஓர் அதிர்ச்சி தரும் அதிசயம் என்று கூட கூறலாம்.

அந்தக் காலகட்டத்தில், மனித ஆயுட்காலம் 12 ஆண்டுகளுக்கும் மேலாகவும், பள்ளிப்படிப்பின் ஆண்டுகள் ஆறு ஆண்டுகளாகவும், தனிநபர் வருமானம் 60% ஆகவும் உயர்ந்தது. ஈரானிய மக்களைக் கடுமையான வறுமை மற்றும் பின்தங்கிய நிலைக்குக் தள்ளி,அவர்களின் மன உறுதியை நசுக்கும் மேற்கத்திய முயற்சி முற்றிலும் தோல்வியடைந்துள்ளது.

ஈரானிய மருத்துவம் ஆயுட்காலம் கூர்மையான உயர்வுக்கு பங்களித்துள்ளது. 1990 களில் ஈரான் தனது சுகாதாரப் பாதுகாப்பு முறையைப் புரட்சிகரமாக மாற்றி கிராமப்புற மக்களில் 90% க்கும் அதிகமான மக்களுக்கு சுகாதார சேவையை வழங்குவதில் வெற்றி பெற்றது.

மேற்கத்திய பொருளாதாரத் தடைகள், மரணம் மற்றும் துன்பங்களுக்கு காரணமாக இருப்பதால், ஈரான் தனது சொந்த மருத்துவப் பொருட்களைத் தயாரிக்கக் கற்றுக் கொள்ளும் நிர்பந்தம். இது வருடத்திற்கு $750 மில்லியனைச் சேமிப்பது மட்டுமல்லாமல், உலக சந்தையில் ஈரான் தன்னை ஒரு முக்கிய போட்டியாளராக மாற்றியது. இன்று, ஈரான் அதன் சொந்த மருந்துப்பொருட்களில் 97% க்கும் அதிகமானவற்றை உற்பத்தி செய்கிறது மற்றும் மருத்துவ உயிரி தொழில்நுட்பத்தில் முன்னணியில் உள்ளது.

பல துறைகளில், ஈரானிய அறிவியல் உலக அளவில் போட்டி நிலைகளை எட்டியுள்ளது. விண்வெளி மற்றும் விமான போக்குவரத்து, வேதியியல், கணினி அறிவியல், உயிரி தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ அறிவியல், இயற்பியல் மற்றும் பொருட்கள் அறிவியல், அணு அறிவியல் மற்றும் நனோ தொழில்நுட்பம் ஆகியவை எடுத்துக்காட்டுகளாகும். ஆச்சரியப்படும் விதமாக, கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ள நிலையிலும் கூட அமெரிக்க தேசிய அறிவியல் நிறுவனம், சமீபத்திய ஆண்டுகளில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் உலகளவில் ஈரானுக்கு முதலிடம் கொடுத்துள்ளது.

'தி டைம்ஸ்' உயர் கல்வி சுட்டின்படி, ஈரானின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வெளியீடுகள் 1970 முதல் 2008 வரை 340,000 சதவீதம் வளர்ச்சியடைந்து, உலகின் மொத்த வெளியீட்டில் 1% க்கும் அதிகமாக உள்ளது, இது சீனா, இந்தியா மற்றும் பிரேசில் தவிர அனைத்து வளரும் நாடுகளை விட ஈரானை மிகவும் முன்னிலைப்படுத்தியது.

தொழில்நுட்ப உற்பத்தியில் ஈரானின் வளர்ச்சியானது பல்வேறு அளவீடுகளின்படி (உலக சராசரியை விட மிக அதிகமாக) ஆண்டுக்கு 10% முதல் 25% வரை ஈர்க்கக்கூடிய விகிதத்தில் தொடர்கிறது, அதன் அணுசக்தித் துறை உலக வளர்ச்சியான 34%.வீதத்துடன் ஒப்பிடும் போது அதிர்ச்சியூட்டும் வகையில் 8400% முன்னேறியுள்ளது.

ஈரானின் மிகப் பெரிய முன்னேற்றங்கள் சில ரொக்கெட் தொழில்நுட்பம் மற்றும் விண்வெளி அறிவியல் வியக்கத்தக்க அளவில் வந்துள்ளன. ஈரானிய விண்வெளி ஏஜென்சி ISA யின் அர்ப்பணிப்பு காரணமாக, ஈரான் இஸ்லாமிய குடியரசு 2009 இல் உலகின் 11 செயற்கைக்கோள் சுற்றுப்பாதைஏவுதல் திறன் கொண்ட நாடுகளில் ஒன்றாக மாறியது. இன்று, விரிவுபடுத்தக் கூடிய செயற்கைக்கோள் வாகனம் (SLV) ஸுல்ஜானா 200 கிலோ எடையுள்ள வாகனம் 500 கிமீ சுற்றுப்பாதையில் கொண்டு செல்கிறது, அதே நேரத்தில் அதன் பின்னால் வரவிருக்கும் Souroush SLV விரைவில் 815 தொன் எடையுள்ள வாகனம் விண்வெளிக்கு எடுத்துச் செல்லும்.

ஈரானிய இராணுவம், ஒப்பீட்டளவில் குறைந்த நிதியில் இயங்கிய போதிலும், எதிரிகள் ஈரான் மீது ஒரு பெரிய தாக்குதலை நடத்தும் முடிவில்லா அச்சுறுத்தல்களை தொடர்ந்து, இஸ்ரேலிய இராணுவ தளங்கள், நகரங்கள் மற்றும்/ அமெரிக்க கப்பல்கள் மற்றும் தளங்கள் மீது நினைத்துப் பார்க்க முடியாத அளவிலான சேதத்தை ஏற்படுத்தக் கூடிய தற்காப்பு ரொக்கெட்டுகளின் ஈர்க்கக் கூடிய வரிசையை சேகரிக்க முடிந்தது.

ஈரானிய விஞ்ஞானிகள் மற்றும் மூலோபாயவாதிகளின் அர்ப்பணிப்புமிக்க செயற்பாட்டின் காரணமாக, வல்லாதிக்க சக்திகள் இராணுவத்திற்காக செலவழித்த பணத்தில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே செலவு செய்து ஈரான் தற்காப்பு உயர்நிலையை அடைந்துள்ளது.

மேற்கூறிய துறைகளில் மற்றும் பலவற்றில் இஸ்லாமியக் குடியரசின் முன்னேற்றம், மதச்சார்பின்மையை அறிவுடனும், மதத்தை அறியாமையுடனும் சமன்படுத்தும் இஸ்லாமிய வெறுப்பு பிரசாரத்தை பொய்யாக்கி உள்ளது.

1979 இல் இஸ்லாமியக் குடியரசின் பிறப்பிலிருந்து வியக்கத்தக்க வெற்றிகளை திரும்பிப் பார்க்கும் போது, எதிர்கால வரலாற்றாசிரியர்கள் ஒரு புதிய தத்துவக் கண்ணோட்டத்தில் அணுகினால், முழு விவரங்கள் அறியப்படுவதை வேண்டுமென்றே தடுபோராக அல்லாமல், மதத்தை ஒரு ஆதாரமாகவும் அறிவின் தூண்டுதலாகவும் அங்கீகரிக்கலாம்.

கெவின் பர்ரட்

---

## சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்'

# மலையகத்தின் மாபெரும் படைப்பாளியின் கனவை நனவாக்கிய எச்.எச்.விக்ரமசிங்க

**குறுந்தொகையில் தோய்ந்து, வசீகரமான புனைபெயரைத் தனக்கு சூடி மகிழ்ந்தவர் நல்லையா என்னும் சாரல்நாடன் (1944 2014). மலையைக இலக்கியத்திற்கான வரலாற்றை உருவாக்குவதற்கான ஆதாரங்களைத் தேடும் முயற்சியில் அயராது உழைத்த பெருமகன் சாரல்நாடன்.**

மலையக வாய்மொழிப்பாடலிலிருந்து மலையகத் தமிழர் தொடர்பான அரசாங்க அறிக்கைகள், ஆங்கிலேயர் எழுதி வைத்துவிட்டுச் சென்ற நூல்கள் என்று தேடித்தேடி வாசித்த மனிதர். மலையகப் பெரியார்களை நெஞ்சில் நிறுத்தி நேசித்தவர். மலையக மக்களுக்கு வாழ்வு சமைக்கப் போராடிய, எழுதிய, பேசிய அனைத்து உள்ளங்களையும் ஆரத் தழுவிக் கொண்டவர். மலையகம் குறித்துக் கர்வம் கொண்டவர். மலையக மைந்தரின் உழைப்பு விழலுக்கு இறைத்த நீராய் , அவர்களை வஞ்சித்தவர்களையே வாழவைத்ததை எண்ணி எண்ணி ஏங்கியவர்.

சாரல்நாடன் எழுதி வெளியிட்ட பதினொரு நூல்களும் மலையகத்தையே உயிராய் நேசித்த ஒரு எழுத்தாளனின் நெஞ்சக்கணப்பறையின் தகிப்பிலே கனன்றவை.

சி.வி.வேலுப்பிள்ள, கோ.நடேசையர், இர.சிவலிங்கம் என்று எமக்கு முதுசமாய்க் கிடைத்த சிந்தனையாளர்களின் புகழ்பாடித் திரிந்த எழுத்தாளன். சித்தி லெப்பை,சாம் ஜோனிலிருந்து ஜோசப் ஜேஸ்கொடி வரை 57 மலையக ஆளுமைகளின் விபரங்களைப் பதிவதற்காக பேரேடு திறந்த சரித்திரக்காரன். காய்தல் உவத்தலின்றி இவர்களின் வரலாற்றைப் பதிந்த பாங்கு பாராட்டுவதற்குரியது.

மலையைக மக்கள் பற்றிய இவரது நூல்கள் இவரின் சுயமான ஆய்வுத் தேடலில் எழுந்தவை. சிருஷ்டி எழுத்தாளராகவே அறிமுகமான சாரல்நாடன் சிறுகதை, குறுநாவல்கள் என்று விட்டும் தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருந்தவர். தொழில்,வழக்கு, போராட்டம் என்று ஒரு பதினைந்து ஆண்டு காலம் எழுத்துத் துறையில் மௌனமாயிருந்தவர். சி.வி.யின் நூலோடு சிலிர்த்துக் கொண்டு எழுந்தவர். இறுதிக்காலம் வரை எழுத்தை, ஆய்வை முழுமூச்சாகக் கொண்டு உழைத்தவர்.



சாரல்நாடன்

1962ஆம் ஆண்டில் 'காலஓட்டம்' என்ற சிறுகதையோடு ஆரம்பமான இவரின் இலக்கிய ஓட்டம் இறுதிவரை தொடர்ந்தது. மலையகத்தின் மூத்த எழுத்தாளர்களான என்.எஸ்.எம்.ராமையா, தெளிவத்தை ஜோசப் ஆகியோருடன் இணைந்து கூட்டாக மலையகக் குறுநாவல் படைத்ததில் சாரல்நாடனின் எழுத்தாளுமை மிளிர்ந்தது. சமரசம், நம்பியவருக்காக...., பிணந்தின்னும் சாத்திரங்கள் ஆகிய படைப்புகள் தேயிலை தயாரிக்கும் தொழில் நுணுக்கங்களில் சாரல்நாடனுக்கிருந்த தனித்துவமான நுண்ணறிவையும் அனுபவத்தையும் படம் போட்டுக் காட்டுகின்றன. இனவாதத்தின் நச்சுக் கரங்களுக்குள் மலையக மக்கள் படும் அவலம் சாரல்நாடனின் நெஞ்சில் எழுப்பும் ஆத்திரத்தை இப்படைப்புகள் எதிரொலிக்கின்றன.

ஆய்விலிருந்து தொற்றிய வேகத்தில், 1941 இல் புசல்லாவை ஸ்டெலன்பேக்(Stellenberg) தோட்டத்துரை போப் என்பவரை தோட்டத் தொழிலாளர்கள் கொலை செய்த உண்மைச் சம்பவத்தை ஆதாரமாக கொண்டு சாரல்நாடன் எழுதிய குறுநாவல் தான் 'வானம் சிவந்த நாட்கள்'. வீரகேசரி வாரமஞ்சரியில் இந்த நாவல் தொடராக வெளிவந்தது. பதினாறு அத்தியாயங்களில் எழுபது பக்கங்களில் இந் நாவல் விரிகிறது.



விக்ரமசிங்க

'சென்ற நூற்றாண்டின் இரண்டாம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியில் தேயிலைத்தோட்டம் ஒன்றில் இடம்பெற்ற உண்மைச் சம்பவப் பின்னணியில் நாவல் கொண்டு செல்லப்படுகிறது. இதில் வரும் சம்பவங்களும், கதாபாத்திரங்களும் உயிரோடு ஒருகாலத்தில் நடமாடியவர்கள்' என்று கூறுகிறார் சாரல்நாடன்.

போப் துரை கொலை வழக்கில் 'தூக்கு மேடையை முத்தமிட்டு அன்று தொழிலாளர் வர்க்கத்திற்கு எழுதினார்களே! அந்த ஐ.வேலாயுதன், ரா.வீராசாமி ஆகியோரின் உருக்கமான கடிதத்தின் இலட்சியம்தான் எமக்குத் தரும் பாடங்கள்' என்று கவிஞர் பி.ஆர்.பெரியசாமி தனது 'தோட்டத் தொழிலாளர் வீரப்போராட்டம்' (1957) என்ற நூலில் இந்தப் போராட்டத்தை முதலில் பதிவு செய்கிறார்.

'1933 ஆம் ஆண்டில் நடேசய்யரால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கப் போராட்டத்திலிருந்து,இன்றுவரை உள்ள பல போராட்டங்களில் பங்கெடுத்து உழைத்த அனுபவத்தைக் கொண்டு இந்தச் சிறுநூலை வெளியிடத் துணிந்தேன்' என்று அமரர் பி.ஆர்.பெரியசாமி கூறுவதிலிருந்து, போப் துரை கொலை வழக்கில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட நிகழ்வு அவர் நேரடியாகப் போராடிய தொழிற்சங்கப் போராட்டப்பாதையில் தரிசித்த நடப்புச் சம்பவமாகும். தூக்குத்தண்டனையை எதிர்நோக்கியிருந்த நிலையில் அவர்கள் இறுதியாக எழுதியிருந்த கடிதத்தையும் பி.ஆர். பெரியசாமி தனது முன்னுரையில் எடுத்துக்காட்டுகிறார். தனது போராட்ட நூலையும் அந்தப் போராளிகளுக்கே சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

'சாரல்நாடன் பிறப்பதற்குச் சரியாக மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஜோர்ஜ் போப் கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களின் கதையிது' என்று இந்த நூலின் ஒரு குறிப்பில் வருகிறது.

சாரல்நாடன் தனது நாவலின் முன்னுரையையும் எழுதி, அச்சில் வெளியிடத் தயாராக இருந்த நிலையில், அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ள முடியாத அபாக்கிய நிலையில் அவர் மரணித்த பின்பு, அவரின் எண்ணத்திற்கு செயல் வடிவம் தந்திருக்கிறார் எச்.எச்.விக்ரமசிங்க.

இன்றும் அன்று கண்ட அதே வேகத்தில், சிற்றெறும்பாய் செயற்பட்டு சாரல்நாடனின் 'வானம் சிவந்த நாட்கள்' என்ற நாவலை இம்மாத இறுதியில் நூலாக வெளிக்கொணரவிருக்கிறார். இந் நாவலை நூலாக்கிப் பார்ப்பதில் அமரர் சாரல்நாடனின் குடும்பத்தினர் காட்டிவரும் அக்கறையும் மதிக்கத்தக்கது.

மலைய இலக்கிய வரலாற்றை உருவாக்குவதில் இத்தகு நூலாக்க முயற்சிகள் பெரிதும் வேண்டப்படுவன.இந்த ஆவணப்படுத்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்த சாரல்நாடன் தானே முன்னின்று நூற்பதிப்பு முயற்சியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார் என்பது நினைவு கூரத்தக்கது.

இரத்தமும் சதையுமாக நடந்த ஒரு சரித்திரபூர்வமான உண்மை நிகழ்வினை நாவலாக்கி மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்ற சாரல்நாடனின் கனவை நனவாக்க எச்.எச்.விக்ரமசிங்க எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறுவதாக!

மு.நித்தியானந்தன்...

---

# சமூகப் பணிகள் மேற்கொள்வதற்கு பணம் மாத்திரமே அவசியமென்பது அர்த்தமல்ல!

**இலங்கையின் 74வது சுதந்திர தினத்தினை முன்னிட்டு வடக்கு, கிழக்கு ஒப்பனையாளர்கள் சங்கத்தின் அனுசரணையில் அக்கரைப்பற்று மக்கள் முற்போக்கு அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவர்களால் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு விபுலானந்தா சிறுவர் இல்ல மாணவர்களுக்கு இலவசமாக சிகையலங்காரம் மேற்கொள்ளப்பட்டது.**

வடக்கு, கிழக்கு ஒப்பனையாளர் அமைப்பின் அம்பாறை மாவட்ட செயற்பாட்டாளர் செல்வம் உதயகுமாரால் மேற்குறித்த நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளர் கைலாயபிள்ளையினால் மேற்குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்புற நடத்தப்பட்டமைக்காக நன்றி தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான சமூக நலனோம்பு நிகழ்வுகளை எதிர்காலத்தில் இன்னும் சிறப்பாக மேற்கொள்வதற்கு தன்னாலான உதவி ஒத்தாசைகளை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்

சமூகப் பணி என்பது எந்த வரையறைகளும் அற்றது. பணம் படைத்தவர்கள் மாத்திரம் செய்யக் கூடிய பணிகளல்ல, குணம் படைத்தவர்களும் செய்யக் கூடிய பணிகளும் சமூகப்பணிகளே.



**சுதந்திர தினத்தன்று வடக்கு, கிழக்கு ஒப்பனையாளர்கள் சங்கத்தின் அனுசரணையில் அக்கரைப்பற்று மக்கள் முற்போக்கு அபிவிருத்திச் சங்கத்தினர் முன்னெடுத்த பணி**

அந்த வகையில் வடக்கு, கிழக்கினை மையப்படுத்தி இயங்கி வரும் ஒப்பனையாளர்கள் 'உதவும் கரங்கள்' எனும் அமைப்பினூடாக பல்வேறு சமூக நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிறிய வருமானங்களை தொழில்கள் ஊடாக பெற்றுக் கொள்கின்ற போதிலும் சமூக நலப்பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவதனை காண்கின்ற போது இவ்வாறான செயற்பாடுகளை பொதுவெளிக்கு கொணர்ந்து ஊக்கப்படுத்துதல் மிக அவசியமென்பது தெரிகின்றது.

அண்மையில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு கோழி வளர்ப்பிற்கான ஆரம்ப ஏற்பாடுகள் இந்த அமைப்பினூடாக மேற்கொள்ளப்பட்டது விசேட அம்சமாகும். இலங்கை திருநாட்டின் 74வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பல அமைப்புகளும் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தன.

அந்த வகையில் வடக்கு கிழக்கு ஒப்பனையாளர்கள் உதவும் கரங்கள் அமைப்பினர் அக்கரைப்பற்று முற்போக்கு அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து தங்களுக்கே உரித்தான தொழில் முயற்சிகளின் ஊடாக சமூக நலனோம்புகை செயற்றிட்டத்தில் களம் கண்டனர். ஆலையடிவேம்பு விபுலானந்த சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளர் கைலாசபதியின் வேண்டுகோளுக்கு இணங்க சிறுவர் இல்ல மாணவர்களுக்கு இலவசமாக முடி திருத்தி அதனூடாக தங்களது ஆத்ம திருப்பதியை பெற்றுக் கொண்டனர்.

மேற்குறித்த நிகழ்வினை வடக்கு, கிழக்கு ஒப்பனையாளர்கள் உதவும் கரங்கள் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் செல்வம் உதயகுமார் நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. சமூக நலன் சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்ள கோடீஸ்வரர்களாக இருக்க வேண்டும் என்பதற்கான எந்த வரையறைகளும் இல்லை என்பதற்கு இவ்வாறானவர்களின் பணிகள் சிறந்த உதாரணங்களாகும்.

றிசாத் ஏ. காதர்...

## மேற்பார்வை குழுக்களை... (03ஆம் பக்கத் தொடர்)

நிலையியல் கட்டளைகள் முடக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலத்தில் இது தொடர்பில் நாம் முடிவு எடுப்போம்.

முன்னாள் அமைச்சரின் அனுதாப பிரேரணை நடைபெறுகிறது. தேவையில்லாத விடயங்களை பேசி காலத்தை வீணடிக்காது அவரின் அனுதாப பிரேரணையை விவாதிப்போமென்றார்.

எதிர்த்தரப்பு பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல, மீண்டும் அதே விடயத்தை கோரிய போது, மீண்டும் எழுந்து நின்ற ஆளும் தரப்பு பிரதம கொரடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, தற்பொழுது எமது அரசாங்கம் தான் உள்ளது. ஆட்சி மாறினால் அரசு கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்கும் .அதன்படி நிலையியல் கட்டளைகள் முடக்கப்பட்டுள்ளன. எனவே பின்னர் அது பற்றி முடிவு எடுப்போம் என்றார்.

இது தொடர்பில் எமது முடிவை பின்னர் அறிவிப்போம் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

## சம்பள நிலுவை, ... (03ஆம் பக்கத் தொடர்)

அவற்றை படித்து ஆராய சிறிது கால அவகாசம் தேவை. எனவே அதற்கான அவகாசத்தை தருமாறு கோருகிறேன் ' என தெரிவித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த ரிட் மனுவை எதிர்வரும் 17 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்தது.

குருணாகல் போதனா வைத்திய சாலையின் மகப்பேற்று பிரிவின் வைத்தியராக தான் சேவையாற்றியதாகவும், இதன்போது சட்ட விரோத கருத்தடை தொடர்பில் ஆதரமற்ற அடிப்படை குற்றச்சாட்டுக்களை முன் வைத்து தான் கட்டாய விடுமுறையில் அனுப்பட்டதாகவும் மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் தனக்கு கிடைக்க வேண்டிய சம்பள நிலுவை மற்றும் கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை எனவும் அவற்றை செலுத்த உடனடியாக பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறும் வைத்தியர் ஷாபி சிஹாப்தீன் இந்த மனுவூடாக கோரியுள்ளார்.

## கடற்றொழிலாளர்... (03ஆம் பக்கத் தொடர்)

வடமாகாணத்திற்கு உட்பட்ட நான்கு கடற்றொழில் சம்மேளனப் பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடியுள்ளோம்.

இந்த கலந்துரையாடலின் அடிப்படையிலே நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த புத்திஜீவிகள் எங்களுக்கு ஆதரவு தருமாறும் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்வதற்கு எங்களோடு இணைந்து செயற்பட வருமாறும் கோரியிருக்கின்றோம்.

அதனடிப்படையில் எதிர்காலத்தில் வடக்கு கடற்றொழிலாளர்கள் ஒற்றுமையாக ஒரே குடையின் கீழ் செயற்படுவதற்கு நான்கு மாவட்டங்களிலும் இருக்கின்ற கூட்டுறவுச் சமாசங்கள் ஒன்றிணைந்து செயற்படுவது தான் எங்களுடைய நோக்கமாக காணப்படுகின்றது.

கடற்றொழிலாளர்களிடையே பிளவினை ஏற்படுத்தாது எமது ஒற்றுமையை வலுப்படுத்தி நாம் ஒற்றுமையாக தீர்வினை நோக்கி நகர்வதற்கு அரசியல் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். கட்சி பேதமின்றி கடற்றொழிலாளர்களுக்குள்ள பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக ஒரே குடையின் கீழ் கையாள வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம்.

இலங்கை இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு 04 மாவட்டங்களைச் சேர்ந்த புத்திஜீவிகள் சிவில் சமூக பிரதிநிதிகள் எம்முடன் இணைந்து செயற்படுமாறு கோரிக்கை விடுக்கின்றோம். எதிர்காலத்தில் கடற்றொழிலாளர்கள் வீதிகளில் இறங்கிப் போராடாமல் இருப்பதற்கு நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து சிவில் சமூகங்கள் புத்திஜீவிகளின் ஒத்துழைப்பு கட்டாயம் அவசியம் என்றார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ஜோன்சன், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ராஜா குரூஸ், பூநகரி கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் பிரான்சிஸ், ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 10 இலட்சம் பேர் தடுப்பூசி... (03ஆம் பக்கத் தொடர்)

இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரையில் இலங்கையில் 59,42,255 பேர் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

அத்தோடு, நாட்டில் 1 கோடியே 60 இலட்சத்து 981 பேர் கொரோனா முதலாவது தடுப்பூசியையும் 1 கோடியே 40 இலட்சத்து 27,528 பேர் இரண்டாவது தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனது கொள்கைகளுக்கு... (03ஆம் பக்கத் தொடர்)

தன்னை விமர்சிப்பவர்களை தாக்க முயலவில்லை. யார் விமர்சித்தாலும் அதற்கு ஜனநாயக வரையறைகளுக்குள் அவற்றுக்கு முகம்கொடுக்க வேண்டும்.

ஊடக சுதந்திரம் தொடர்பில் பேசப்படுகிறது. சுதத் திலகசிறி மீதான கொலை அச்சுறுத்தல் தொடர்பில் கவனம் செலுத்துமாறு பிரதமரிடம் கோருகிறேன். அது மங்கள சமரவீரவுக்கு செய்யும் கௌரவமாகும். அவர் எமக்கன்றி உங்கள் தரப்பை ஆட்சிக்கு கொண்டுவர பாடுபட்டவர்.

புதிய லிபரல் கொள்கையை மங்கள நம்பினார். நான் சமூக ஜனநாயக மனிதாபிமான முறையை நம்பினேன். நாம் இருவரும் இது தொடர்பில் விவாதித்துள்ளோம். கொள்கைகள் தொடர்பில் கருத்து பகிர்ந்துள்ளோம். இருவரும் புதிய விடயங்களை அறிந்து கொண்டோம். எம்மிருவருக்குமிடையில் ஆரம்பத்தில் நல்ல நெருக்கம் இருக்கவில்லை. பின்னர் அவரின் நெருக்கம் தொடர்பில் உணர்ந்தேன்.

எனது அரசியலில் இரு சமயங்களில் அவரின் ஒத்துழைப்பு கிடைத்தது.

வீடமைப்பு அமைச்சராக இருக்கையில் அதிக நிதி வழங்கினார். ஜனாதிபதி வேட்பாளர் தெரிவின் போது என்னை நிறுத்துவதற்கு ஒத்துழைத்தார். இரண்டாவது பாரிய பிரசார கூட்டத்தை அவர் ஒழுங்கு செய்தார்.

ஜனநாயகத்துக்கு எப்பொழுதும் பங்காற்றினார். சர்வதேச மட்டத்தில் எமது நாட்டுக்கு சாதகமான தொடர்புகளை பேணினார்.

சர்வதேசத்தை வெல்ல அவர் முன்னெடுத்த திட்டங்களை முன்மாதிரியாக கொள்ள முடியுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தனது அனுதாப உரையில் தெரிவித்தார்.

## கோப் குழுவின் தலைவராக... (03ஆம் பக்கத் தொடர்)

முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் தலைவராகக் கடமையாற்றியிருந்தார்.

பாராளுமன்றத்தின் 120 (1) நிலையியற் கட்டளைக்கு அமைய இந்தக் குழுவுக்கான உறுப்பினர்கள் அண்மையில் தெரிவுக்குழுவினால் நியமிக்கப்பட்டனர். இதன்படி, அமைச்சர்களான மஹிந்த அமரவீர, மஹிந்தானந்த அலுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, கலாநிதி சரத் வீரசேக்கர, இராஜாங்க அமைச்சர்களான ஜயந்த சமரவீர, டி.வீ. சானக, இந்திக அனுருத்த ஹேரத், கலாநிதி நாலக கொடஹேவா பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், கலாநிதி சுசில் பிரேமஜயந்த, அநுர திசாநாயக்க, பாட்டலி சம்பிக ரணவக்க, ஜகத் புஷ்பகுமார, கலாநிதி ஹர்ஷ த சில்வா, இரான் விக்கிரமரத்ன, நலீன் பண்டார ஜயமஹ, எஸ்.எம். மரிக்கார், பிரேம்நாத் சி. தொலவத்த, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், மதுர விதானகே, சாகர காரியவசம், பேராசிரியர் சரித்த ஹேரத் ஆகியோர் இக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

## IMFயிடம் இலங்கை...

கொழும்பிற்கு விஜயம் செய்திருந்ததாகவும், இந்த விஜயம் தொடர்பில் நிறைவேற்று சபை கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், கோரிக்கை விடுக்கப்பட்டால் பேச்சுவார்த்தை நடாத்த தயார் எனவும், இலங்கையின் பொருளாதார நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## போலி தடுப்பூசி அட்டையை...

மேலும் தடுப்பூசி பெற்றுக்கொள்வது ஒரு சமூகப் பொறுப்பாகும், எனவே அனைவரும் கொரோனா தடுப்பூசியை பெற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திக்வெல்ல – பெலியத்த...

மோதி விபத்துக்குள்ளாதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர். தனியாருக்கு சொந்தமான இரு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளதாக திக்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அரசுக்கு யோசனையை...

மனோ கணேசன் தெரிவித்தார்.

அத்தோடு, உள்ளூராட்சி தேர்தல் முறையிலும் சில சீர்திருத்தங்களை செயற்படுத்தவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி எதிர்வரும் 22ம் திகதி அடுத்த கூட்டம் நடைபெறும்போது, இவை குறித்து ஆய்வு செய்து முடிவுகள் எடுக்கப்படும் எனவும் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்துக்கு...

மாவட்ட பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 7 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் கம்பஹா மாவட்டத்தில் இருந்து ஒரு பாராளுமன்ற ஆசனம் குறைக்கப்பட்டுள்ளது. அம்மாவட்டத்தில் 19 ஆக இருந்த பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 18 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கான புதிய அமெரிக்க...

இராஜாங்கச் செயலாளர் வெண்டி ஆர். ஷெர்மன் டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

தூதுவர் சுங்கின் தலைமைத்துவம் அமெரிக்க மக்களை பிரதி நிதித்துவப் படுத்துவதற்கும், அமெரிக்க – இலங்கை கூட்டுறவை முன்னேற்றுவதற்கும் அவரை சரியான தேர்வாக ஆக்கியுள்ளது. எங்கள் பணியை ஒன்றாகத் தொடரக் காத்திருக்கிறேன் என பிரதி இராஜாங்க செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## காதலர் தினத்துக்காக...

அறிமுகப்படுத்த சுற்றாடல் அமைச்சு முடிவு செய்துள்ளது. மரம் நடும் திட்டத்தை சுற்றாடல் அமைச்சு, பாதுக்க கிறீன் யுவர்சிட்டி, இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழக வளாகம் மற்றும் இலங்கை அபிவிருத்தி அறக்கட்டளை ஆகியன இணைந்து 14ம் திகதி காலை 9.00 மணிக்கு நடத்துகின்றன.

கடந்த ஆண்டும் காதலர் தினத்திற்காக இதேபோன்ற மரம் நடும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அன்றைய தினம் 50,000 மரக்கன்றுகளை நடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

## சவூதி விமான நிலையம்...

மேற்கொண்ட ஆளில்லா விமான தாக்குதலின் போதே இவர்கள் காயமடைந்துள்ளனர். வெடிமருந்து நிரப்பப்பட்ட ஆளில்லா விமானத்தை சவுதிஅரேபிய படையினர் வானிலேயே வெடிக்க வைத்தனர். அதன்சிதறல்கள் காரணமாவே இலங்கையர்கள் உட்பட 12 பேர் காயமடைந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கை, பங்களாதேஷ், இந்தியா உட்பட பல ஆசிய நாடுகளை சேர்ந்தவர்கள் காயமடைந்துள்ளனர்.

தங்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகக்காக பயன்படுத்தப்பட்ட விமான நிலையத்தை இலக்குவைத்ததாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## வத்தளையில் 02 Kg...

பிரிவினரால் வத்தளையில் நடத்தப்பட்ட சுற்றி வளைப்பிலேயே 02 கிலோ 79 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இச்சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சந்தேக நபர் வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயதுடையவரென அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேகநபர் கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருளுடன் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட சந்தேகநபருக்கு எவ்வாறு போதைப் பொருள்கிடைத்தது,அவர்யாரிடம்அதனை வழங்க திட்டமிட்டிருந்தார் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகள் வத்தளை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## பாத்திமாவிடம் வாக்குமூலம்...

பாத்திமா ஹாதியாவிடம் இன்று 12 ஆம் திகதிக்கும் 25 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் சிறைக்குள் வைத்து வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ள சிஐடியினர் அனுமதி பெற்றுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை முன்னெடுக்காமை மற்றும் அத்தாக்குதலுக்கு முன்னர் கிடைத்த பல தகவல்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுக்காமை ஊடாக தண்டனை சட்டக் கோவையின் 102 ஆம் அத்தியாயத்துடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்ட கோவையின் 296 மற்றும் 300 ஆம் அத்தியாயங்களின் கீழ் குற்றம் ஒன்று இழைக்கப்பட்டுள்ளதா என விசாரணைகள் இடம்பெறுவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

குளியாபிட்டி நீதிவான் நீதிமன்றத்தில், பீ 1411/22 எனும் இலக்கத்தின் கீழ் இந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம், சிஐடியின் சில பொலிஸ் உத்தியோகத்தர்களின் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதுடன், அதனோடு ஒப்பீடு செய்யப்பட்டு சில விடயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, கடந்த 2019 பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி கிடைத்த தகவலுக்கமைய, கெக்குணகொல்ல பிரதேச முகவரி ஒன்றைச் சேர்ந்த பயங்கரவாதி ஸஹ்ரான் ஹாஷிமின் மனைவியான பாத்திமா ஹாதியாவுக்கு சொந்தமான வீட்டை சோதனை செய்ய அப்போதைய சிஐடியின் உயர் அதிகாரிகள் போதுமான ஆலோசனைகள் மற்றும் உத்தரவுகளை வழங்கவில்லையென நீதிமன்றத்துக்கு சாட்சியாளர் ஒருவரின் வாக்குமூலத்தை மையப்படுத்தி அறிக்கையிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில், இந்த விடயம் தொடர்பில் விசாரணை செய்யும் சிஐடியின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மெரில் ரஞ்சன் லமாஹேவா தலைமையிலான குழுவினர், தற்போது விளக்கமறியலிலுள்ள ஸஹ்ரானின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவிடம் வாக்குமூலம் பெற நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

எனவே தற்போது கல்முனை மேல் நீதிமன்றத்திலுள்ள எச்.சி. 653/21 எனும் வழக்குக்கமையவே வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாத்திமா ஹாதியாவிடம் இன்று 12 ஆம் திகதிக்கும் 25 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் சிறைக்குள் வைத்து வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ள சிஐடியினர் அனுமதி பெற்றுள்ளனர்.

## நாட்டில் 98 சதவீதமானோருக்கு...

சதவீதமானோருக்கு தடுப்பூசியை வழங்கியுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் செயலாளருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கொவிட் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளில் ஏனைய நாடுகளில் மக்கள் தமது தடுப்பூசியை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் , இலங்கையில் சுகாதார தரப்பினர் மக்கள் பின்னால் சென்று தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் கொவிட் கட்டுப்படுத்தலில் மூன்று கட்ட தடுப்பூசிகளையும் துரிதமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை பிரதான காரணியாகும்.

முதல் மற்றும் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் காண்பித்த ஆர்வம் , மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு காரணிகளால் குறைவடைந்துள்ளது.

கொவிட் தொற்றாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையால் மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பொறுப்பின்றி செயற்படுகின்றனர்.

எனினும் தற்போது மீண்டும் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் , மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

எவ்வாறிருப்பினும் எதிர்வரும் ஓரிரு மாதங்களுக்குள் திட்டமிடப்பட்டுள்ள சனத்தொகைக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கும் பணிகள் நிறைவு செய்யப்படும்.

சில நாடுகள் இன்னும் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்காத நிலையிலும் கூட , இலங்கையில் 98 சதவீதமானோருக்கு தடுப்பூசியை வழங்கியுள்ளது.

மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதை இலகுபடுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் பல தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதோடு , நடமாடும் தடுப்பூசி சேவைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

கொவிட் கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக பல சர்வதேச அமைப்புக்கள் இலங்கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளன. சர்வதேச செஞ்சிலுவை சங்கமும் அவ்வாறு இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் செயலாளர், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கும் இலங்கைக்கும் இடையில் நீண்ட வரலாற்று தொடர்புகள் காணப்படுகின்றன.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற போதும் , சுனாமி பேரழிவின் போதும் அதற்கமைய உதவிகள் வழங்கப்பட்டன. இதே போன்று கொவிட் கட்டுப்படுத்தலுக்கும் தொடர் உதவிகள் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

## லங்கா ஈ நியூஸ்...

50 ஆயிரம் ரூபா பெறுமதியான சொந்தப் பிணையில் செல்ல கோட்டை நீதவான் பிரியந்த லியனகே இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

1979 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பயங்கரவாத தடை சட்டத்தின் 5 (1) ஆ பிரிவின் கீழ், பயங்கரவாத நடவடிக்கை தொடர்பில் தகவல் கிடைத்தும் அதனை பாதுகாப்பு தரப்புக்கு வழங்காமை தொடர்பில் பொலிஸாரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளபோதும், அத்தகைய குற்றச்சாட்டு ஒன்றினை சுமத்த அவருக்கு எதிராக போதுமான சான்றுகள் இல்லை என சட்ட மா அதிபர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே அவரை சொந்த பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. லங்கா ஈ நியூஸ் தளத்துக்கு அவர் எழுதிய ஆக்கங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக சிஐடியினர் நீதிமன்றுக்கு தெரிவித்தனர் அவரை ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும் சிஐடியில் ஆஜராக நிபந்தனை விதிக்குமாறு சிஐடியினர் நீதிமன்றைக் கோரிய போதும், எந்த அடிப்படையும் இல்லாத நிலையில் அதற்கான உத்தரவைப் பிறப்பிக்க முடியாது எனவும் நீதிவான் மறுத்தார்.

## மங்கள சமரவீர...

1988, 89 கலவரங்களின் போது அநீதிக்கு எதிராக அவர் தாய்மார்கள் அமைப்பை உருவாக்கி போராடினார். அதில் நானும் பங்குபற்றிருந்தேன். 17 வருட ஆட்சிக்கு எதிராகவும் ஜனநாயகத்துக்காகவும் அவர் போராட்டம் நடத்தினார். பாதயாத்திரை வெற்றி பெற பெரும் பங்களித்தார். 1994 இல் முதலாவது அமைச்சரவை அமைச்சரானது முதல் பல்வேறு அரசுகளில் அமைச்சு பதவிகள் வகித்தார். நல்லிணக்கம் தொடர்பில் நம்பிக்கை வைத்த அவர் சவால்களின் போதும் தனது நிலைப்பாட்டை மாற்றாமல் உறுதியாக செயற்பட்டார். தனது நிலைப்பாட்டுக்காக இறுதிவரை போராடினார். வேறு அரசியல் முகாமில் இணைந்தாலும் இறக்கும் வரை எனது நண்பாராகவே இருந்தார். 2005 தேர்தலில் நான் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கிய போது பல்வேறு சவால்கள் ஏற்பட்டது. இந்த சவால்களின் போது அவர் செய்த அர்ப்பணிப்புகளை நினைவு கூருகிறேன். அவர் தனது அரசியலை தனிப்பட்ட வாழ்வுடன் தொடர்புபடுத்தவில்லை. கடுமையான தனது எதிரியை விமர்சிக்கக் கூடியவர். தமது ஆதரவாளர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அவர் அரசியலிலிருந்து ஒதுங்கிய போதும் அவரின் மரணத்தின் போதும் நான் மிகவும் கவலையடைந்தேன்.

மங்கள என்பவர் அரசியலில் கட்டாயம் இருக்கவேண்டிய ஒரு அரசியல்வாதி. போட்டிபோடக்கூடிய மற்றும் போராடக்கூடிய நபர் அவர்.

மனிதாபிமான விடயத்தில் அரசியலும் மனிதப் பண்பும் ஒன்றல்ல. இலங்கை அரசியல் அபூர்வமான பாத்திரமான மங்களவின் மறைவுக்கு எமது அனுதாபங்களை தெரிவிக்கிறேன் என்றார்.

## சுபீட்சத்தின் நோக்கு...

பல்கலைக்கழகம் இன்று திறந்து வைக்கப்படுகிறது.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது போல நாட்டில் புதிய பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டு இந்த பிரதேச மாணவர்களிடம் கையளிப்பதில் பெருமையடைகிறேன்.

இந்த பல்கலைகழகத்தினூடாக இளமாணி பட்டங்களை மட்டுமல்ல மேலதிக பட்டங்களையும் வேலை வாய்ப்புகளையும் வெளிநாட்டு வாய்ப்புகளையும் உருவாக்கி எமது இளம் சமுதாயத்துக்கு பெற்றுக் கொடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்ல தயாராக வேண்டும்.

எமது நாடு விவசாய நாடு என்பதால் எதிர்காலத்தில் விவசாய துறையில் பாட திட்டங்களை உருவாக்கி அவற்றில் பட்டங்களை பெற்று கொடுத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளைப் பெற்று கொடுக்க பல்கலைக்கழகங்கள் முன்வர வேண்டும்.

எதிர்காலத்தில் மிக அதிகளவான மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு உள்ளீர்க்க எதிர்பார்த்திருக்கிறோம். அதிகளவான மாணவர்கள் உயர்தரத்தில் சித்தியடைந்தாலும் அனைவரையும் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்க முடியவில்லை. எதிர்காலத்தில் இந் நிலைமை மாற்றியமைக்கப்படும்.

பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பு கற்கை நெறிகளுக்கு மேலதிகமாக டிப்ளோமா,சான்றிதழ் கற்கை நெறிகள் புதிது புதிதாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாங்கள் 30 வருட யுத்த நிலையை முடிவுக்குக் கொண்டு வந்துள்ள நிலையில் எமது இளைய சமுதாயத்தை அபிவிருத்திப் பாதையில் அழைத்துச் செல்ல உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன் என தெரிவித்தார்.

நாட்டின் 17ஆவது அரச பல்கலைக்கழகமாக "வவுனியா பல்கலைக்கழகம்" வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பிரயோக விஞ்ஞான பீடம், வர்த்தக பீடம் மற்றும் ஆங்கில மொழிப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய வவுனியா வளாகம், 1997ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

வவுனியா பல்கலைக்கழக விடுதி மைதானத்தில் கூடியிருந்த பிரதேசவாசிகள், நிகழ்வு நடைபெற்ற இடத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை அன்புடன் வரவேற்றனர். அவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடிய ஜனாதிபதி, அம்மக்களின் நலன் குறித்து கேட்டறிந்துகொண்டார்.

வவுனியா வளாகத்தை தேசிய பல்கலைக்கழகமாக மாற்றும் நிகழ்வைப் பதிவு செய்யும் நோக்கில் கல்வெட்டைத் திரைநீக்கம் செய்து திறந்துவைத்த ஜனாதிபதி, பல்கலைக்கழகத் தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையம் மற்றும் சகவாழ்வு மையம் போன்றவற்றை மாணவர் பாவனைக்குக் கையளித்தார்.

தகவல் தொழில்நுட்பப் பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்ட ஜனாதிபதி, தாம் பெற்றுக்கொள்ளும் அறிவைத் தமது பிரதேசங்களுக்கே வழங்கமுடியுமானால்,அதுவே தான் பிறந்த இடத்துக்கும் நாட்டுக்கும் செய்யும் பெரும் சேவையாகுமென்று எடுத்துரைத்தார். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சமூக மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய புத்திஜீவிகளைக் கல்வியினூடாகச் சமூகமயப்படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று, நிகழ்வின் பிரதான உரையை நிகழ்த்திய ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாடொன்று பலமடைய வேண்டுமாயின், அந்த நாட்டின் கல்விக் கட்டமைப்பு பலமடைந்திருக்க வேண்டும். அதுவே, பயனுள்ள முதலீடாகுமென்று எடுத்துரைத்த ஜனாதிபதி, தேசிய கல்வியைக் கட்டியெழுப்புவதற்கே தற்போதைய அரசாங்கம் முன்னுரிமையளித்துள்ளதென்றார்.

கலைப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலான பாடத்திட்டங்களைச் சமூகத் தேவைகளுக்கேற்ப தயாரிப்பதற்காகப் பல்கலைக்கழகக் கட்டமைப்பு முன்னெடுத்த வேலைத்திட்டங்களுக்கும் ஜனாதிபதி இதன்போது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

உலகில் அதிக கேள்வி நிலவும் துறைகளை அடையாளம் கண்டு, அத்துறைகளினூடான புத்திஜீவிகளை உருவாக்கும் காலத்தின் தேவையைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பென்றும் எடுத்துரைத்தார்.

"உங்களதும், உங்கள் நண்பர்களதும் மனங்களில் தேசிய சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு, இவ்வாறான பல்கலைக்கழகங்களின் விடுதிகளையும் வகுப்பறைகளையும், மைதானங்களையும், சிற்றுண்டிச்சாலைகளையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்" என்று, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

பல்கலைக்கழகங்களில் ஏற்படுத்திக் கொள்ளும் பந்தங்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை என்றும் அந்தத் தொடர்பு, இந்த நாட்டினது அபிவிருத்திக்கு பெரும் ஊன்றுகோலாக இருக்குமென்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார்.

அமைச்சர்களான தினேஸ் குணவர்த்தன, டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான காதர் மஸ்தான், குலசிங்கம் திலீபன், புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்த்தன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் சிரேஷ்ட பேராசிரியருமான சம்பத் அமரதுங்க ஆகியோரும், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## பாதாள உலக உறுப்பினர்...

வர்த்தகத்தில் ஈடுபடும் பாணந்துறை சலிந்துவின் பிரதான சகாவான தெல்கேடிலான் பீரிஸ் அல்லது ஹப்பா என்ற வயது 27 நபரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மோதரை இசுரு சிறிமாவத்தையிலுள்ள வீடொன்றை முற்றுகையிடச் சென்றபோது அங்கு இருந்ததாக சொல்லப்படும் ஹப்பா என்பவர் அதிரடிப்படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார்.

இதன்போது படையினர் திருப்பிச் சுட்டதில் ஹப்பா என்பவர் படுகாயங்களுக்குள்ளாகி பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதில் கொல்லப்பட்டவர் பல குற்றச்சாட்டுகளுக்காக தேடப்பட்டு வந்தவரென பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு பெண்ணை வெட்டிக் காயப்படுத்தியமை,பாணந்துறை ஆதார வைத்தியசாலை முன் சில தினங்களுக்கு முன் அம்புலன்ஸ் சாரதி ஒருவருக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்தது மற்றும் ஒருவருடைய கையை வெட்டித் துண்டாக்கியதுடன் பல கொள்ளைச் சம்பவங்களுடன் அவர் சம்பந்தமுடையவரென பொலிஸார் தெரிவித்தனர் .

இவர் பயன்படுத்தியதாக கூறப்படும் துப்பாக்கியையும் பொலிசார் மீட்டுள்ளனர். இவருடன் இருந்த மற்றும் சிலரின் வீடுகளை பரிசோதித்த போது கைக்குண்டும், கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இத் துப்பாக்கிச் சமரில் காயமடைந்த பொலிஸ் விஷேட அதிரடிப்படை வீரரொருவர் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்ட நபருடன் இருந்ததாகக் கூறப்படும் ஆறு சந்தேக நபர்கள் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிசாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

# சர்வதேச செய்திகள்

## ரஷ்யாவுடனான பதற்றம்

# உக்ரைனிலிருந்து அமெரிக்கர்களை உடன் வெளியேற பைடன் அழைப்பு

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை பற்றிய அச்சம் காரணமாக உக்ரைனில் இருக்கும் அனைத்து அமெரிக்க பிரஜைகளும் உடன் அங்கிருந்து வெளியேறும்படி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அழைப்பு விடுத்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்புத் தொடுத்தால் அமெரிக்கர்களை மீட்பதற்கு படைகள் அனுப்பப்பட மாட்டாது என்று பைடன் வலியுறுத்தியுள்ளார்.

பிராந்தியத்தில் நிலைமை விரைவாக மாறக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

உக்ரைன் மீது தாக்குதல் தொடுக்கும் திட்டம் இல்லை என்று ரஷ்யா தொடர்ந்து மறுத்தபோதும் எல்லைப் பகுதியில் அது 100,000க்கும் அதிமான துருப்புகளை குவித்துள்ளது.

இந்நிலையில் ரஷ்யா அண்டை நாடான பெலாரஸுடன் பாரிய போர் ஒத்திகையை ஆரம்பித்திருப்பதோடு ரஷ்யா கடலில் முற்றுகையில் ஈடுபட்டிருப்பதாக உக்ரைன் குற்றம்சாட்டியுள்ளது.

தனது முன்னாள் சோவிட் அண்டை நாடான உக்ரைன் நேட்டோவில் இணையாதிருப்பதை உறுதி செய்வதற்கு கெடு ஒன்றை நிர்ணயிக்க வேண்டி இருப்பதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

இந்த பதற்றத்திற்கு மத்தியில் ஐரோப்பா கடந்த பல தசாப்தங்களில் மிகப்பெரிய பாதுகாப்பு பிரச்சினையை எதிர்கொள்வதாக பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் உள்ள அமெரிக்கர்கள் உடன் வெளியேறும்படி அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.



'அமெரிக்க பிரஜைகள் இப்போதே வெளியேற வேண்டும்' என்று என்.பி.சி செய்திக்கு அளித்த பேட்டியில் பைடன் தெரிவித்துள்ளார்.

'உலகின் மிகப் பெரிய இராணுவங்களில் ஒன்றையே இப்போது நாம் எதிர்கொண்டிருக்கிறோம். இது மிகவும் மாறுபட்ட நிலைமை என்பதோடு நிலைமை விரைவாக மாறிவிடும்' என்றும் பைடன் எச்சரித்துள்ளார்.

தப்பிவரும் அமெரிக்கர்களை மீட்பதற்கு துருப்புகள் அனுப்பப்படுமா என்று கேட்டபோது, 'இல்லை. அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒருவருக்கு ஒருவர் சூடு நடத்த ஆரம்பித்தால் அது உலகப் போராக மாறிவிடும்.

நாம் இதுவரை இருந்ததை விட வித்தியாசமான உலகில் இருக்கிறோம்' என்று பைடன் பதிலளித்தார்.

மறுபுறம் உக்ரைன் விவகாரம் தொடர்பான தற்போதைய பதற்ற நிலையை தணிப்பதற்கு உலகத் தலைவர்கள் தொடர்ந்து முயன்று வருகின்றனர்.

கிழக்கு உக்ரைனில் இடம்பெற்று வரும் மற்றைய மோதலை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் முடிவு ஒன்று எட்டப்படவில்லை என்று உக்ரைன் மற்றும் ரஷ்யா கடந்த வியாழக்கிழமை அறிவித்தன.

உக்ரைனுக்கு சொந்தமாக கிரிமாய தீபகற்பத்தை ரஷ்யா தனது ஆட்புலத்திற்குள் இணைத்து எட்டு ஆண்டுகளின் பின்னரே தற்போதைய பதற்றம் ஏற்பட்டுள்ளது. அது தொடக்கம் ரஷ்ய எல்லையை ஒட்டிய கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் மற்றும் உக்ரைன் இடையே மோதல் இடம்பெற்று வருகிறது.

இதேவேளை அடுத்த வாரம் ரஷ்யா கடற்படை பயிற்சியில் ஈடுபட தயாராகிவரும் நிலையில், அந்நாடு தாங்கள் கடலை அணுகத் தடையாக இருக்கும் வகையில் முற்றுகையிட்டுள்ளதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

உக்ரைனுடனான தனது எல்லையில் ரஷ்யா பெரும் படைகளைக் குவித்து வருவதால் ஏற்பட்டுள்ள பதற்றத்துக்கு நடுவில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது உக்ரைன். அசோவ் கடல் முழுவதையும், கருங்கடலில் பெருமளவையும் தாங்கள் அணுக முடியாதபடி ரஷ்யப் படையினர் தடுத்துக் கொண்டு நிற்பதாக உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்தார்.

உக்ரைன் நேட்டோ அமைப்பில் இணையக் கூடாது, கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோவின் இராணுவ நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும், ரஷ்யாவை ஒட்டி உள்ள நாடுகளில் நேட்டோ படையினர் ஏவுகணைகளைக் களமிறக்கக் கூடாது என கடந்த மாதம், மேற்கு நாடுகளிடம் வலியுறுத்தியது ரஷ்யா.

உக்ரைன் நாட்டுக்கு, தன் கூட்டாளிகளைத் தேர்வு செய்ய முழு உரிமை உண்டு என அமெரிக்கா மற்றும் நேட்டோ தரப்பு பதிலளித்தது. ஆனால், ஏவுகணைகளை களமிறக்குவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக அமெரிக்காவும், நேட்டோவும் கூறியுள்ளன.

# பிரிட்டிஷ் இளவரசருக்கு மீண்டும் கொவிட் தொற்று



பிரிட்டிஷ் இளவரசர் சார்ல்ஸுக்கு மீண்டும் கொவிட்19 வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அவருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டது. ஆனால் அப்போது அறிகுறிகள் மிதமாகவே இருந்தன.

73 வயது சார்ல்ஸ் தென்மேற்கு இங்கிலாந்தின் வின்செஸ்ட்டர் பகுதிக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார்.

இளவரசர் சார்ல்ஸின் தாயாரான எலிசபெத் அரசியார் அரசப் பொறுப்பை ஏற்ற 70ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிகழ்வில் அவர் கலந்துகொள்ளவிருந்தார்.

ஆனால் இப்போது வைரஸ்தொற்று உறுதிசெய்யப்பட்டதால் அவர் தனிமையில் இருப்பதாக அரண்மனை தெரிவித்தது.

அவரது உடல்நிலை குறித்தோ, அவர் தமது 95 வயதுத் தாயாரைச் சந்தித்தாரா என்பது குறித்தோ தகவல் இல்லை.

கடந்த புதனன்று அவர் ஒரு நிகழ்வில் பிரிட்டிஷ் நிதியமைச்சர் ரிஷி சுனாக், சுகாதார அமைச்சர் சாஜித் ஜாவித், உள்துறை அமைச்சர் பிரீத்தி படேல் ஆகியோரைச் சந்தித்தாகக் கூறப்பட்டது.

# எச்.ஐ.வி தொற்றை கண்டுபிடித்த பிரான்ஸ் விஞ்ஞானி காலமானார்



எச்.ஐ.சி வைரஸ் தொற்றின் இணை கண்டுபிடிப்பாளர்களில் ஒருவரான பிரான்ஸை சேர்ந்த விஞ்ஞானி லுக் மொண்டக்னியர் தனது 89 ஆவது வயதில் காலமானார்.

எய்ட்ஸ் நோயை ஏற்படுத்தும் இந்தத் தொற்றுப் பற்றிய அவரது பணிக்காக 2008 ஆம் ஆண்டு கூட்டாக மருத்துவத்திற்கான நோபல் விருதை மொண்டக்னியர் வென்றார்.


பாஸ்டர் நிறுவனத்தில் மூத்த ஆராய்ச்சியாளராக இருந்தபோது 1983ஆம் ஆண்டு எச்.ஐ.வி தொற்றை கண்டுபிடித்தார். எச்.ஐ.வி வைரஸ் குறித்த கண்டுபிடிப்புகளை யார் முதலில் கண்டுபிடித்தது என்பது குறித்து காலே என்ற விஞ்ஞானியுடன் அவர் நீண்ட போராட்டம் நடத்தினார். இறுதியில் இருவரும் அந்தச் சாதனையைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிலையில் உடல் நலம் பாதிக்கப்பட்டு பாரிசில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அணுக்கரு பிணைப்பு: அதிக ஆற்றலை உருவாக்குவதில் விஞ்ஞானிகள் வெற்றி

அணுக்கரு பிணைப்பு தொழிநுட்பத்தின் மூலம் அதிக ஆற்றலை உருவாக்கும் முயற்சியில் ஐரோப்பிய விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். இதன் மூலம் சுற்றுச் சூழலை பாதிக்காத எரிசக்தியை கண்டறிவதில் மிகப்பெரிய முன்னேற்றம் கிடைத்திருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அணுக்களை அதிக வெப்ப நிலையில் இணைப்பது மூலம் அணுக்கருக்கள் இணைந்து ஆற்றல் வெளிப்படுவது வழக்கம் தற்போது வரை அணுக்கரு இணைப்பு மூலம் 22 மெகா ஜூல் ஆற்றலை வெளிக்கொணரப்பட்டிருந்த நிலையில் தற்போது புதிய முயற்சிகளின் பலனாக 59 மெகா ஜூல் ஆற்றல் வெளிகொணரப்பட்டுள்ளது.



இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் அருகே நடத்தப்பட்ட சோதனை முயற்சியில் வெற்றி கிடைத்துள்ளது. அறிவியலின் முன் நின்ற மிகப் பெரிய சவாலுக்கு தற்போது தீர்வை நெருங்கியுள்ளதாக இங்கிலாந்து அணுசக்தி ஆணையத்தின் தலைவர் இயன் சாப்மேன் தெரிவித்துள்ளார்.

உலகெங்கும் தற்போது பெட்ரோலியமே பிரதான எரிபொருளாக திகழும் நிலையில், அதனால் மிகப்பெரிய அளவில் சுற்றுசூழல் மாசுபாடு ஏற்படுகிறது.

இந்நிலையில் சுற்றுசூழலை பாதிக்காத நடைமுறையில் எளிதாக உற்பத்தி செய்யக்கூடிய எரிபொருளை கண்டறியும் முயற்சி உலகெங்கும் நடந்து வரும் நிலையில் அணுக்கரு இணைவு மூலம் அதிக ஆற்றலை வெளிக்கொணர்ந்து உள்ளது மிக முக்கிய திருப்பமாக கருதப்படுகிறது. மேலும் இது பாதுகாப்பான அணுமின் உற்பத்தி முறையாகவும் கருதப்படுகிறது.

# ஓவியத்திற்கு கண்களை வரைந்த காவல் அதிகாரி



சோவியத் காலத்தில் வரையப்பட்ட ஓவியத்தில் கண்களை வரைந்ததாக ரஷ்யக் கலைக் காட்சிக்கூடத்தின் பாதுகாவல் அதிகாரி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. வேலையின் முதல்நாள் அன்று அவர் அவ்வாறு செய்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் யேகட்டரின்பர்க்கிலுள்ள யெல்ட்சின் சென்ட்டருக்குச் சென்றிருந்த இருவர், அனா லெபோர்ஸ்காயாவின் 'த்ரீ பிகர்' ஓவியத்தில் பேனாவால் கண்கள் வரையப்பட்டதைக் கண்டனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பாதுகாவல் அதிகாரி வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் அந்த அதிகாரிக்கு அபராதமும் 3 மாதங்கள் வரையிலான சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம்.

ஓவியத்தை மீண்டும் சீரமைக்க சுமார் 3,345 டொலர்கள் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவத்தைத் தொடர்ந்து, கலைக் காட்சிக்கூடத்தில் வைக்கப்பட்ட மற்ற ஓவியங்கள் மீது பாதுகாப்புத் திரைகள் போடப்பட்டுள்ளன.

# லிதுவேனிய நாட்டிடம் இறைச்சி வாங்குவதை நிறுத்தியது சீனா



தாய்வானுடன் உறவை ஏற்படுத்தி உள்ள லிதுவேனியாவிடம் இருந்து மாட்டிறைச்சி, பால் உற்பத்திகள் மற்றும் பியர் கொள்வனவை சீனா நிறுத்தியுள்ளது.

போதிய ஆவணங்கள் இல்லாததை காரணம் காட்டியே சீன சுங்க பொது நிர்வாகம் இந்த ஏற்றுமதிகளை இடை நிறுத்தி இருப்பதாக லிதுவேனியா குறிப்பிட்டுள்ளது.

தாய்வானுக்கு பிரதிநிதித்துவ அலுவலகம் ஒன்றை தனது நாட்டில் திறக்க லிதுவேனிய அனுமதி அளித்திருக்கும் நிலையிலேயே சீனா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்நிலையில் தனது உறுப்பு நாடு மீது சீனா பாகுபாட்டு நடவடிக்கையில் ஈடுபடுவது பற்றி ஐரோப்பிய ஒன்றியத்தில் சீனாவுக்கு எதிரான விசாரணை ஒன்றை தற்போதைய சூழல் வலுப்படுத்தியுள்ளது.

உலகின் மிகப்பெரிய இறைச்சி இறக்குமதியாளராக சீனா இருந்த போதும் லிதுவேனியாவிடம் இருந்து குறைந்த அளவு இறைச்சியையே அது வாங்குகிறது.


திகதி 10.02.2022 வியாழக்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4674
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,188,400.00
ஆங்கில எழுத்து X வெற்றி இலக்கங்கள் 2 8 1 1 6 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 43,400,374.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2969
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,540,660.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 08 44 73 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,447,479.60

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 1022 மெகா அதிர்ஷ்ட இலக்கம் 12632
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,863,460.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 229,417,338.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து E சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 26 32 65 67

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 704
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,567,600.00
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 30 36 62 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,627,421.20

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0015
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,032,200.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 05 07 21 46
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,688,104.68

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 355
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,381,740.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 18 64 77 85
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,322,132.80

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416




# நெடுந்தீவுக்கான முறையான படகு சேவையின்மையால் மக்கள் அவதி







(பரந்தன் குறூப் நிருபர்)

யாழ் நெடுந்தீவுக்கான பொதுப் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த குமுதினி படகு மற்றும் பிரதேச சபைக்கு சொந்தமான நெடுந்தாரகை ஆகிய படகுகள் பழுதடைந்த நிலையில் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

யாழ் நெடுந்தீவுக்கான பொதுப் போக்குவரத்து படகு சேவைகளில் ஈடுபட்டு வந்த குமுதினி படகு மற்றும் நெடுந்தாரகை ஆகிய படகுகள் பழுதடைந்த நிலையில் நீண்ட காலமாக திருத்தியமைக்கப்படாது; நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் கடற்பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து 45 கிலோமீற்றர் தொலைவில் தரைத்தொடர்பு கொண்ட புங்குடுதீவு குறிகாட்டுவானிலிருந்து ஏறத்தாள 10 கடல் மைல் தொலைவில் நெடுந்தீவு அமைந்துள்ளதுடன் தற்போது நெடுந்தீவில் 1500 ற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 4500 பேர் வரையில் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் இப்பிரதேசத்தில் இருக்கின்ற மக்கள் தொடர்ந்தும் போக்குவரத்தில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இதேவேளை ஆசிரியர்கள் பிரதேச செயலகத்தின் பணியாளர்கள், வைத்தியர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அனைவருமே இப்படகு மூலம் பயணம் செய்து அந்த மக்களுக்கான சேவையை வழங்க வேண்டிய நிலை கானப்படுகின்றது.

நெடுந்தீவுக்கான போக்குவரத்துக்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வடதாரகை படகு என்பனவும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான படகு மற்றும் தனியார் படகு என பல்வேறு பட்ட படகுச் சேவைகள் இடம்பெறுகின்றன.

இதில் பாதுகாப்பான பொதுப் போக்குவரத்திற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வடதாரகை என்பன இலவசமாக போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இதில் தற்போது குமுதினி படகு முழுமையாக பழுதடைந்த நிலையில் திருத்தப்பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மாவிலித்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவையில் வடதாரகை மட்டுமே நாளாந்தம் இரண்டு சேவைகளை வழங்கி வருகின்றது. அதாவது காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும் பின்னர் காலை 8 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கும் பிற்பகல் 03 மணிக்கும் நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் என நாளொன்றுக்கு இரண்டு சேவைகள் இடம்பெறுகின்றன.

வடமாகாண சபையினால் கடந்த 2017ஆம் ஆண்டு வழங்கப்பட்டு நெடுந்தீவு பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வந்த நெடுந்தாரகை பயணிகள் படகு ஐந்து வருடத்துக்குள் இயங்கு நிலையை இழந்து கவனிப்பாரற்று நெடுந்தீவு துறைமுகத்தின் ஒருபக்கத்தில் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

இதனால் நெடுந்தீவுக்கான போக்குவரத்து பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. எனவே நெடுந்தீவுக்கான பொதுப் போக்குவரத்து சேவைகளை உரியவாறு ஏற்படுத்தி தருமாறு பொதுமக்கள் கோரியுள்ளனர்.

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இதுவரை 15 கொரோனா மரணங்கள்

சாவகச்சேரி விசேட நிருபர்



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 15 கொரோனா மரணங்கள் மாத்திரமே இதுவரை பதிவாகியுள்ளதாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டயாழினி மகேந்திரன் தெரிவித்துள்ளார். அண்மையில் வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

யாழ் மாவட்டத்தில் அதிகமான கொரோனா தொற்று தென்மராட்சி பிரதேசத்தில் தான் பதிவாகியுள்ளது. ஆரம்பத்தில் கொரோனா என்ற பய உணர்வு மாத்திரமே காணப்பட்டது. இந்நிலையில் எமது பணியாளர்கள் கடமைக்கும் அப்பால் இதயபூர்வமான சேவையை வழங்கியிருந்தனர். பாதுகாப்பு அங்கியுடன் தானே பணியாற்றுகின்றனர் என்ற உணர்வு வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு தோன்றலாம். ஆனால் பாதுகாப்பு அங்கியுடன் பணிபுரிந்தவர்களால் மாத்திரமே இந்த அவஸ்தையை உணர முடியும்.

எமது சக்திக்கும் அப்பால் சேவையாற்றி இருந்தோம். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 15 கொரோனா மரணங்கள் மாத்திரமே பதிவாகியுள்ளது. அதிலும் தடுப்பூசி செலுத்தாதோர் மரண விகிதமே அதிகம். இறந்தவர்களில் 26 வயது தொடக்கம் 97 வயது வரையானோர் உயிரிழந்த போதிலும் அவர்கள் வேறு பல நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த 15 மரணங்களும் எங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட மரணங்கள். எமது சேவையைத் தவறி எந்தவொரு மரணமும் நிகழவில்லை. வேறு நோய்த் தாக்கங்களால் பாதிக்கப்படாமல் இருந்திருந்தால் அந்த 15 உயிர்களையும் கூட காப்பாற்றி இருக்க முடியும்.என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## கட்டாக்காலி நாயை தேடும் யாழ். மாநகர சபை ஊழியர்கள்

யாழ்.விசேட நிருபர்

யாழ்.நகர் மத்திய பகுதியில் கட்டாக்காலி நாய் ஒன்று வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் உள்ளிட்ட 1 0ற்கும் மேற்பட்டவர்களை கடித்துள்ளது.

யாழ்.நகர் மத்தியில் கஸ்தூரியார் வீத, மின்சார நிலைய வீதி என்பனவற்றில் நேற்று வியாழக்கிழமை மதியம் முதல் மாலை வரையிலான நேரத்தினுள் 10ற்கும் மேற்பட்டவர்களை நாய் கடித்துள்ளது.

அதில் வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவருக்கு இரண்டு கால்களிலும் நாய் கடித்துள்ளது. அதேவேளை அப்பகுதிகளில் சுமார் 10ற்கும் மேற்பட்டவர்களை நாய் கடித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனுக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து நாயினை மாநகர சபை ஊழியர்கள் ஊடாக பிடிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், நாய் தொடர்பிலான தகவல்கள் வெளிவரவில்லை.

இந்த நாய் தொடர்பிலான தகவல்கள் தெரிந்தவர்கள் மாநகர சபைக்கு அறி விக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.



தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையம் மற்றும் அறம் பழகு அறக்கட்டளை ஆகியவற்றின் ஊடாக நாவற்குழி வீட்டுத்திட்டம் பகுதியில் அமைந்துள்ள அரும்புகள் முன்பள்ளி சிறார்களுக்கு நேற்றுமுன்தினம் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. சமூக ஆர்வலர் சபாநாதனின் ஏற்பாட்டில் கனடா வாழ் சுரேன் ஊடாக பாதணிகள் சிறார்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன. (படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

## பூஸ்டர் தடுப்பு மருந்தேற்றும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட இரண்டு தடுப்பூசிகள் பெற்று மூன்று மாதம் நிறைவடைந்தவர்களுக்கான மூன்றாவது தடுப்புமருந்தேற்றும் நடவடிக்கை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் இராணுவத்தினரின் நெறிப்படுத்தலில் (10) நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் கொரோனா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெற்றவர்களுக்கும் அதே நேரம் தடுப்பூசிகளை பெறாதவர்களுக்கும் தடுப்பூசி செலுத்தும் பணிகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# வறிய மக்களுக்கு சோலைவரி அறவீட்டில் விலைக்கழிவு

நல்லூர் பிரதேசத்தில் வாழும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு சோலைவரி அறவீட்டில் கொள்கை அடிப்படையில் விலைக்கழிவு கொடுப்பதற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்றையதினம் சபையின் தவிசாளர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்திகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்நிலையில் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உட்பட்ட பகுதிகளின் நிலத்தின் பெறுமானம் புதிதாக அளவீடு செய்யப்பட்டுள்ளமையால் அதற்கேற்ப வருமான வரி அறவீட்டிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வறிய மக்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளதாக உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனடிப்படையில் இது தொடர்பில் முதலில் கொள்கை உருவாக்கம் ஒன்றை ஏற்படுத்தும் பொறிமுறையை தவிசாளர் சபையில் முன்வைத்தார்.

அதனடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குள் உள்ள பகுதியில் வாழும் வறிய மக்களுக்கு சோலைவரி அறவீட்டில் விலைக்கழிவு கொடுக்கப்படவுள்ளது. கொரோனா தொற்று காரணமாக பொருளாதாரத்தில் பின்தாங்கிய மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் பிரதேசத்தினை அடிப்படையாக கொண்டு நிலத்தின் பெறுமதி மற்றும் இதர காரணிகளை கொண்டு வரி நிர்ணயிக்கப்படுகின்றது. அந்தவகையில் விலைக்கழிவுக்கு முன்னர் அது தொடர்பில் ஆராய்ந்து வறிய மக்களது தரவுகளை துல்லியமாக ஆராய்ந்து கிராம உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது.

இதேநேரம் சபையின் வருமானம் இழக்கப்படாமலும் மக்களின் வாழ்வியலை ஊக்குவிப்பதற்கும் திட்டங்களை முன்வைப்பதுதான் பிரதேச சபையினது கடமையாகும் எனவும் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

## மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்திக்கான வேலைத்திட்டம்

(தலைமன்னார் விஷேட நிருபர் )

மன்னாரில் மேற்கொள்ளப்படவிருக்கும் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி விரிவாக்கத்தின் முதற்கட்டமாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கொழும்பிலிருந்து ஒரு உயர்மட்ட குழு மன்னாருக்கு வருகை தந்து முக்கிய அமைப்பினரை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் 70 வீதமான மின் உற்பத்தியானது சூரியசக்தி காற்றாலை மற்றும் நீர் மின் உற்பத்திகளினூடாக மின்சாரத்தை பெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்டமாக இருப்பதனால் இதற்கான முன்னெடுப்புகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக மன்னாரில் 36 மின் காற்றாலைகள் அமைக்கப்பட்டு தற்பொழுது அவைகள் இயங்கி வருகின்றது. இதனால் மன்னார் தீவு பகுதியிலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவ சமூகத்தால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. எனவே இது தொடர்பாக மன்னார் பிரஜைகள் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது. அத்துடன் தற்பொழுது தொடர்ந்து இரண்டாம் கட்டமாக இரண்டாம் காற்றாலை மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம் முன்னெடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதை எதிர்த்து மன்னார் பிரஜைகள் குழு தலைமையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதேவேளையில் ஜனாதிபதி கடந்த 2ஆம் திகதி (02.02.2022) மன்னார் பகுதிக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு இயங்கிவரும் மின் உற்பத்தி காற்றாலையை பார்வையிட்டு சென்றிருந்தார்.

இதைத் தொடர்ந்து மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்திக்கான உடன் முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளுடன் இது தொடர்பாக இப்பகுதி மக்களுக்கு விழிப்புணர்வை மேற்கொள்ளும்படியும் வேண்டியுள்ளார்.

இதன் காரணமாக இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் மன்னாருக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி ஒரு உயர்மட்டக்குழு விஜயத்தை மேற்கொண்டு இரு நாட்கள் மன்னாரில் தங்கியிருந்து முக்கிய குழுவினரை சந்தித்து விழிப்புணர்வுகான முன்னெடுப்பு ஏற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.





யா/ தாவளை சைவத் தமிழ் வித்தியாலய திறன் வகுப்பறை திறப்பு விழா அண்மையில் அதிபர் சி.சுக்திநாதன் தலைமையில் இடம்பெற்றது. திறன் வகுப்பறைக்கான பெயர்ப்பலகையினை பிரதம விருந்தினரான வலிகாம கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் திறந்துவைத்தார். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## வவுனியா பொது வைத்தியசாலையில் பி.சீ.ஆர் ஆய்வுகூட தொகுதி

வவுனியா விசேட நிருபர்

வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று முதல் பி.சீ.ஆர் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரை காலமும் வவுனியா மாவட்டத்தின் பி.சீ.ஆர் பரிசோதனைக்காக மாதிரிகள் யாழ்ப்பாணம் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு, அதற்குரிய முடிவுகள் பெறப்பட்டு வந்தன.

கடந்த ஆவணி மாதமளவில் மத்திய அரசினால் வவுனியா வைத்தியசாலைக்கு 35 மில்லியன் ரூபா பெறுமதியான பி.சீ.ஆர் ஆய்வுகூட தொகுதியானது கொள்கையளவில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிலையில் பல்வேறு தரப்பினரின் தீவிர முயற்சியின் பலனாக அதற்கு தேவையான உபகரணங்கள் ஒவ்வொன்றாக தருவிக்கப்பட்டு நேற்று (11.02) வெள்ளிக்கிழமை முதல் வவுனியா பொது வைத்தியசாலையில் பி.சீ.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது தொடர்பாக வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளரிடம் கேட்ட போது, மத்திய அரசினால் பி.சீ.ஆர் ஆய்வுகூடம் வழங்கி வைக்கப்பட்டிருப்பதன் மூலமாக வவுனியா மற்றும் வடமாகாணத்தின் மற்றைய மாவட்டங்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. குறிப்பாக கடந்த காலங்களில் உயிரிழந்தவர்கள் மீதான பி.சீ.ஆர் பரிசோதனைகள் யாழ் போதனா மருத்துவமனை அல்லது அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அவ்முடிவுகள் பெறுவதற்கு பெரும் காலதாமதம் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக வைத்திய குழாம், நோயாளர்கள் மற்றும் உறவினர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உட்பட்டனர்.

இதனை கருத்திற்கொண்டு வவுனியா பொது வைத்தியசாலையின் பி.சீ.ஆர் ஆய்வுகூடத்தின் முதற்கட்ட பணியாக உயிரிழந்தவர்களுக்கான பி.சீ.ஆர் பரிசோதனைகளினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதோடு, தீவிர நோயாளிகளுக்கு பி.சீ.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், இவ் ஆய்வுகூட தொகுதியை வவுனியா மாவட்ட பொதுவைத்தியசாலையில் இயங்கு நிலைக்கு கொண்டுவர உதவிய மத்திய சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுகாதார திணைக்கள அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்தார்.

## அவயவ குறைபாடு உடைய எந்தவொரு குடிமகனும் பாதிக்கப்பட இடமளிக்கப்படலாகாது!







# மாற்றுத்திறனாளிகளின் உணர்வுகளை புரிந்து மனிதாபிமானம் உள்ளவர்களாக செயற்படுவோம்!

### ஆயிரம் வெள்ளைப்பிரம்புகள் மற்றும் உடல் உறுப்புகளை தானம் செய்யும் 'வாழ்வுக்கு ஊன்றுகோல்' நிகழ்வில் ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும

'நாடி துடிப்புள்ளமனிதனின் அறிவுக்கு அழைப்பு' என்னும் தலைப்பிலான 'கண்ணாடி' நிகழ்ச்சித் திட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'திவிசெரியட செரயடியக்' (வாழ்வுக்கு ஊன்றுகோல்) என பெயரிடப்பட்ட ஆயிரம் வெள்ளைப்பிரம்புகள் வழங்கும் மற்றும் உடல் உறுப்புகளை தானம் செய்யும் நிகழ்வொன்று கடந்த 9ஆம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆறாவது கூடத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் தனது கண்களை தானம் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டார். இலங்கையர்களுக்கேயுரிய சிறந்த பண்பான தானம் வழங்குதல் மற்றும் தியாகத் தன்மையை உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில் இந்த சிறந்த செயலுக்கு பங்களிப்பு செய்த அமைச்சர் தனது உணர்வுகளை பின்வருமாறு எடுத்துக் கூறினார்.

"உலகில் ஆசாரத்தை கணக்கிடும், நாகரிகத்தை கணக்கிடும் காட்டி ஒன்று உள்ளது. அந்தக் காட்டியின் ஏதோ ஒரு நாடு, ஏதோ ஒரு சமூகம், நிறுவனம், தனிநபர் நாகரிகமானவரா என கணக்கிடும் பிரதான சுட்டி அந்தந்த சமூகமோ அல்லது நபரோ மாற்றுத்திறனாளிகளை எவ்வாறு நடத்துகின்றார்கள் என்பதாகும். அதனால் நான் முதலில் உங்கள் அனைவரையும் போன்று எமது இந்த சமூகத்திடம் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். அந்த சுட்டியின் மூலம் நீங்கள் உங்கள் சூழலில் உங்கள் சமூகத்தை அளவிடுங்கள். அப்போது உங்களுக்கு நீங்கள் நாகரிகமானவர்களா இல்லையா என்பது புரியும்.

ஊடக நிறுவனத்திற்கு உள்ளே இருந்து கொண்டு ஊடக அமைச்சராக இந்த விடயத்தை நான் நம்பும் பார்வையுள்ள சமூகத்துக்கு இணைக்க விரும்புகிறேன். இலங்கையின் சனத்தொகையில் நூற்றுக்கு எட்டு தசம் ஏழு அளவில் அதாவது 17 லட்சம் பேர் வரை ஊனமுற்றவர்கள் உள்ளார்கள். சமூகத்தில் கண் பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள், வாய் பேச முடியாதவர்கள் இல்லை என எண்ணுகிறார்கள்.

அவ்வாறு எண்ணுபவர்களுக்கு இந்த புனிதமான நாளில் ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். எமது பழங்குடி தன்மையை காட்சிப்படுத்தும் சில விடயங்கள் ஊடகப் பாவனை மற்றும் கலாசார நடவடிக்கைகளில் காணப்படுகின்றன. கண் பார்வையற்ற குழந்தைகள் கல்வி கற்கும் கல்லூரியை 'குருட்டுப் பாடசாலை' என்று கூறுகிறார்கள். பாடசாலை எப்படி குருடாக முடியும். கல்லூரி உள்ள நகரின் சந்தியை 'ஊமைகள் சந்தி' எனக் கூறுகிறார்கள். இருபத்தொன்றாவது நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தத்தில் அவர் கூறுவது தவறாகும். மாற்றுத்திறனாளிகள் சமூகத்தாரின் மனது வேதனை அடையும் என்பதை நாம் உணர்கின்றோமா?

அவ்வாறு கூறுவதற்கு விஷேட காரணங்கள் உள்ளன. இந்த உலகில் இருந்த மாற்றுத்திறனாளிகளில் திறமையானவர்களின் கதைகள் பல உள்ளன. ஸ்டீவ் வொண்டர்வை இந்த வேளையிலும் உணருகின்றோம். ரே சார்ள்ஸ் பற்றி, நாம் கண்ட அந்திரியோ பர்சர்லி பற்றி நாம் உணர்ந்தோம். அவரின் ஆக்கங்களை நாம் ரசித்துள்ளோம் . அதேபோன்று எலியட் ஒடிஸி போன்ற மகா காவியங்கள் எழுதிய ஹோர்மர் பார்வையற்றவர் என்பதை நாம் அறிந்துள்ளோம்.

இந்த சிறப்பானவர்கள் எவ்வாறு சர்வதேசத்தை சேர்ந்தவர்கள் ஆனார்கள்? இந்த எல்லாத் திறமையும் உள்ள ஹேமபால பெரேரா கலைஞன் இலங்கையராகி ரே சார்ள்ஸ் எவ்வாறு சர்வதேசத்தை சேர்ந்தவரானார்? ஸ்டீவ் வொண்டர் எவ்வாறு சர்வதேசத்தை சேர்ந்தவரானார்? அவ்வாறு நடப்பதற்கு எமது சமூகம், எமது அரசு மாற்றுத்திறனாளிகள் சமூகம் தொடர்பாக கொண்டுள்ள சுட்டியின் பிரச்சினையால் என்பதை நான் நம்புகிறேன். நான் இலங்கையில் ஊடக அமைச்சில் மாற்றுத்திறனாளிகளுக்காக பிரிவு ஒன்றை உருவாக்கியது குறித்து பெருமைப்படுகின்றேன்.

மாபெரும் கலாசார விழா ஏப்ரல் மாதத்தில் சிங்கள தமிழ், சமூகம் இணைந்து கொண்டாடும் புதுவருட விழாவிற்கு சென்று நாம் அனைவரும் காண்பது என்ன கண்ணைக் கட்டிக்கொண்டு முட்டியை உடைப்பது, கண்ணைக் கட்டிக் கொண்டு தயிர் சாப்பிடுவது, இவற்றை காட்சிகளாக பயன்படுத்தும்படி நான் மிகவும் கௌரவத்துடன் உங்களிடம் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். அது அந்த சமூகம் உணரும் விதமாகும்.

இந்த கா.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஒரு மகனையும் மகளையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் 9 பாடங்களுக்கும் A தர சித்தியை பெற்றிருந்தார்கள்.ஒருவர் எனது பக்கத்து கிராமமான ரத்மலில் வசிப்பவரான நெத்மீ ராஜபக்ச . மற்றையவர் மட்டக்குளியைச் சேர்ந்த பிரையன் கின்ஸ்டன். நெத்மீ சக்கர நாற்காலியில் வசிப்பவர்.பிரையன் பிறப்பிலேயே பார்வையற்றவர்.

பிரையனின் தாயாரின் சகோதரர் வீட்டில் ஒரு சிறிய அறையிலேயே வசிக்கின்றார்கள். நான் அவரிடம் 9A பெறுவதற்கு உங்களுக்கு தடைகள் இருக்கவில்லையா என கேட்டேன். அதற்கு அவர் இல்லை எனக்கு அனைத்தையும் எனது தாய் சொல்லுவார் என கூறினார்.

எனக்கு தெரியாது உங்களுக்கு தெரியுமோ தெரியாது எங்களது பரீட்சை முறைகளில் கண் பார்வையற்றவர்களுக்கு பிரையல் முறையில் வினாத்தாள் ஒன்றை வழங்குவதற்கு நாம் இன்னும் பண்பானவர்கள் அல்ல. பிரையினிடம் நான் புலமைப்பரிசில் பரீட்சையில் எவ்வளவு புள்ளிகள் பெற்றீர் என கேட்டேன். 157 புள்ளிகளைப் பெற்றதாகக் கூறினார். உங்களுக்கு தெரியுமா புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளில் 40 புள்ளிகளுக்கான கேள்விகள் படங்களை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன. பிரையனுக்கு அந்த நாற்பது புள்ளிகளும் கிடைத்திருக்காது. உயர்தரத்தில் கல்வி கற்க பாடசாலை ஒன்று இருக்கவில்லை. இரத்மலானையில் உள்ள பார்வையற்றோருக்கான கல்லூரியில் உயர்தரம் இல்லை. கொழும்பில் இரண்டு பாடசாலையில் மாத்திரமே ஆசிரியர்கள் இருந்தார்கள். நான் அவரின் கையை பிடித்து அழைத்துச் சென்று அவரை ஆனந்தா கல்லூரியில் ஒப்படைத்தேன்.









எனது மகனுக்கு அடுத்தபடியாக நான் கையைப் பிடித்து அழைத்துச் சென்ற எனது இரண்டாவது மகன் அவராவார். அவர் தனது சட்டத்தரணி இலக்கை அடைய ஆனந்தாவில் கல்வி கற்கின்றார். இவர்களுக்குள்ள தடைகளைப் பற்றி பாருங்கள். ஆகவே அந்த காட்சிகளின் மூலம் எம்மை அளவிடுமாறு வேண்டுகோள் விடுத்தேன்.

அதனால் இந்த சமூகத்தை பண்பாபானதாக்க இதனை சந்தர்ப்பமாக கொள்வோம். சமூகத்தில் யாருக்கும், எந்த ஒரு ஊனமுடைய குடிமகனுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நாம் நமது மொழியை பயன்படுத்துவோம். விசேடமாக நான் உங்களுக்கு ஒன்று கூற வேண்டும். நான் இங்கு வருகை தந்த சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் நாயகம் அவயவங்களின் இழையங்களை தானமாக வழங்க முடியும் என கூறினார்.

நான் இன்றைய தினம் எனது கண்களை தானமாக வழங்க தயார். இந்த உலகமும் எனது தாயும் தந்தையும் எனக்கு பரிசளித்த அவயவங்களில் நான் மிகவும் நேசிக்கும் இரண்டு அவயவங்கள் உள்ளன. ஒன்று கண்களிரண்டு மற்றையது முதுகெலும்பு. இன்றைய தினம் எனது இலங்கை சமூகம் பண்பாடு வாய்ந்தது என உலகுக்கு காட்டுவதற்காக எனது கண்கள் இரண்டையும் தானமாக வழங்க தீர்மானித்துள்ளேன். ஆனால் இறக்கும் வரை முதுகெலும்பை தானமாக வழங்க முடிவு செய்ய மாட்டேன்".

**'எனது கண்கள் இரண்டையும் தானமாக வழங்க தீர்மானித்துள்ளேன். ஆனால் இறக்கும் வரை முதுகெலும்பை தானமாக வழங்க முடிவு செய்ய மாட்டேன்'**

இவ்வாறு அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க, பணிப்பாளர் நாயகம் சந்திரபால லியனகே, ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவர் சோனால குணவர்தன, பிரபல நாடகக் கலைஞர் சிறியந்த மெண்டிஸ், சர்வதேச தடகள விளையாட்டு வீராங்கனை சிறியானி குலவங்ச, கண்தான சங்கத்தின் தலைவர் சுனில் அமரசிரி குணவர்தன, அகில இலங்கை கண்பார்வையற்றோர் சம்மேளனத்தின் தலைவர் கமல்சிறி நாணயக்கார, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய பொதுச் செயலாளர் காரியாலய பணிப்பாளர் அனுராதா ஹேரத் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டார்கள்.

தமிழில்: வீ.ஆர் .வயலட்








# மனித ஆக்கிரமிப்புகளினால் நீர்நிலைகள் வற்றும் அபாயம்

**உக்குவளை விசேட நிருபர்**



மாத்தளை மாவட்டத்தில் சட்டவிரோத கட்டட நிர்மாணபணிகள் காரணமாக இயற்கையாக அமைந்துள்ள நீர்நிலைகள் முற்றிலும் வற்றிப்போகக்கூடிய ஒரு ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளதாக கெபெக்ஸ் ஸ்ரீலங்கா மாத்தளை மாவட்ட பணிப்பாளரும் சூழலியலாளருமான காமினி ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது சம்பந்தமாக கருத்து தெரிவிக்கும் அவர் மாத்தளை மாவட்ட மக்கள் தங்களது குடிநீர் தேவையை நிறைவேற்றிக்கொள்ள இயற்கை நீர் வளங்களை மையமாகக் கொண்டு தோண்டப்படும் கிணறுகளின் மூலம் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்கின்றனர்.

இதேவேளை சிலர் தங்களது குடிநீர் தேவைகளுக்காக குழாய் நீர்வசதிகளை ஏற்படுத்தி கொண்டுள்ளனர். இயற்கை நீர்வளங்களை மையமாக வைத்து கிராமிய நீர்விநியோக திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் சிலர் சிறுதொழில் முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்குடன் குடிநீர் அடைக்கப்பட்ட போத்தல்கள் உற்பத்திகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கட்டட நிர்மாண பணிகள், காடழிப்பு போன்ற காரணங்களினால் இயற்கை நீர்நிலைகள் அழிந்து வருவதை அவதானிக்க முடிகிறது. மாத்தளை மாநகருக்கு நீர் விநியோகம் செய்யும் சுதுகங்கைக்கு அருகாமையில் இவ்வாறான சட்டவிரோத செயல்கள் இடம்பெறுவதால் அதன் இருமருங்கிலும் இருக்கும் நீர் ஊற்றுகள் வற்றிபோகக்கூடிய ஆபத்தான நிலைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சரக்கு ரயில் தடம் புரண்டமையால் போக்குவரத்து சேவை பாதிப்பு

**கினிகத்தேனை தினகரன் நிருபர்**



வட்டவளை ரயில் நிலையத்திற்கு அருகில் சரக்கு புகையிரதமொன்று தடம் புரண்டதன் காரணமாக மலையக ரயில் சேவை பாதிக்கப்பட்டது.

அத்துடன் கொழும்பு மற்றும் பதுளை புகையிரத சேவையும் தடைப்பட்டது.

பொருட்களை ஏற்றி வந்த சரக்கு ரயில் பாதையை விட்டு விலகியதன் காரணமாக பல மணிநேரம் போக்குவரத்து பாதிப்படைந்தது. இருப்பினும் பயணிகள் ஏனைய ரயில்களுக்கு மாற்றி ஏற்றப்பட்டு சேவை இடம்பெற்றது.

இருப்பினும் இதன்போது பயணிகள் பல்வேறு சிரமங்களுக்குள்ளாகினர். இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் உள்ளடங்கியிருந்தனர். மேலும் தடம் புரண்ட ரயிலை மீளவும் செயற்படுத்துவதற்கு ரயில் ஊழியர்கள் முயற்சித்ததை அவதானிக்க முடிந்தது.

# பஸ்நாயக நிலமேயை மாற்றுமாறு பொதுமக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை அலுத்நுவர கதரகம தேவாலய பஸ்நாயக நிலமேயை மாற்றக் கோரி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த தேவாலயத்தின் பஸ்நாயக நிலமே அவரது உதவியாளரும் தேவாலய நிலத்துக்கு அண்மித்த பிரதேசங்களில் சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு உட்பட பல்வேறு சட்டத்துக்கு முரணான தககா செயற்பாடுகளில் ஈடுபடுவதாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து பாதுகாப்புத் தரப்பினரின் உறுதிமொழி வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# பாதை புனரமைப்பு



**பதுளை தினகரன் விசேட நிருபர்**

அப்புத்தளை பெருந்தோட்டத் தொழிற்சாலையிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் காபட் செய்யப்பட்டு நேற்று நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கிராமிய அபிவிருத்தி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சிற்கு, அப்புத்தளை நகர சபை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தலைவர் உபுல் திசாநாயக்க விடுத்த வேண்டுகோளுக்கமைய 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பாதை புனரமைக்கப்பட்டது.

**பதுளை மாவட்டம்:**

# 55 சுகாதார உத்தியோர்கள் கொரோனா தொற்றினால் பாதிப்பு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை பிரதான அரசினர் மருத்துவமனையில் 20 வைத்தியர்கள் உள்ளிட்ட தாதிகள் மற்றும் வைத்திய உதவியாளர்கள் 55 பேர் கொவிட் 19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய சங்கத்தின் பதுளை மாவட்டத் தலைவரும் வைத்திய நிபுணருமான பாலித்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேற்படி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு, நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறும் பிரிவு ஆகியவற்றிலுள்ள 20 வைத்தியர்கள் உள்ளிட்ட 55 பேருக்கு கொவிட் 19 தொற்று உறுதியாகியுள்ளது. இவர்களில் பலர் அவர்களின் வீடுகளிலேயே தங்கி சிகிச்சை பெறுகின்றனர். இவர்களுடன் தொடர்புகளைப் பேணிய பலரும் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் பாலித்த ராஜபக்ஷ மேலும் கூறினார்.

கொரோனா தொற்று மரணங்களும், தொற்றாளர்களும் பதுளை மாவட்டத்தில் சடுதியாக அதிகரித்து வருவதால், சுகாதார வழிமுறைகளை முறையாகவும், கிரமமாகவும் பின்பற்றுமாறும், பதுளை மாவட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காய்ச்சல், இருமல், தொண்ட நோய், தடிமன் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் உடனடியாக அப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர்களை நாடி, உரிய சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளும்படி, வைத்திய நிபுணர் பாலித்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.



கண்டியில் உதைப்பந்தாட்டத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு கண்டி மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார எடுத்த முயற்சிகளைப் பாராட்டி கண்டி மாவட்ட உதைப்பந்தாட்ட அபிவிருத்தி சங்கம் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளது. அதற்கமைய கண்டி மாவட்ட உதைப்பந்தாட்ட அபிவிருத்தி சங்க உறுப்பினர்களால் நினைவுச்சின்னம் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

படம்: அக்குறணை குறூப் நிருபர்

# தொடரும் சுகாதார ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு நோயாளிகள் அவதி

**தலவாக்கலை குறூப் நிருபர்**



சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததன் காரணமாக பணிப்புறக்கணிப்பினை தொடரவுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

இதற்கு அமைய மூன்றாவது நாளாக நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டம் தொடர்ந்தது.

வேதன உயர்வு உள்ளிட்ட 7 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் உள்ளிட்ட 18 சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் என்பன வழமை போல் இடம்பெற்றது. இருந்தும் மருந்து வழங்கும் பகுதி மூடப்பட்டிருந்தது. மருந்துகளை பெற்றுக்கொள்ள பாரிய சிரமத்துக்கு முகம்கொடுத்தனர். வைத்தியசாலையில் அவசர சிகிச்சை, மகப்பேறு என்பன வழமை போல் இயங்கியது. நுவரெலியா மாநகர சபையினால் மூன்றாவது கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டமும் பிற்போடப்பட்டுள்ளது.

# மாளிகாத்தென்னையில் கோழி முட்டை உற்பத்தி கிராமம்



**மாத்தளை சுழற்சி நிருபர்**

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கமைய சௌபாக்கிய உற்பத்தி கிராமம் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாத்தளை யடவத்த செயலாளர் பிரிவில் கோழி முட்டை உற்பத்தி கிராமம் ஒன்று மாலிகாத்தென்னையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வசதி குறைந்த குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக் குஞ்சுகள், கோழி வளர்ப்பு கூடுகள், கோழிக்குஞ்சு உற்பத்தி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

111ஆவது கோழி முட்டை உற்பத்தி கிராமத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாளக கோட்டகொடை வைபவரீதியாக திறந்து வைத்த பின்னர் அங்குள்ள கோழி முட்டை உற்பத்தியை பார்வையிட்டார்.



வீட்டுக்கு முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி எரிந்து முற்றாக சேதமடைந்த சம்பவம் ஒன்று புசல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரட்டைபாதை செல்வகந்த கிராமத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை காலை 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

படம்: தெல்தோட்டை தினகரன் நிருபர்







யூரி தோட்டத்திலுள்ள பாடசாலை கட்டடம் புனரமைக்கப்பட்டு இ.தொ.காவின் உப தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார். பழைய கட்டடம் கல்வி கற்பதற்கு ஏற்றதாக இல்லாததால் மாணவர்கள் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். கட்டடத்தை சீர்செய்து தருமாறு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒருவரின் சிந்தனையை பொறுத்தே அவரின் வாழ்க்கை அமையும்...



**'ஜெர்மனில் என்னுடைய புறாவை பறக்க விட எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் நானும் என்னுடைய நண்பர் ஒருவரும் சேர்ந்து 2020 களில் பறக்க விட்டோம். ஜேர்மனியில் எங்களது தேசியக் கொடியினை பறக்க விட்டு புறாப் போட்டியில் முதலாவதாக கலந்து கொண்டவன் நான். நான் அதற்கு முன் ஜேர்மன் சென்று வந்தேன். நான்**




**போட்டியின் போது ஜேர்மன் செல்லவில்லை. என்னுடைய நண்பர் ஒருவர் அந்தப் போட்டியினைப் பார்க்கச் சென்றார். ஜேர்மனில் நடக்கும் போட்டியில் மூன்று புறாக்களை அனுப்பி பறக்க விட்டேன்.எனினும் போட்டியில் வெற்றிபெற சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.**

## கண்டி மாவட்ட புறா வளர்ப்பாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் எம்.எச்.எம்.அஜ்மீர்

**? புறா வளர்ப்புத் துறையில் முக்கிய பதவிகளை வகித்து வரும் நீங்கள், உங்கள் அமைப்பு தொடர்பில்,...**

நான் கண்டி மாவட்ட பிஜிங் சம்மேளனத்தின் தலைவராக இருக்கின்றேன்.(கிளப்ஸ் இன் கண்டி) கண்டி மாவட்டத்திலுள்ள எல்லா புறா வளர்ப்பு கழகங்களுடைய சம்மேளனம் இது. இதில் 13 கழகங்கள் உள்ளன. ஸ்ரீலாங்கா ரேசின் பிஜனின் முன்னாள் தலைவராக இருந்தேன். கடந்த காலங்களில் தலைவராக செயற்பட்டு வேலைப் பளுவின் காரணமாக ஒதுங்கி இருந்தேன். ஆனாலும் இத்துறையில் ஈடுபாடுடைய குழுவினர்கள் மீண்டும் அழைக்கிறார்கள்.கொஞ்சம் காலம் எங்களுடன் சேர்ந்து பணியாற்றுங்கள். இதன் வளர்ச்சிக்கு உதவி செய்யுங்கள் என்று கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர். தற்போது அவர்களுடைய நெருக்குதல் காரணமாக அவர்களுடன் இணைந்து செயலாற்றி வருகின்றேன். அதுவும் ஒரு வருடம் கால அவகாசத்திற்குள் இணைந்து பணியாற்றுகின்றேன்.

**? நீங்கள் இப்புதிய பதவியை ஏற்றுக் கொண்டு முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள்?**

பதவியின் ஒரு வருட கால எல்லைக்குள் பல போட்டிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளேன் நாங்கள் கண்டி மாவட்ட கழங்களின் சம்மேளனமாக இருந்தாலும், கண்டிக்கு அருகிலுள்ள மாத்தளை, குருநாகல், நுவரெலியா, அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் உள்ள புறா வளர்ப்பாளர்களை உள்வாங்கி அவர்களை எங்களோடு இணைத்துக் கொண்டு புறா போட்டிகளை நடத்த திட்டமிட்டுள்ளோம். தற்போது மூன்று கட்டங்களாக ஒரு புறாப் போட்டியொன்றை நடத்தி வருகின்றோம்.

இதன் முதலாவது கட்டம் கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி நடத்தினோம்.இது ஆனமடுவவில் நடைபெற்றது.ஆனமடுவையில் இருந்து கண்டி மாவட்டத்திற்கு பறக்க விட்டோம். இதில் என்ன விசேடம் என்றால் இலங்கையில் இதுவரைக்கும் வரலாற்றில் காணாத புறாக்களின் எண்ணிக்கை 1221 புறாக்கள் கலந்து கொண்டன. இது ஒரு சாதனையாக நாங்கள் கருதுகின்றோம்.

இலங்கையில் இதுவரைக்கும் 1100 புறாக்கள் கலந்து கொண்டதுதான் ஒரு சாதனையாக இருக்கிறது. என்னுடைய தலைமையின் 1221 புறாக்கள் போட்டியில் கலந்து கொண்டன.இந்த சாதனைக்கு எடுத்த காலம் இரு மாதங்களாகும்.நான் இதனை வெற்றிகரமாக செய்துள்ளேன் என்ற மனத்திருப்தி எனக்கு இருக்கிறது.

**? இந்தப் போட்டியில் அதிக புறாக்கள் கலந்து கொள்வதற்கான காரணம் என்ன?**

இன்று இளஞர்கள் புறா வளர்ப்புத் துறையில் அதிகம் ஈடுபாடு காட்டி வருகின்றார்கள் என்பது தான் உண்மை. மறுபுறம் புறா வளர்ப்பு நண்பர்கள் என்னுடைய முகப்புத்தகத்தில் பின்னூட்டத்தில் பதிவு செய்த போது "நாங்கள் நிறையப் பேர் புறாக்களை விற்பனை செய்திருந்தோம்.உங்களோடு இணைந்து செயற்பட வேண்டும் என்ற காரணமாக திருப்பி அந்தப் புறாக்களை வாங்கி சந்தோசத்தில் கலந்து கொண்டோம்" என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

இதன் இரண்டாவது போட்டி மார்ச் மாதம் 23 ஆம் திகதி நடைபெறும்.இது அநுராதபுரத்தில் இருந்து பறக்கவிடப்படவுள்ளது. மூன்றாவது போட்டி மார்ச் மாதம் இறுதியில் இடம்பெறவுள்ளது. இந்த மூன்று கட்டப் போட்டியில் முதலாவது கட்டம் முடிவடைந்துள்ளது.

இந்தப் போட்டியின் மூலம் எங்களுக்கு எந்தவொரு வருமானமும் கிடையாது. நிர்வாகத்தில் கழகங்களில் கொஞ்சம் கொஞ்சமாக பணங்களைச் சேகரித்து இந்தப் போட்டியினை நடத்தினோம். இது ஒரு பெரியதொரு வெற்றியைத் தந்துள்ளது. கடைசி வரைக்கும் பெரியதொரு வெற்றியைத் தரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த முதல் போட்டியின் முடிவுகளை அறிவிக்க வில்லை. மூன்று கட்டப் போட்டி இருப்பதன் காரணமாக இன்னும் போட்டி முடிவுகளை அறிவிக்கவில்லை.

இந்த மூன்று போட்டிகளிலும் ஒருவர் சமுகமளித்து ஆக வேண்டும். வீட்டுக்கு வந்து சேரக் கூடிய இரு புறாக்களை புள்ளி அடிப்படையில் மதிப்பீடு செய்வோம். முதலில் வந்த இரு புறாக்களை தேர்ந்தெடுத்து புள்ளிகள் வழங்குவோம். முதலாவது,இரண்டாவது,மூன்றாவது என புள்ளிகள் வழங்கி தெரிவு செய்வோம். மூன்று போட்டிகளும் முடிந்த பின்னர் கூட்டாக முதலாவது, இரண்டாவது, மூன்றாவது வருபவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைப்போம்.இது தான் எங்களுடைய சம்மேளனத்தின் முதலாவது வேலைத் திட்டம் ஆகும்.




**? இந்தப் புறா வளர்ப்பின் மூலம் எத்தகைய மாற்றங்களைக் காணலாம்?**

எங்களுடைய நண்பர்கள், சகோதரர்கள் மத்தியில் எந்தவிதமான விளையாட்டுக்களிலும் ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை. சோர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றார்கள்.அவர்கள் கூடுதலாக கையடக்க தொலைபேசியில் காலம் நேரத்தை செலவு செய்து வருகின்றார்கள். அவர்கள் சந்தோசமாக இருப்பதை காணோம்.



மனிதர்கள் பணம் பணம் என்று ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்றால் கட்டாயம் அவர்களுக்கு மன நிம்மதி வேண்டும். அவர்களுடைய சிந்தனைக்கு ஒய்வு இல்லை என்றால் எவ்வளவோ பணம் இருந்தாலும் அவர்களால் நிம்மதியாக வாழ முடியாது. அவர்களுக்கு காலப் போக்கில் விரைவில் மரணத்தை தழுவிக் கொள்கிறார்கள்.

புறா வளர்ப்பு என்பது வியாபாரம் அல்ல. இதைத் தொழிலாகச் செய்பவர்களும் செய்யலாம். இதில் அதிகம் ஆர்வம் காட்டுவதன் மூலம் வேறு தேவையற்ற செயற்பாடுகளில் ஈடுபடாமல் தப்பித்துக் கொள்ள அதிகம் வாய்ப்பு இருக்கிறது. தற்போது நம்மை சுற்றி போதை வஸ்துப் பாவனை அதிகளவு காணப்படுகிறது. இப்படியான ஆபத்துக்களில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும். புறா வளர்ப்பு அதிகளவு கால நேரம் தேவை. இது புறா மட்டுமல்ல கிளி அல்லது வேறு பறவையாக இருக்கலாம். ஏதோ ஒரு பொழுது போக்கு அம்சங்களில் இதுவும் ஒரு முக்கிய அம்சமாகும் என நான் கருதுகின்றேன். யாராக இருந்தாலும் தங்களுக்கென ஒரு பொழுது போக்கு அம்சத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள். மனதிற்கு நல்ல மனமாற்றத்தை தரும்.

வீட்டுச் தோட்டச் செய்கையினை நாம் விருப்பமாக செய்தால் அது கூட பொழுது போக்கு அம்சம் தான். அப்பொழுதான் நீங்கள் மன நிம்மதி அடைவீர்கள். வீட்டுத் தோட்டச் செய்கையின் மூலம் பயன்கள் நிறைய இருக்கின்றன.

ஒரு விடயத்தை நாங்கள் வித்தியாசமாக யோசிக்க வேண்டும்.எல்லோரும் யோசிப்பதைப் போன்று யோசிக்காமல் வித்தியாசமாக யோசித்து செயற்பட்டால் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு நிறைய வாய்ப்புக்கள் உள்ளன. பொழுது போக்கு அம்சங்களையும் திறன்படச் செய்தால் அதிலும் பெரு வெற்றி இலக்குகளை அடையலாம். இந்த வெற்றி என்பது மனமாற்றத்தைக் குறிக்கும். அடுத்தவர்களுக்கு தொல்லை இல்லாமல் ஒழுக்க விழுமியங்களோடு வாழ்வதற்கான பெரும் மாற்றத்தையும் காண முடியும்.



**? நீங்கள் இத் துறையின் மூலம் அடைந்த நன்மைகள்?**

..நான் 2012 ஆம் ஆண்டு முதல் இந்த புறா வளர்ப்பு முயற்சியில் ஈடுபட்டு வருகின்றேன்.இதில் எந்தவிதமான பயனையும் நான் காணவில்லை.அதாவது நான் இதன் மூலம் காசு சாம்பாதிக்கவில்லை என்பது தான் யதார்த்தம்.

ஆனால் என்னுடைய தோற்றத்தைப் பார்த்தால் ஒரு இளமையொன்று விளங்கும். ஒரு மனிதனின் தோற்றம் எப்படி மாறும் என்று சொன்னால் அவருடைய சிந்தனையைப் பொறுத்துத்தான் அவருடைய தோற்றம் மாறும். அவர் பழகும் ஆட்களை வைத்துத் தான் அவரது தோற்றம் மாறும். ஒருவரின் சிந்தனையில் குழப்பம் இருக்குமாயின் அவர்களது முகத்தில் அறிந்து கொள்ளலாம்.

நிறைய நபர்களைப் பார்த்தால் அவர்களின் குடும்பத்தினருடன் சந்தோசமாக களிப்பதற்குக் கூட நேரமில்லை. இதுதான் ஆநேகரின் வாழ்க்கையாக அமைந்துள்ளது.எனக்கு எத்தனை கோடி தந்தாலும் இந்தப் புறா வளர்ப்பின் மூலமாக கிடைக்கும் சந்தோசத்திற்கு ஈடாகாது.

என்னிடம் புறா மட்டுமல்ல கிளி மற்றும் ஏனைய பறவைகள் எல்லாம் இருக்கிறது. ஆனால் கிளியின் மூலம் வருமானம் கிடைக்கிறது. ஆபிரிக்கா லவ் பேர்ட், கங்குன், பல வெளிநாட்டுக் கிளிகள் என்னிடம் இருக்கிறது.. இதனை நான் ஒரு வியாபாரமாக செய்கின்றேன். ஆனால் புறாவினை என்னுடைய விருப்பமான விளையாட்டுக்காகவும் பொழுது போக்கிற்காக வளர்க்கின்றேன். ஒன்றில் வருமானம் வருகிறது மற்றையதில் மனநிறைவு வருகிறது.



**? நீங்கள் மிகவும் பிரமாண்டமான முறையில் புறாக்கள் கிளிகள் பறவைகள் வளர்ப்புக்கான கூடொன்றை நிர்மாணித்துள்ளீர்கள்? அது தொடர்பில் சில தகவல்கள்,..**

நாம் எப்பொழுது யோசித்தாலும் ஒரு வித்தியாசமாக ஒரு புதுமையிருக்க வேண்டும் என யோசிப்பேன்.

இந்தப் புறாக்கள் மீது நான் அதிகம் அன்பு காட்டுபவன். நாங்கள் எப்படி வீட்டில் சௌகரியமாகவும் சந்தோசமாகவும் வாழ்கின்றோமோ இந்த புறாக்களும் தங்களுடைய கூட்டில் சந்தோசமாகவும் சௌகரியமாகவும் வாழ வேண்டும் என்ற மனப்பாங்கு என்னிடம் இருந்து வந்தது.

அந்த வகையில் ஒரு அழகான கட்டடக் கலை அம்சங்களுடன் ஒரு புறாக் கூட்டை நிர்மாணிக்க வேண்டும் என்று நான் நீண்ட காலமாக திட்டமிட்டு வந்தேன்.

நான் வளர்க்கும் பறவை எனக்கு விருப்பமாக இருக்கும் போது அந்தப் பறவை வாழும் வீடு எப்படி இருக்க வேண்டும். நாம் இருக்கும் வீடு மாதரித்தான் அவையும் இருக்க வேண்டும். அதுவும் நான் தினசரி பார்க்கிறது போல் இருக்க வேண்டும்.செய்து இரண்டு மூன்று மாதங்கள் போன பின்னர் ஒரு கட்டுரையொன்றை வாசித்தேன்.அதை வைத்து திட்டமிட்ட அடிப்படையில் மிக அழகிய கட்டடக் கலை அம்சங்களுடன் நிர்மாணித்தேன்.

பல நாடுகளுக்குச் சென்றிருக்கின்றேன். புறாக் கூட்டின் பல அழகினை ஜேர்மன், இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளில் பார்த்திருக்கின்றேன் அவர்களுடன் தொலைபேசியில் பேசி புகைப்படத்தைப் பெற்று இலங்கைக்கு அமையக் கூடிய வகையில் வரைந்து நிர்மாணித்துள்ளேன். இதனனை சுமார் 4 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணித்துள்ளேன்.

நான் ஜப்பான் நாட்டில் தொழில் செய்தாலும் இதற்காக வீட்டில் ஒருவரை வேலைக்கு அமர்த்தியுள்ளேன்.

இந்த சந்தர்ப்பத்தில் பேராதனை பல்கலைக்கழகத்தில் ஒரு பேராசிரியர் எழுதிய கட்டுரை ஞாபகம் வருகிறது. நீங்கள் எந்த விசயமானாலும் ஒரு பொழுது போக்காகச் செய்தால் அதனை உங்களது விருப்பத்தோடு செய்யுங்கள். அந்த கட்டுரை ஆக்கத்திற்கு ஏற்ப நான் என்னுடைய பொழுது போக்கை சரியாகவும் திறன்படவும் செய்தேன்.

அந்தப் பேராசிரியருக்கு நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். அவர் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார். அவர் என்னுடைய சிந்தனையை மாற்றியிருக்கிறார். ஒரு பேராசிரியர் ஒருவருடைய சிந்தனையை வாசிக்கக் கூடியவர். ஒவருடைய சிந்தனை எப்படி இருக்கிறது என்று. பல நூறு வருடங்கள் ஆய்வு செய்து கண்டு பிடிக்கப்பட்டு இருக்கலாம்.. இவ்வாறான நிறை விடயங்கள் கற்றுக் கொண்டிருக்கின்றேன்

**? ஜேர்மன் நாட்டில் உங்களது புறா போட்டியில் கலந்து கொண்டமை தொடர்பாக கூறுவீர்களா?**

ஜெர்மன் நாட்டில் என்னுடைய புறாவை பறக்க விட எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் நானும் என்னுடைய நண்பர் ஒருவரும் சேர்ந்து 2020 களில் பறக்க விட்டோம். அந்த நாட்டில் எங்களது தேசியக் கொடியினை பறக்க விட்டு புறாப் போட்டியில் முதலாவதாக கலந்து கொண்ட ஒரு நபர் என்றால் நான் தான்.

நான் அதற்கு முன் ஜேர்மன் சென்று வந்தேன். நான் போட்டியின் போது ஜேர்மன் செல்லவில்லை. என்னுடைய நண்பர் ஒருவர் அந்தப் போட்டியினைப் பார்க்கச் சென்றார். ஜேர்மனியில் நடக்கும் போட்டியில் மூன்று புறாக்களை அனுப்பி பறக்க விட்டேன். எனினும் போட்டியில் வெற்றிபெற சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

சுமார் 2000 புறாக்கள் அப்போட்டியில் கலந்து கொண்டன.

இதில் என்னுடைய ஒரு புறா 47 ஆம் இடம் வந்தது. ஏனைய இரு புறாக்களின் நிலையினைப் பற்றி அறிய கிடைக்கவில்லை. இருந்தாலும் இலங்கையில் இருந்து முதலாவது போட்டியில் கலந்து கொண்ட ஒரு பெருமை இருந்தது. இலங்கையின் தேசிய கொடி அங்கு பறக்க விடப்பட்டது. எந்தெந்த நாடுகள் போட்டியில் கலந்து கொள்கிறதோ அந்நாட்டுக் கொடியில் அங்கு பறக்க விடுவார்கள். இது ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

இது பற்றி பேரியளவில் பேசுவதற்கு ஆட்கள் இல்லை . இந்தப் புறாப் போட்டியினை ஒரு தப்பான கண்ணோட்டத்தில் தான் பார்க்கிறார்கள். புறா வளர்ப்பது சின்னப் பிள்ளைகள்தானே . பெரிய ஆட்கள்; புறா வளர்ப்பதில்லை என்ற வித்தியாசமான கண்ணோட்டத்தில் நோக்குகின்றனர். வெளிநாட்டவர்களை எடுத்துக் கொண்டால் ஓய்வு நிலைக்குச் சென்றவர்கள் கூடுதலான புறா வளர்ப்பாளர்களாக உள்ளனர். இலங்கையில் இளைஞர்கள் இந்த புறா வளர்ப்பில் ஈடுபட்டு வருகிறார். எனினும் அவர்களுடைய கல்விக்கு பாதிப்பு ஏற்படும். இதில் இருந்தால் நேரம் போதாது என்று நினைக்கின்றனர். இதற்குப் பெற்றோர்கள் அனுமதிக்கிறார்கள் இல்லை.ஆனால் அவ்வாறு செய்ய வேண்டாம். ஏனென்றால் இது தப்பான பொழுது போக்கு அம்சமல்ல. பிள்ளைகளை சிறு பராயத்தில் அவர்களைக் கட்டுப்படுத்தும் போது அவர் பெரிய வயதாகும் போது அதனை செய்யத் தோன்றும். எதை வேண்டாம் என்று சொன்னார்களோ அதைச் செய்ய ஆசைப்படுவர். இது தப்பான வழி இல்லை. எங்களுடைய பொழுது போக்குக்கான உன்னதமான ஒரு ஈடுபாடாகும். இதில் ஈடுபடும் பிள்ளைகள் இதை இயலும் என்றால் தொடர்ந்து செய்வார்கள். இல்லையேல் அவர்களுக்கு படிக்க நேரம் போதாது என்று இருந்தால் அவர்கள் இயல்பாகவே அதை விட்டு ஒதுங்கிக் கொள்வார்கள். இதை வளர்க்க விரும்பும் போது தடுக்க வேண்டாம் என்பது என்னுடைய கருத்தாகும்.

இதில் என்னுடைய மகனும் இவ்வாறு தான் இருந்தார். மகனின் ஆசைக்காக புறா வாங்கி வளர்த்தேன். மகனுடைய ஆசைக்கு புறா வாங்கி வளர்க்கும் போது அதில் எனக்கு அதிக ஆர்வம் ஏற்பட்டு விட்டது. அதற்குப் பின்னர் மகனுக்கு காலப் போக்கில் புறா வளர்ப்பதில் ஆர்வம் இல்லாமற் போயிற்று. அவர் இரண்டு வருடங்கள் புறா வளர்ப்பு ஈடுபடுவதை மறந்து விட்டார். இந்த புறா வளர்க்கும் காலத்தில் அவர் கல்வியில் பின்னடையவில்லை.

**? புறா வளர்ப்பு ஆரம்பம் பற்றி**

எனக்கு ஏழு வயதில் இருக்கும் போது புறா மேல் மிகுந்த அன்பு. ஆனால் புறா வளர்ப்பதற்கு தந்தை இடம்கொடுக்கவில்லை. வீடு சிறியது. 1987 களில் ஒருவரிடம் 10 ரூபா கொடுத்து வாங்கி வந்தேன். நான் வாப்பாவிடம் ஒருவர் சும்மா தந்தார் என்று கூறி புறா வளர்ப்பதற்கு வாப்பாவிடம் அனுமதியைப் பெற்றுக் கொண்டேன். வாப்பாவிடம் ஒரு புறாதான் இருக்கிறது. இன்னுமொரு புறாவையும் வாங்கி விடுவோம் என்று கூறி இன்னுமொரு புறாவையும் வாங்கினேன். சின்ன வயதில் இருந்து சுமார் 20 வருடங்களாக புறா வளர்த்து வருகின்றேன். பின்னர் என்னிடம் இருந்த அத்தனை புறாக்களையும் விற்பனை செய்தேன். அதற்குப் பின்னர் வியாபாரத் துறையில் ஈடுபட்டேன்.

1995 களில் முதலாவது கடையொன்றில் தொழிலுக்காகப் இணைந்தேன். அந்த நேரம் சம்பளம் 2000 ரூபாவாகும். இந்தச் சம்பளத்தில் என்னுடைய உம்மா வாப்பாவைப் பார்க்க வேண்டும் என்ற பொறுப்பு இருந்தது. நான் அவர்களுக்காக சம்பாதித்தேன்.2004 ஆண்டில் நான் ஜப்பான் பயணமானேன். தொடர்ந்து இன்று வரையிலும் என் தாய் தந்தையர்களையும் குடும்பத்தினர்களுக்கும் உதவி செய்து வருகின்றேன்.

அது மட்டுமல்ல என்னால் இயன்றளவு சமூக சேவைகளையும் செய்து வருகின்றேன்.

இந்தப் புறா வளர்ப்பின் ஊடாக பல உதவிகள் செய்துள்ளோம். புறா வளர்ப்பவர்கள் மிக நல்லவர்களாக இருப்பார்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்யக் கூடிய காருண்ணிய இதயம் அவர்களுக்கு தானாகவே வந்து விடும். இதை வளர்க்கின்ற போது அந்த இளகிய உள்ளம் வந்து வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நீங்கள் புறா வளருங்கள். அதனையே முழு வாழ்க்கையின் தொழிலாகக் கொள்ளக் கூடாது. புறா வந்து உங்களுடைய பொழுது போக்கு அம்சம் மட்டும்தான். உங்களுடைய கல்வி தொழில்.

ஏதுவாக இருந்தாலும் அதற்குத் தான் முதலில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எமக்கு விருப்பம் இருந்தால் புறா வளர்ப்பதற்கான நேரத்தை ஒதுக்க முடியும். நாங்கள் மனநிம்மதியோடு இருக்கும் போது தான் மன நிம்மதியைத் தேட முடியும்.

# சுதந்திரத்தை பாடுகிறேன்



சுதந்திரம்
பயத்தை சிதைக்கும் அம்பு
சுதந்திரம்
பாதை அமைக்கும் நெம்பு
எனது சுதந்திரம் சுயம்
எமக்கு சுதந்திரம் பயம்
நீ இனி..அச்சம் தவிர்த்து
உச்சம் தொடு
நீ மொத்தத் திசையும்
மோதி எழு
இனியாகிலும்

சுதந்திரம்
அடக்கு முறைக்கான பிரகடனம்
சுதந்திரம்
அடங்கிப் போகாத
புதிர் நடனம்
சுதந்திரம் அச்சமற்றது
சுதந்திரம் விருட்ஷ நாற்றது

சுதந்திரம்
இருளை உடைக்கும் ஒளி
சுதந்திரம்
இலக்கை உணர்த்தும் வழி

இல்லங்களில் சுதந்திர விளக்கு ஏற்றுங்கள்
வெளிச்ச வீடாய் மாற்றுங்கள்
பெண்ணின் சுதந்திரம்
பேணுங்கள்
விண்ணைத்தொட வேண்டுங்கள்
சுதந்திர தாகம் தீருங்கள்
சுவைதனை அறிந்திட நேருங்கள்
நாட்டின் சுதந்திரம்
நமது சுதந்திரம்
சுதந்திரத்தை
பாதுகாப்போம்
சுதந்திரத்தை
பணிந்து ஏற்போம்.

**ரோஷான் ஏ.ஜிப்ரி**
வாங்காமம் இறக்காமம்.

# அலை மங்கையே உனை ஆராதிக்கிறேன்!



எல்லோருக்கும் போல் எனக்குள்ளும்
ஒரு எதிர்பார்ப்பு
ஆனாலும் அந்த எதிர்பார்ப்பானது
கானல் நீர்போல் தூரத்தே தெரிகிறது
கனவுகள் பொய்ப்பது போன்று
எனது எதிர்பார்ப்பும் சிதைகின்றது!

வீட்டில் நிம்மதியிழந்த தவிப்பு
மன அமைதிதேடி கடலோரம் போனேன்
கரையோர மணலில் சப்பானியாய்
அமர்ந்து ஆழிக்காற்றில் விழிமூடினேன்!
அங்கும் வீட்டு நினைவுகளில்
புழுங்கியே தவித்தேன்!

கண் விழித்துப் பார்த்தபோது அவள்
எனை நோக்கி வருவதாய் கண்டேன்
வெள்ளைப் பேரழகில் ஒரு மயக்கம்
அவள் பார்வையிலிருந்து முகம்திருப்பினேன்
வந்த வேகத்தில் கோபாவேஷம் கொண்டு
அவள் திரும்பிச் சென்று விட்டாள்!

என்னால் திரும்பிப்போக முடியவில்லை
எனக்குள் இப்போது இரு தவிப்புகள்
வீடு நோக்கிப் போனால் நிம்மதியில்லை
போகாமல் கடலோரம் தங்கினாலும்
நிம்மதி கிட்டப்போவதில்லை

மீண்டும் வருவாளா வெள்ளை பேரழகி

நிச்சயமாக அவள் வருவாள்
நான் போனாலும் அவள் வருவாள்
அவள் மீது நான் கொண்ட மோகமா?
அன்றி அவள் என்மீது கொண்ட காதலா?
நான் நினைத்து முடிப்பதற்குள்
ஓங்காரமாய் ஓசைகொண்டு அவள் வந்தாள்!

வீடுபோய் நிம்மதி இழபபதைவிட
இவளுக்காக காத்திருப்பது மேல்
அழகான இந்த வெள்ளைச்சியை
கொண்டாடுவது மன மகிழ்ச்சிதான்
உயர்ந்து வரும் வெள்ளைச்சியே
உனை நான் ஆராதிக்கிறேன்!

அந்தி மாலை இருட்டிவிட்ட போதும்
அவளில் நான் மயங்கியே போனேன்
எனை அறியாமல் கண்ணும் அயர்ந்தது
எவ்வளவு நேரம் என நானறியேன்
கண் விழித்துப் பார்த்த போது
வெள்ளைச்சி எனை
அரவணைத்து போய்விட்டாள்!

**கலாபூஷணம் ஈழத்துநூன்**

# நட்பே சுவாசம்



"நட்பு என்பது
உயிரிலும் மேலான
ஓர் உணர்வு...

இந்த உணர்வை
எவராலும் தரவும் முடியாது...

எவராலும் தட்டிப்
பறிக்கவும் முடியாது...

நல்ல நட்பொன்று
கிடைக்காதோ? என்று
ஏங்கும் இதயங்கள்
பல கோடி...
இதில் துடிக்கிறது
எத்தனையோ உயிர்நாடி...

ஓர் நல்ல நட்பு
நூறு தாய்க்கு சமம்...
ஓர் நல்ல நட்பு
ஆயிரம் தந்தைக்கு சமம்...

இப்படி ஓர் நட்பு
எளிதில் எவர்க்கும்
கிடைப்பது கடினம்...
கிடைத்தால் இவ்வுலகில்
நிலைப்பதுவும் சிரமம்...

பணத்தால்
நிறைந்த உலகமிது...
பிணத்துக்கும்
விலைபேசும் சமூகமிது...

சுயநலங்கள் துறந்திடு...
உயிர் நட்பை
சுவாசிக்க நீயும் பழகிடு...!!!

கவிதை காதலன்

**ஏ. ஆர். இஸ்மட்**
பொத்துவில்.

# மாலையிட்டாய்!



நீதூவிய அன்பில்
நிலவுபோல் நின்றேன்
நீங்காத ஆசைகளை
உள்ளத்தில் வளர்த்தேன்!

கட்டிளமைப் பருவம்
கனலாய் கொதித்தன
நித்திய வாழ்க்கைக்காய்
நிஜமே பார்த்து நின்றேன்!

இரவும் பகலும்
உன் நினைவுகள் என்னுள்
ஏற்காத பாரத்தை
சுமந்து நான் நின்றேன்!

நிழல்போல் வந்த செய்தி

நிஜமாய் ஆனது
நீயொருத்தனுக்கு
மாலையிட்டாய் என்று

**தோப்பூர்.எஸ்.சிராஜ்தீன்**
நற்பிட்டிமுனை,கல்முனை

# நிரந்தரம் அல்ல



வலிக்குள் முளைக்
கொண்ட சிறகுகள்
தேடித் தேடித் திரிகின்றன....
தொலைந்த வசந்தங்களை
துரத்திக்கொண்டு!
மிதந்து மிதந்து
காற்றோடு கலக்கின்றன...
சிதைந்த சுதந்திரச் சுகந்தங்களை
நுகரத் துடிக்கின்றன!

தேடிக்கொண்ட
வலிகள் யாவும்
நிரந்தரமே அல்ல
நீ நினைப்பது போல்!
அவ்வப்போது வந்து
ஞாபகத்தீயில்
உயிர்க்காகிதங்களை
எரித்து விட்டுப் போகும்..
சுவாலை பெரிதாக
குளிர் காய்தலும்
பெரிதாகுமோ?

குத்தி விட்ட
முட்களெல்லாம்
இரத்தக்கறையோடு
மறுபடியும் வந்து
காயம் செய்யும்...
உறங்கும் திசுக்களை
உண்டு செரிக்கும்...

வலிகளைக்
கழற்றித் தூர
வீச நினைக்கிறேன்...
துர்லபமே, துன்பமே
என் இதயமும்
ஒன்று சேர்ந்தல்லவா


வீசப்படுகின்றது...
வீழ்ந்து கிடக்கிறது...
குற்றுயிராய்!

வலிக்குள் மூழ்கியெழு!
புடம் போட்ட
திடமான இருப்பென
வலிமை கொண்டு
மீண்டழு!
கோரங்கள் கோணிப்
போகட்டும்!
அவையே
தண்டனைகளைச்
சுமக்கட்டும்!

பழகிப்போன
பாதாளப் பயணங்களில்
சோர்ந்து போக,
அணைந்த விளக்கு
இல்லை நீ...
ஆயிரம் ரோஜாக்கள்
இதழ் விரிக்க
சூரியனாய் முகிழ்த்தெழு...
எண்ணங்களில்
எஃகைப் பூட்டு,
எதிரொலியாய்
எங்கும் பரவு!
வலிகளுக்கு
வலிக்கும் வகையில்!

**ஜலீலா முஸம்மில்,** ஏறாவூர்

# கருவின் வலி



உன் அந்தரங்கங்கள்
வெளிச்சத்துக்கு வந்துவிடுமென்று
வெளிச்சத்துக்கு வரவேண்டிய
என்னை அந்தரங்கமாகவே
அழித்துப் போட்டவளே ..

பருவத்தின் பசி தீர்த்த உனது
பாவத்தின் சம்பளமாக \என்னை
கைகளில் வாங்காமல்
கருவறைக்குள்ளேயே
கல்லறைக்குள் தள்ளி விட்டது
என்ன நியாயம் ?

விதைத்தவர்கள் எல்லாம்
அறுவடைக்கு காத்திருக்க
எவனோ விதைக்க
நிலமான நீ
என்னை அறுவடையாக்க

அறுவறுப்பு அடைந்தவளே
நீ களங்கப் பட்டதால்
உன்னால் கருவறையின் புனிதமும்
களங்கப்படுத்தப் பட்டதை
அறியாயா நீ ?

யாரோ எழுதிய கவிதை என்று
எவரும் வாசிக்காமல்
போகக் கூடுமென்றும்
நீ எழுதிய கவிதையை
நீயே அழித்துவிட்டு
நிம்மதி கொண்டவளே,,,

உனக்குத் தெரியுமா
நீ அழித்தது ஒரு
மகாத்மாவோ இல்லை
புத்தனோ காந்தியோ
அன்னை தேரேசாவோ
என்ற உண்மை ?

விதைத்தது எல்லாம்
முளைக்க ஆசைவைக்கும்
விவசாயிகள் கொண்ட பூமியில்
உன் குடிசை விவசாயத்தில்
முளைக்கும் முன்பே என்னை
கருவறுத்தவளே..

வெளிச்சத்தின் விலாசம்
நான் காணும் முன்னால்
இருட்டின் இருப்பிடத்தை
பரிசளித்து குளிர்ந்தாய் நீ .

குஞ்சு பொரிக்கத் தெரியாத போதும்
காக்கையின் கூட்டில்
முட்டையிட்டு ஒதுங்கிக் கொள்ளும்
குயிலின் மனசுக் கூட

உனக்கிலாத போது
நீ மானிடமாய் பிறந்தது
மாபெரும் பாவம் .

கர்ப்பத்துக்கே
கொள்ளி வைக்கும்
உன் காதகத்தனத்தால்
என் கனவுகள்
சிதைக்கப்பட்ட போதும்
கனவுகளே இல்லாதிருக்கும்
என் தம்பி தங்கைகளை
உன் இச்சைகளால்
செதுக்கி நீ சிதைக்காதே

கருச்சிதைவின் போது
உனது வலி ஒரு நேரம்தான்
உரு சிதைந்த எனது
உயிரின் வலியோ
ஒவ்வொரு ஜென்மத்துக்கும்

உன் உருவிற்கு
உருகும் மனமில்லாதபோது
நீ சுமந்த
கருவிற்கு அது ரொம்பத்தாராளம்

அதனால்
மறவாதே நீ ..
விதைப்புகள் சிதைப்புகளுக்கல்ல
விதை புகழ் சிதை புகழும் அல்ல
அது வேர்களை தாங்கும்
நிலங்களின் தார்மீகம்

**மெய்யன் நடராஜ்**
வத்தளை

# இடரிவிழுந்த பூக்கன்று

இடரிவிழுந்த
பூக்கன்று பனியில் நனைந்து
சுடுவெளியில் காய்ந்து
பருக
பச்சைத் தண்ணீருமின்றி
உரமுமின்றி
வெறித்தனமாய் வீசும் புயலுக்கு
அடிபட்டு மிதிபட்டு
முளைத்த கிளைகள் மேல்
கருவண்டு மொய்க்க

மகரந்தச் சேர்க்கையுடன் கர்ப்பமாகி
குட்டிகள் ஈண்டு பூச்சாடிக்குள்
அழகுகாட்டி
குடும்பமாய் வாழும்
பூக்கண்டுகள் நாங்கள்.
பார்த்தால்
நிலவை மறைக்கும்
கொள்ளை அழகு
பூச்சாடியில்
கொத்து கொத்தாய்

வண்ண வண்ண நிறங்களில்
பூத்திருக்கும் பூக்கள்
இரும்பு வலையில் சிக்கின மீனைப் போல
சிக்குண்ட
நீண்ட கருங் கூந்தலிலும்
வாடின பூக்கள் கசங்கிப் போய்
புன்னகைக்காமல்
விரக்தியோடு பூத்திருக்கும்
எழும் பசிகளுக்கு
உடலையும் உதிரத்தையும்
உறிஞ்சி
சுவைக்க குடிக்கக் கொடுத்து

இருண்ட வீட்டிலும்
வெளிச்ச விளக்குகள் ஏற்றி
பிண ஊர்த்தியாய்
உதிர்ந்து போன
பூக் கன்றுகள் நாங்கள்.
போதைக்கு அடிமையாய்
கூர்மையாய் கத்தியைத் தீட்டி
கழுத்தில் கை வைக்கும்
கரிவண்டுகள்
பறந்து திரிகின்றன.
குளிர் பானமாய்
தூளாய்

ஊசி மாத்திரையாய்
மருந்துப் பானமாய்
ஒவ்வொரு பூச்சாடிகளின்
கண்ணீரைச் சுவைத்துக் கொண்டு
இரைந்து மொய்க்கும்.
மணமேடையில் இரும்புச்
சங்கிலியால் மூன்று முடிச்சிப் போட்டு
கைவிலங்கிட்ட இளம் பூக்கன்றுகள்
உயிரை மாய்த்துக் கொள்ளப்
பார்க்கின்றன.

**இக்பால் அலி**

# காதலின் பிரிவும் காத்திருப்பும்



சங்க இலக்கியங்கள் காதல் சுவைமிகுந்தவை. தலைவனின் வருகைக்காக ஏக்கத்தோடு காத்திருக்கும் ஒரு தலைவியின் உள்ளக் கிளச்சியினை இப்பாடல் சித்தரிக்கின்றது.

முல்லை மலர்களும் எள்ளி நகையாடுகிறதே என கவலை கொள்கிறாள். தலைவி. இளமை வீணாக கழிகிறது தலைவன் எங்குள்ளானோ எங்கு சென்றானோ என ஏங்கி தவிக்கின்றாள் தலைவி இளமைக் காதல் சுகமானது அந்த இதமான நாட்கள் எல்லாம் இன்பமின்றி வெறும் ஏக்கத்தூடு வீணாகிப்போகின்றதே என தலைவி தன் தோழியிடம் இவ்வாறு கூறி அழுது புலம்புகின்றாள்.

தோழியே பொருள் தேடுவதற்கு முன்னுரிமை கொடுத்து என்னைப்பிரிந்து சென்று, என் உணர்வுகளை மீட்டிச் சென்ற என் ஆருயிர் தலைவன் கார்காலம் வருமுன் மீணடும் வருவேன் என்றானே. ஆனால் கார்காலமும் வந்தது. முல்லை மலர்களும் மலர்ந்தன. என் ஆசைகளும் கண்ணீரில் கரைகின்றனவே. என் அழகிய இளமையும் வீணாகிப்போகின்றதே.

இன்றுவரை என்னை நோக்கி என் தலைவன் வரவில்லையே. நான் என்ன செய்வேன்.

என்று புலம்பும் காட்சியினை இருத்தல் எனும் முல்லை நிலத்தின் அகத்திணை ஒழுக்கமாக வைத்து பாடல் அமைத்துள்ளார் புலவர் ஒக்கூர்மாசாத்தி.

## சங்க இலக்கியத்தின் தனித்துவம் கூறும் முல்லை நில அகத்திணை

**“இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்**
**இவணும் வாரா ரெவண ரோவெனப்**
**பேயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை யிலங்கெயி றாக**
**நகுமே தோழி நறுந்தண் காரே”**

தலைவி தன் தலைவனின் வருகைக்காக எதிர்ப்பார்த்துக் காத்திருக்கின்றாள். அழகிய இளமைப்பருவம் நிலையற்றது. இந்த இளமை வீணாக கழிந்து.போனால் மீண்டும் பெற முடியாதது. அவ்வாறே இந்த இளமைக் காலத்தின் அன்பின் பரிமாற்றங்களை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாது. அத்தகைய இளமைக்காலத்தை தன்.சிரம்மேற் கொள்ளாமல் அந்த இன்பத்தினை அனுபவிக்காமல் எக்காலத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய சாதாரண பொருட் செல்வத்தை நாடி தலைவன் சென்று விட்டானே.

மீண்டும் கார்காலம் வருமுன் வருவேன் உன்னோடு வாழ்வேன் என்று சத்தியம் உரைத்து சென்ற தலைவன் வரவில்லை. அவன் கூற்று பொய்யாகி விட்டதே. கார்காலமும் முல்லை மலர்களும் தலைவியை பார்த்து ஏளனமாக சிரிக்கின்றதே. அதனால் தலைவி ஆறாத்துயர் கொள்கிறாள்.

அந்த அழகிய முல்லை மலர்கள் சிரிப்பதை “தொகுமுகை இலங்கெயிறாக”என்ற உருவக அணியின் மூலம் மிகத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகிறார் புலவர்.

இது புலவரின் கவித்துவ சிறப்பினை எடுத்துக்காட்டுவதோடு சங்க இலக்கியத்தின் தனித்துவத்தினையும் பறைசாற்றி நிற்கின்றது.

ஜயகுமார் ஷான் ...
மொனராகலை.

# கலைக் கதம்பம்

சைத்திரியன்



### புன்னகை

நண்பர்கள் என்ற
செல்வம் உன்னை
தேடிவர புன்னகை
என்ற ஒரு கருவி
மட்டும் உன்னிடம்
இருந்தால் போதும்

### நிலையானது

சொந்தங்கள் என்பது
பனித்துளி போன்றது
சிறு பொழுதில்
மறைந்து விடும்
நட்பு என்பது பரந்த
வானம் போன்றது
உன்னை சுற்றி
எப்போதும்
நிலைத்து நிற்கும்

### உண்மை நட்பு

கண் விழித்ததும் கலைந்து
போகக் கூடியது
நட்பு அல்ல.
கண் மூடும் வரை
தொடர்ந்து வருவதுதான்
உண்மையான நட்பு

### தொடரும் நட்பு

புன்னகை ஒன்றே போதும்
நண்பர்களை சேகரிக்க
புதைந்து போகும் வரை
தொடர்ந்து வரும் நல்ல நட்பு

### சாதனை

தட்டிக் கொடுக்க
நண்பன் இருந்தால்
வேதனையும்
சாதனையாகும்!

-மொழி

## பேராசிரியர் நந்தி அரங்கில்

# கலை இலக்கிய வாழ்வில் மு. சிவலிங்கம் நிகழ்வு இன்று

நிகர் கலை இலக்கிய அரங்கத்தின் ஏற்பாட்டில் கலை, இலக்கிய, சமூக வாழ்வில் மு. சிவலிங்கம் நிகழ்வு பேராசிரியர் நந்தி அரங்கில் இன்று மாலை 6.00 மணிக்கு சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெறவுள்ளது. சிரேஷ்ட எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சமகால அரசியல் குரலாக மு. சிவலிங்கத்தின் படைப்புகளும் பங்களிப்பும் என்ற தொனிப்பொருளில் மல்லியப்பூ சந்தி திலகர் உரையாற்றவுள்ளார்.இனவரைவியல் நோக்கில் மு. சிவலிங்கத்தின் ' பஞ்சம் பிழைக்க வந்த சீமை' நூல் ஒரு நோக்கு என்ற தொனிப்பொருளில் ஜே. சற்குருநாதன் உரையாற்றவுள்ளார். மு. சிவலிங்கத்தின் 'உயிர்' நாவல் ஒரு மதிப்பீடு என்ற தொனிப்பொருளில் சட்டத்தரணி ஜி. ராஜகுலேந்திரா உரையாற்றவுள்ளார். மு. சிவலிங்கத்தின் 'சிறுவர் பண்ணைகள்' சிறுகதைத் தொகுப்பு ஒரு அவதானம் என்ற தொனிப்பொருளில் ஜேம்ஸ் விக்டர் உரையாற்றவுள்ளார். மலையக புனைக்கதை கோட்பாட்டுத் தளத்தில் மு. சிவலிங்கத்தின் புனைவுகள் என்ற தொனிப்பொருளில் க. தவச் செல்வன் உரையாற்றவுள்ளார்.

# உலகளாவிய மாபெரும் திருக்குறள் கவிதைப் போட்டி

**திருக்குறளில் மரபுக்கவிதை**

ஒரு அதிகாரம் ஒரு பா ஒரு கவிஞர்.

133 அதிகாரம். 133 கவிஞர்கள் 133 மரபுக் கவிதை.

பேராசிரியர் சே. பானுரேகா மற்றும் கவிஞர் அகணி சுரேஸ் ஒருங்கிணைப்புடன் புலவர்கள் கூடும் கவியரங்கம்.

உலகத் திருக்குறள் மையத்தின் தலைவர் முனைவர் பேராசிரியர் கு. மோகனராசு நிகழ்வில் தலைமை வகிப்பார்.

ஞான பீட விருதாளர் முனைவர் குமரிச்செழியன் வாழ்த்துரை வழங்கவுள்ளார்.

இதுவரை எடுக்காத அதிகாரத்தின் பொருளுக்கான கவிதையை மரபு வடிவில் வழங்க வேண்டும்.

**உலக சாதனை நிகழ்ச்சி**

திருக்குறளில் மரபுக்கவிதை.

ஒரு அதிகாரம் ஒரு பா ஒரு கவிஞர் என்ற மகுடத்தில் இடம்பெறவுள்ளது.

★133 அதிகாரம்
★133 கவிஞர்கள்
★133 மரபுக் கவிதை

**வரையறை:**

★24அடிகள்
★ஏதேனும் ஒரு மரபுக்கவி
வடிவில் எழுதலாம்.
விருத்தம் என்றால் ஆறு விருத்தம்.
அளவடி வெண்பா என்றால் ஆறு வெண்பா
ஆசிரியப்பா என்றால் 24 அடி.
தொடர்பு கொள்ளுங்கள்.
உலகச் சாதனை கவிஞராக மாறுங்கள்

**தொடர்புகளுக்கு:**

பேராசிரியர் சே. பானுரேகா
6369086212
கவிஞர். அகணி சுரேஸ்.
+14167328021.

(ஸ)




# நல்லிணக்கத்தை பறைசாற்றும் நடனம்

நீதியமைச்சினால் கிளிநொச்சியில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் இன நல்லிணக்கத்தை பறைசாற்றும் வகையில் நிகழ்த்தப்பட்ட நடனக் காட்சியைப் படத்தில் காணலாம்.

# நல்ல கவிதை என்பது எது?

தமிழ் மகத்தான செவ்வியல் பாரம்பரியம் கொண்ட ஒரு மொழி. செவ்வியல் என்பது என்ன என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படலாம். பண்பாட்டு மரபின் அடிப்படைகளை உருவாக்கும் தொடக்ககாலப் படைப்புகளைக் கொண்டிருக்கும் மொழியைச் செவ்வியல் என்கிறோம்.

அவ்வகையில் சங்க இலக்கியம் நமக்குச் செவ்வியல். மொழியின் மிக உச்சமான சாத்தியங்களை நிகழ்த்திக்காட்டிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன. அத்தகைய மொழி மரபிலிருந்து இன்று உருவாகும் நவீன கவிதைகள் ஏதோ ஒருவகையில் சங்கப்பாடல்கள் கொடுக்கும் அதே வகையான உணர்வெழுச்சியை வழங்குவதாய் உள்ளன.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நவீன கவிதை குறித்த தீராத வாசிப்பில் இருக்கும் எனக்கு நவீன கவிதைகள் ஏதோ ஒருவகையில் சங்கப்பாடல்களோடு பொருந்தி போவதைப் பார்க்க முடிகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழில் நிகழ்ந்துகொண்டிருக்கும் தொடர்ச்சியான கவிதை சாதனைகள் குறித்து நினைத்துப் பார்க்கும் இத்தருணத்தில் நல்ல கவிதை என்பது எது என்ற கேள்வியை முன்வைப்பது அவசியம்.

இதற்கு ஒரே வரியில் என்னால் பதில் சொல்ல முடியுமானால் ‘மௌனம்’ என்பேன். கவிதையில் தேவைப்படும் மௌனம் குறித்து அறிய சங்கப்பாடல்களின் உதாரணங்களில் இருந்தே தொடங்கலாம்.

இரவின் தனிமை குறித்தும் அந்த பேரமைதி அதிகரிக்கும் துன்பம் குறித்தும் சங்க இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன.

**அணிமிகு மென்கொம்பு ஊழ்ந்த**
**மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே**

என்ற குறுந்தொகை பாடலின் இறுதி அடிகளை தூக்கம் வராத இரவுகளில் பலமுறை நான் சொல்லிப் பார்ப்பதுண்டு. அந்தப்பாடலை எழுதிய கொல்லன் அழிசி சொல்கிறார் மலர் உதிர்ந்த ஒலி அவருக்கு ஊர் உறங்கிய அரவமற்ற இரவில் கேட்டதாம்.

இதைதான் கவிதையில் தேவைப்படும் மௌனம் என்கிறேன். மௌனம் என்பது குறிப்பால் உணர்த்துவது. அத்தனை உக்கிரமான இரவின் தனிமை கொடுக்கும் வலியை, வதையை ஒருவர் ஒரு மலர் உதிரும் ஒலியில் முடிப்பதுதான் மௌனம்.இதுபோன்றதொரு வலிமிகுந்த இரவின் கண்ணீரை வெண்கொற்றனாரும் எழுதியுள்ளார். அதன் இறுதி வரி இவ்வாறு முடியும்.




**தானுளம் புலம்புதொறும் உளம்பும்**
**நாநவில் கொடுமணி நல்கூர் குரலே**

தாளமுடியாத துயருடன் புரண்டு படுத்தபடி இரவெல்லாம் நான் கேட்டுக்கொண்டிருக்கும் தொழுவத்து எருமையின் கழுத்து மணி ஓசை வேறு யாருக்கும் கேட்டுக்கொண்டிருக்குமா எனும்போது இன்றைய நவீன கவிதையை வாசிக்கும் அத்தனை அனுபவங்களும் அதில் கிடைக்கின்றன.

நவீன கவிதைகள் நவீன வாழ்க்கையோடு பின்னிய ஒரு இரவையே நமக்குக் காட்டுகிறது. கவிஞர் சல்மாவின் ஒரு கவிதை,

**நள்ளிரவுப் பிரயாணத்தைக்**
**கிளர்ச்சியூட்ட**
**தொலைதூரத்தில் கூவும்**
**பறவையிடம் இல்லை**
**சூழ்ச்சிகள் எதுவும்**
**மின்னும் நட்சத்திரங்களினூடே**
**என்னைப் பயணிக்கச் செய்வதைத் தவிர**

இரவு என்பது இன்னொரு உலகம். இரவு நம் நிலப்பரப்பை மூடும் மாபெரும் நிழல். பகலில் நாம் காணும் ஒவ்வொன்றும் இரவில் வேறொரு அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஒரு பறவையின் ஒலிகூட கவிஞர் சல்மாவுக்குக் கிளர்ச்சியூட்டக்கூடியதாக உள்ளது.

அது அவரைப் பறவையாக்குகிறது. நட்சத்திரங்களினூடே பயணிக்கவும் வைக்கிறது. ஆனால் கவிஞர் அதை சூழ்ச்சி என்கிறார். என்னவகையான சூழ்ச்சி என யோசிப்பதுதான் வாசகனின் கடமை. அவரை தனிமையிலிருந்து மீட்கும் சூழ்ச்சி அது. ஒரு பொய்யை உண்மையென நம்ப வைக்கும் சூழ்ச்சி அது. அப்படியானால் கவிஞர் சூழ்ச்சிகளால் மனம் நொந்திருக்கிறார்.அவற்றோடு ஒப்பிடுகையில் இந்தப் பறவையில் சூழ்ச்சி அவருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது.

இவ்வாறு இரவுகளை இழந்து விடிய விடிய விழித்திருப்பதும் சில சமயம் கவிதையாகி விடுகிறது. கவிஞர் பூங்குழலி வீரன் சொல்கிறார்,

**விடிய விடிய கண்விழித்து படுத்திருந்தேன்**
**உன்னால் உணர முடியுமா**

அன்றுதான் நான் நிம்மதியாக தூங்கி இருந்தேன் என தூக்கம் கொடுக்கும் பேரமைதியைத் தூக்கமற்ற விழிப்புநிலை அவருக்குக் கொடுக்கிறது. காரணம் விழிப்பு தனது அன்பானவரை நினைத்துக் கொண்டிருப்பதற்கான அவகாசம் தருவதால். அந்தக் கவிஞருக்கு அதுவே முழுமையான நிம்மதி. சட்டென சங்கப்பாடல்களில் வரும் தலைவியின் ஏக்கம் போல தொணிக்கிறது பூங்குழலியின் கவிதை. அதே மௌனத்துடன். வாசகன் இன்னும் இன்னும் நிரப்பிக்கொள்ள இடைவெளியை விரித்தபடி.ஒரு குறுந்தொகை இப்படி முடிகிறது. ‘கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே’. ஆம் இரவு என்பது ஒரு மாபெரும் வெள்ளம். அந்த வெள்ளம் கடலைவிட பெரியது. அதை நிம்மதியின்றி விழித்திருப்பவர்களால் மட்டுமே உணர முடிகிறது. கவிஞர்கள் எல்லா காலத்திலும் அந்த இருளைப்பற்றிப் பேசிக்கொண்டே இருப்பது ஆச்சரியம்தான்.

ம.நவீன்...

# கிழக்கின் குரல்









மட்டக்களப்பு செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்ட பட்ஷ மஹா கும்பாபிஷேக திருக்குட முழுக்கு பெருஞ்சாந்தி விழா நேற்று நடைபெற்றது. வரலாற்றில் முதல் தடவையாக சுவாமி யானையில் ஏறி பவனி வந்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்: ஏறாவூர் நிருபர்)

## கிழக்கு மாகாணத்தில் நான்கு மாதிரி எரிபொருள் நிரப்பு நிலையங்கள்

### கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

*பாலமுனை விசேட நிருபர்*

சுபீட்சத்தின் நோக்கு விசேட வேலைத்திட்டத்திற்கமைவாக, கிழக்கு மாகாணத்தில் நான்கு மாதிரி எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம். அஸ்மி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, மற்றும் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் எதிர்நோக்கும் இடர்களுக்கு தீர்வுகாணும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் (10) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,



சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்திற்கமைவாக, கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அந்தவகையில், அரச கட்டுப்பாட்டு விலையில் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவதற்கு கோப்பிறஸ் விற்பனை நிலையங்களை திறந்து வைத்து வருகிறோம்.

அத்துடன், கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பராமரிப்பின் கீழ் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளோம். அதற்காக எமது கூட்டுறவுச் சங்கங்களின் பராமரிப்பின் கீழுள்ள 27 எரிபொருள் நிலையங்களில், நான்கு எரிபொருள் நிலையங்களை மாதிரி எரிபொருள் நிரப்பு நிலையங்களாக அபிவிருத்தி செய்யவுள்ளோம் என்றார். இக்கலந்துரையாடலின் போது, பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டதுடன், புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைத்து பலநோக்கு கூட்டுறவு சங்கங்களை சக்திமிக்கதாக மாற்றுவதற்கும் இணக்கம் காணப்பட்டது.



தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு 35 தென்னங் கன்றுகள் வழங்கி (7) வைக்கப்பட்ட போது. (படம்: முள்ளிப்பொத்தானை குருப் நிருபர்)

## அங்கவீனமுற்ற குடும்பத்தினருக்கு வீடமைப்பு உதவி

*(பெரியநீலாவணை விசேட நிருபர்)*

நிந்தவூர் பிரதேச செயலகத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அங்கவீனமுற்றுள்ள குடும்பத்தினருக்கு சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையில் வீடமைப்பு உதவித் திட்டத்திற்கு என ஒரு இலட்சம் ரூபா நிதிக்குரிய காசோலையை வழங்கிவைக்கும் நிகழ்வு (11) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

உதவிப் பிரதேச செயலாளர் திருமதி ரி.ஜெஸான் பயனாளிக்கு காசோலையை வழங்கிவைத்தார்.

நிகழ்வில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.முஜீப், முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.எச். மின்னாஹ் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.



## திருமலை ஊடகவியலாளர் சங்கம் – கனேடிய ஆலோசகருக்கும் இடையிலான சந்திப்பு

*றொட்டவெவ குறூப் நிருபர்*

கனேடிய அரசியல்,வர்த்தக ஆலோசகர் மற்றும் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்துக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. திருகோணமலை அலஸ் தோட்டம் பகுதியிலுள்ள உல்லாச விடுதியொன்றில் நேற்று முன்தினம் (10) பிற்பகல் 12. 30 மணிக்கு இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

கனேடிய உயர்ஸ்தானிகரத்தின் அரசியல் மற்றும் வர்த்தக ஆலோசகரான டேனியல் பூட் சமகால நிலவரம் பற்றி கலந்துரையாடியதுடன் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களின் அபிவிருத்தி குறித்தும், ஊடகவியலாளர்களை வலுவூட்டல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பின் போது திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் செயலாளர் ஏ.ஜே.எம். சாலி, எஸ்.சசிகுமார் மற்றும் திருகோணமலை நகராட்சி மன்ற உறுப்பினரும் முன்னாள் ஊடகவியலாளருமான வடமலை ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

## மூங்கிலாறு சமுலையடிவட்டை பாதை சீர்கேட்டால் மக்கள் அவதி

*மண்டூர் குறூப் நிருபர்*



போரதீவுப்பற்று பிரதேச சபையின் மண்டூர் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட மூங்கிலாறு சமுலையடிவட்டை பாதை, குண்டும் குழியுமாக காணப்படுவதால் பாதையைப் பயன்படுத்துவோர் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மட்டு. மண்டூர் 14 ஆம் கிராம சந்தியிலிருந்து மூங்கிலாறு பாலத்தின் ஊடாக நெடியவட்டை, ஆணைகட்டியவெளி, சின்னவத்தை ஊடாக கொணகொல்லை அம்பாறை மகோயா பாதையை சென்றடையும் பிரதான பாதையே இவ்வாறு சேதமடைந்து காணப்படுகிறது.

பாதை சேறும், சகதியுமாக காணப்படுவதனால் அவசரத் தேவையின் நிமித்தம் பயணிப்போர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தொலைதூர மாற்றுப் பாதைகளை பயன்படுத்த வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்படுதாகவும் தெரியவருகிறது.

பொதுமக்களின் அவசிய தேவை கருதி நிரந்தரமாக புனரமைப்பதற்குரிய வழி வகைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மட்டு.அரச உத்தியோகத்தர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி

*மட்டக்களப்பு விசேட நிருபர்*



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கான கொவிட் 19 பூஸ்டர் தடுப்பூசி இராணுவத்தினரால் நேற்று (11) ஏற்றப்பட்டது.

அக்காலப் பகுதியில் பூஸ்டர் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ள தவறியவர்கள் மற்றும் கொரோனா வைரஸ் தாக்கத்திற்குட்பட்டு குறித்த காலத்தினை கடந்திராத அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கான தடுப்பூசியயே நேற்று இராணுவத்தினரால் ஏற்றப்பட்டது.

நாட்டில் கொரோனா பரவல் மேலும் அதிகரித்துவரும் நிலையில் ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானவர்களே அதிகம் இனங்காணப்பட்டு வருவதாக சுகாதார பிரிவு தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை முற்றாக கடைப்பிடிப்பதுடன் பூஸ்டர் தடுப்பூசியினை ஏற்றிக் கொள்வதனால் மாத்திரமே கொவிட் மரணங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் சுகாதாரப் பிரிவு மக்களை அறிவுறுத்தி வருகின்றது.

## நாற்று மேடையாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு

*ஒலுவில் விசேட நிருபர்*



அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சௌபாக்கிய தேசிய விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கமைய வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு நாற்று மேடையாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் வியாழக்கிழமை (10) நடைபெற்றது.

பண்ணை முகாமையாளர் எம்.ஐ. சியாத் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எம். எப்.ஏ. சனீர் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபிர் ஆகியோர் கலந்து கொண்டு வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை தொடர்பாக விளக்கமளித்தனர்.

பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்டம், கூட்டெரு உற்பத்தி மற்றும் நாற்று மேடை முகாமைத்துவம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இதில் வளவளர்களாக அட்டாளைச்சேனை விவசாய விரிவாக்கல் நிலையப் பொறுப்பதிகாரி விவசாயப் போதனாசிரியர் ஏ.எச்.ஏ. முபாறக், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான எச்.ஏ. நாசிக் அஹமட், எஸ். ரேனுகா ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியளித்தனர்.

**நாமல்ஓயாவில்**

## அம்பாறை மாவட்ட பிரதேச சபை தவிசாளர்களின் ஒன்றுகூடல்



*காரைதீவு குறூப் நிருபர்*

அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச சபைகளின் தவிசாளர்களது ஒன்றுகூடல் அம்பாறைக்கு மேற்கேயுள்ள நாமல் ஓயா பிரதேச சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் பிரதேச சபைகளின் செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினியின் நெறிப்படுத்தலில், நாமல்ஓயா பிரதேச சபை தவிசாளரினுடைய தலைமையில் இவ் ஒன்றுகூடல் இடம்பெற்றது .

அதன் போது கடந்த கால பிரதேச சபையினுடைய செயற்பாடு எதிர் கால செயற்பாடு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

எதிர்கால திட்டமிடல் தொடர்பாக பல முன்னுதாரணமான கருத்துக்களை தவிசாளர்களும் செயலாளர்களும் முன்வைத்தனர். மூவின பிரதேச சபைகளுடைய வழிநடத்தல்கள் இங்கு ஆராயப்பட்டது.





தங்கவேலாயுதபுரம் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்ட பப்பாசி மற்றும் மரவள்ளி கிழங்கு போன்றவை விவசாயப் போதனாசிரியர் எஸ்.சித்திரன் தலைமையில் அறுவடை செய்யப்பட்டதுடன் விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ. ஜே.கே முத்துபண்டா, மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி எஸ். எம் ஹுசைன், பிரதி விவசாயப் பணிப்பாளர் டி.எம்.எஸ்.பி திசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தர்மகுலசிங்கம் தர்மேந்திராவுக்கு கலைஞர் சுவதம் விருது

ஊடகவியலாளரும், கலை இலக்கிய செயற்பாட்டாளருமான தர்மகுலசிங்கம் தர்மேந்திரா 2021 ஆம் ஆண்டுக்கான கலைஞர் சுவதம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

காரைதீவு பிரதேச செயலகம், அம்பாறை மாவட்ட செயலகம், பிரதேச கலாசார அதிகார சபை ஆகியன இவரின் கலை முயற்சிகளை ஏற்று அங்கீகரித்த நிலையில் கலாசார திணைக்களத்தால் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

விருது வழங்கும் விழா அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் ரீ. எம். எம். அன்சார் தலைமையில் கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்றது. இதில் பேராளர்களாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எம். ஏ. டக்ளஸ், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே. ஜெகதீசன், காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தார்கள்.






74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தெல்கொட மஹாமெவனாவ பௌத்த கல்லூரி மற்றும் தமிழ் பாடசாலைகள் இணைந்து நடத்திய விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.




ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதரகத்தின் ஈரான் கலாசார நிலையம் ஒழுங்கு செய்த ஈரான் இஸ்லாமிய புரட்சியின் 43 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஈரான் திரைப்பட விழா அண்மையில் கொழும்பு தேசிய நூலகத்தில் நடைபெற்றது. விழாவின் பிரதம அதிதியாக ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதுவர் ஹஷேம் அஷ்ஜாஸ்தேஹ் திரைப்பட விழாவை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் தேசிய நூலகத்தின் பணிப்பாளர் நாயகம் டப்லிவ். சுனில், ஈரான் கலாசார நிலைய பணிப்பாளர் பஹ்மான் மொஸாமில் மற்றும் எஸ்.எல். மதனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

படங்கள்: ரூசைக் பாரூக்


BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk


## பிழை திருத்தம்

### மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை

### ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பு

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு உரித்தான, செயற்படாத தேயிலைத் தொழிற்சாலைகள், களஞ்சியசாலைகள் மற்றும் காணிகளைக் குத்தகைக்கு விடுவதற்காக 2022.02.07 அன்று தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு, நாவலப்பிட்டிய நாகஸ்தென்ன தேயிலைத் தொழிற்சாலையும் அடங்குவதாக அறிவித்துக்கொள்கின்றேன். ஏனைய விபரங்களிற்காக மேற்படி பத்திரிகை அறிவித்தலைப் பரிசீலிக்கவும்.

**தலைவர்,**
**மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை**
**தொ.பே. - 011-5733112**

## விஷேட அற்றோணித்தத்துவத்தை இல்லாதொழித்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தெஹிவளை, களுபோவில, யசோதரா மாவத்தை, 74 ஆம் இலக்கத்திலுள்ள 742860825V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் உரிமையாளராகிய **ஹான்ஸ் வில்ஹெம் தோமஸ்** (Hans Wilhem Thomasz) ஆகிய நான் கொழும்பு பிரசித்த நொத்தாரிஸ் **மனுகுலசூரிய பாலபுவாதுகே அனுல ரஞ்சினி மெண்டிஸ்** என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 3266 என்ற இலக்கத்தையுமுடையதும் 2021 ஜுலை 26ஆம் திகதியிடப்பட்டதும் 682840072V என்ற தேசிய அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய நுகேகொட, கங்கொடவில, இறப்பர் வத்த வீதி, 10ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவரும் எனது சார்பில் எனது அற்றோணித்தத்துவக்காரராக செயற்படுவதற்காகவும் என்னால் நியமிக்கப்பட்டவருமான **ஹெட்டி ஆராய்ச்சிகே உதயஜித்** என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவமானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டுள்ளதெனவும் மேற்கூறப்பட்டுள்ள அற்றோணித்தத்துவத்தினால் எனது அற்றோணியாக செயற்படவும் அவரினால் எனது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை, செயற்பாடு மற்றும் கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பேற்கமாட்டேன் என இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**ஹான்ஸ் வில்ஹெம் தோமஸ்**
2022.01.24

## சிறு விளம்பரம்

காணி/தோட்டம் 616

வீடு சொத்து

**கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

கொழும்பு5, நாரஹேன்பிட்ட, தாபரே மாவத்தை, 03 பேர்ச் காணியுடன் வீடொன்று விற்பனைக்கு. பிர தா ன பாடசாலைக ள், எல்விட்டிகல வீதி, கிரிமண்டல வீதி , ராஜகிரிய வீதி, ர யி ல் நிலையம் ஆ கியவற்றிற்கு அண்மையில். தொ.பே. 0759262609. 010799

## கவனிக்கவும்

### வழக்கறிஞரின் சாதாரண அதிகாரத்தை ரத்து செய்தல்

டல்லாஸ் ஜுட் மார்ஸ்டன் இல 9F, நெல்லிகஸ்கொட வத்த, கிரிபத்கும்புர, திருமதி. எஸ்.எம்.பி. பத்ரா சிறிவர்தன நொட்டரி பப்ளிக் மூலம் சான்றளிக்கப்பட்ட 10/04/2019 திகதியிட்ட 6296 பொது வழக்கறிஞரின் அதிகாரத்தை நான் ரத்து செய்கிறேன் என்பதை இலங்கை குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கவும். நெல்லிகஸ்கொட வத்த, கிரிபத்கும்புர, இலக்கம் 9F இன் அதிகாரம் முதியன்சேலாகே ரோஷானிக்கு வழங்கப்பட்டது. இன்று முதல் அமுலுக்கு வருகிறது மேலும் அவள் என் பெயரில் செய்யப்படும் எந்தவொரு செயலுக்கும் அல்லது பரிவர்த்தனைக்கும் நான் கட்டுப்படமாட்டேன்.

**டல்லாஸ் ஜுட் மார்ஸ்டன்**
**திகதி 10.02.2022**

## மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்றல்

வ/ப வயம்ப கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்தின் பிரதிநிதிகளான வ/ப உடுபத்தாவ பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான உடுபத்தாவ, தும்மலசூரிய, வெலிபென்னகஹமுல்ல, எதுன்கஹ கொட்டுவ, ஹொரதபொல மற்றும் யகம்வெல கிராமிய வங்கி கிளைகளில்

2020.08.31ம் திகதி உட்பட அத்தினத்திற்கு முன் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள்

**2022.02.19 மற்றும் 20ம் திகதிகளில் முற்பகல் 9.00 இற்கு**

வ/ப உடுபத்தாவ பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**பொது முகாமையாளர்**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

**எனது இல.: அனு/10/5/4/குரு.06/சந்ராணி லியனகே**

அநுராதபுர மாவட்டத்தில் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜீ. சேனாரத்ன ஆகிய நான் காணி எடுத்தற் சட்டத்தின் 33ஆம் பிரிவின் கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்குரிய நஷ்ட ஈடாக இரண்டு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து நானூற்று எழுபத்தைந்து ரூபாய் (ரூபாய் 252,475.00) பணத்தை இக்காணியின் உரிமை கோருபவர் பெற்றுக் கொள்ளுவதற்கு அநுராதபுர மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. 00001/LA/2021 கீழ்ப்பற்று வைக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

**ஆர்.எம்.ஜீ. சேனாரத்ன,**
**பிரதேச செயலாளர்,**
**மத்திய நுவரகம் பளாத்த.**

திகதி: 2022.02.07

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| காணியின் பெயர் | : | எல்லகட்டுவத்த |
| வரைபட இல. | : | அ.க.பி. 1399 |
| துண்டு இல. | : | 273 இற்கு உரித்தான தயாரிக்கப்பட்ட இல. Aa/NPC/2016/370 கொண்ட வரைபடத்தின் B பகுதியின் ஒரு பகுதி |
| காணியின் விஸ்தீரணம் | : | 0.0300 |
| கிராமம் | : | எல்லகட்டுவ |

## அறிவித்தல்

### நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில்

**வழக்கு இல: T1503/21**
**தன்மை: இறுதி விருப்பாவணம்**
**பெறுமதி: ரூ. 18,000,000/-**

வெளிநாட்டு ப்ரோபேட் ஆவணத்தினை முத்திரையிடுவதற்காக குடியியல் சட்டக் கோவையின பிரிவு 1977ஆம் ஆண்டு 20ஆம் இலக்க (திருத்தப்பட்ட) (அத்தியாயம் 554 (U) குடியியல் சட்டக் கோவையின் கீழ் மேற்கொள்ளப்படும் விண்ணப்பம் தொட்பானது.

L9H 7B& கனடா, ஒன்டாரியோ, 54 வாட்டர்வீல் கிறசன்ட் துன்தாஸ் எனும் இடத்தில் குடியிருந்து காலஞ்சென்ற அனில் தாரக இம்புல்கொட என்பவரின் இறுதி விருப்பாவணம் தொடர்பானது.

**(காலஞ்சென்றவர்)**

L9H 7B7 கனடா ஒன்டாரியோ, 54 வாட்டர்வீல் கிறசன்ட் துன்தாஸ் எனும் முகவரியை சேர்ந்த பந்து இம்புல்கொட அவர்களது இலங்கை அற்றோணி தத்துவக்காரரான கொஹுவல, கிறீன்பாத், இல. 12/4C எனும் முகவரியில் வசிக்கும் சமாரி சுரஞ்சிதா ரணசிங்ஹ அல்லது இம்புல்கொட ஊடாக தோன்றுகின்றனர்.

**மனுதாரர்**

L9H 7B7 கனடா, ஒன்டாரியோ, 54 வாட்டர்வீல் கிறசன்ட் துன்தாஸ் எனும் இடத்தில் குடியிருக்கும் மானெல் ரஞ்சனி இம்புல்கொட அல்லது கஜநாயக்க

**பிரதிவாதி**

L9H 7B7 கனடா, ஒன்டாரியோ, 54 வாட்டர்வீல் கிறசன்ட் துன்தாஸ் எனும் இடத்தில் குடியிருந்து காலஞ்சென்ற அனில் தாரக இம்புல்கொட என்பவரின் இறுதி விருப்பாவணம் தொடர்பாக 2018.03.12ஆம் திகதி வழங்கப்பட்ட ப்ரொபேட் சாதனத்தின் அத்தாட்சிப்படுத்திய பிரதியை முத்திரையிடுவதற்காக இத்துடன் சார்ந்த விண்ணப்பத்தினை பிரசுரத்திலிருந்து 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் 1977ஆம் ஆண்டு 20ஆம் இலக்க (திருத்தப்பட்ட) குடியியல் சட்டக் கோவையின் பிரிவு 554 (U) இன் கீழ் நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ரஞ்சித் விதானவாசம்,**
**மனுதாரரின் பதிவு பெற்ற சட்டத்தரணி**
2021ஆம் ஆண்டு 12 மாதம் 27ஆம் திகதி

---

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

## தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ (தம்புத்தேகம கிளை)

### அனுராதபுரத்தில் அமைந்துள்ள முன்பு தம்மணபுரம என அழைக்கப்பட்டு தற்போது தம்மேன்னகுலம என அழைக்கப்படும் இடத்திலுள்ள பெறுமதி மிக்க பொருளின் பகிரங்க ஏல விற்பனை

அனுமதி பெற்ற நில அளவையாளர் N. B. ஏக்கநாயக்க என்பவரால் தாயாரிக்கப்பட்டு 12.09.2017 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 2933 இல் லொட் இலக்கம் 01 என குறிக்கப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டதும், மீளவும் இது அனுமதி பெற்ற நில அளவையாளர் K. K. சின்னையா என்பவரால் தாயாரிக்கப்பட்டு 25.04.2015 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 152/2001 இல் லொட் இலக்கம் 01 என குறிக்கப்பட்டு அத்துடன் அனுமதி பெற்ற நில அளவையாளர் K. K. சின்னையா என்பவரால் தாயாரிக்கப்பட்டு 26.07.2015 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 7161 இல் லொட் இலக்கம் 02 (அனுமதி பெற்ற நில அளவையாளர் K. K. சின்னையா என்பவரால் தாயாரிக்கப்பட்ட இலக்கம் 13 இல் லொட் இலக்கம் 1 இல் உள்ள) என குறிக்கப்படும் இடமானது வடமத்திய மாகாணம் அனுராதபுரம் மாவட்டம் நுவரகம் பலத்த கணடற கோறளே எல்லைக்குட்பட்ட நுவரகம் பலத்த - கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இல.241கிராம சேவகர் பிரிவில் முன்பு தம்மணபுரம என அழைக்கப்பட்டு தற்போது தம்மேன்னகுலம என அழைக்கப்படும் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்தக் காணியானது அனைத்தும் அடங்கலாக, திட்ட இலக்கம் 2933 இல் லொட் இலக்கம் 1 இனால் குறிப்பிடப்பட்டு வடக்கு: வீதி (R D A) மூலமாகவும் , கிழக்கு: வீதி_PS மூலமும், தெற்கு: உபாலி வீரக்கோனின் காணி மூலமும், மேற்கு: நயன கீர்த்தி என்பவரின் காணிகள் மூலமாகவும் சூழப்பட்டிருக்கிறது. அநுராதபுர நிலப்பத்திவின் கீழ் கனவளவு/போலியோ LDO D 29/104 இந்த கீழ் பதியப்பட்ட காணியின் பரப்பளவு கட்டிடங்கள், தாவரங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்களாக மூன்று ரூட் பதினெட்டு தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சேஸ் ஆகும். (A:00, R:03, P:18.70)

குறித்த இடத்தில் உள்ள மின் இணைப்பு விநியோகத்தொகுதி, நீர் விநியோகத்தொகுதி, தொலைத்தொடர்பு மற்றும் குளிரூட்டி என்பன உள்ளடங்களாக தற்போது உள்ள மற்றும் இனிவரும் அசையக்கூடிய தொகுதிகள், இயந்திர பாகங்கள் பொருத்தி, சேவைகள் அனைத்தும் உள்ளடங்களாக.

அநுராதபுர பிரசித்த நொதாரிசு வசன தரங்கனி இருகல்பண்டார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 27.06.2019 ஆம் திகதியிடப்பட்ட, 803, 805, 807 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் **கிரெளன் பிஸ்கட் கம்பெனி (தனியார்) லிமிடெட் (பெறுனர் 1) மற்றும் பிறமானகே சந்தன உப்புல் குமார ராஜபக்ச (பெறுனர்2) என்பவர்களை கடனாளியாக கொண்டு தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ க்கு** அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

**தேசிய அபிவிருத்தி வங்கி பி எல் சி எமக்கு வழங்கிய அதிகாரத்தின் அடிப்படையில்**
மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில் விற்கிறேன் திங்கட்கிழமை 28 பிப்ரவரி 2022 அன்று பி. ப.10.30 மணிக்கு குறித்த இடத்தில் இடம்பெறும்.

**குறித்த இடத்தை அடைவதற்கு:-** அனுராதபுரம் கச்சேரி சந்தியிலிருந்து (D. S. சுற்று வட்டம்) பண்டாரநாயக்க மாவத்தை (விமானநிலைய வீதி) நோக்கி 805 கிலோமீட்டர் தூரம் சென்று (புதிய கண்டி வீதியும் கண்டிவீதியும் சந்திக்கும் சந்தியிலிருந்து 100 மீற்றர் தள்ளி) குறித்த இடத்தை அடையலாம். குறித்த வீதியின் முகப்பில் வலப்புறத்தில் அமைந்துள்ளது

**கொடுப்பனவு செய்யும் முறை: -**
ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) (விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவொர் கட்டணம் 1000 ரூபா
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி ரூபாய் 2000

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.

பொது முகமையாளர் - தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ
இலக்கம்: 255, தம்புத்தேகம பிரதான வீதி
தொலைபேசி. 0252276872, 0252276873
தொலைநகல். 0252276807

- **முன்னறிவிப்பு இன்று ஏல விற்பனையை நிறுத்த வங்கிக்கு உரிமை உண்டு.**
- **சுகாதார அமைச்சின் கோவிட் 19 பாதுகாப்பு சட்ட நடவடிக்கைகள் கடுமையாக பின்பற்றப்பட்டு ஏலம் இடம்பெறும்.**

DK's AUCTIONS To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com

---

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

## தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ (தம்புத்தேகம கிளை)

### கிரெளன் பிஸ்கட் கம்பெனி (தனியார்) லிமிடெட்டில் அமைந்துள்ள பெறுமதி மிக்க இயந்திரத்தின் பகிரங்க ஏல விற்பனை

அனுராதபுர நிலப்பதிவின் கீழ் பதியப்பட்ட வடமத்திய மாகாணம் அனுராதபுரம் மாவட்டம் நுவரகம் பலத்த கணடற கோறளே எல்லைக்குட்பட்ட நுவரகம் பலத்த - கிழக்கு பிரதேச செயலக பிரிவு, நுவரகம் பலத்த - கிழக்கு பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட இல.241 கிராம சேவகர் பிரிவில் நெலுக்குலாமவில் விமானநிலைய வீதியில் அமைந்துள்ள **கிரெளன் பிஸ்கட் கம்பெனி (தனியார்) லிமிடெட்** இன் வைத்திருக்கும் அல்லது சேமித்து வைக்கப்பட்டுள்ள அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட அல்லது இணைக்கப்பட்டுள்ள திட்டத்திற்காக வாங்கப்பட வேண்டிய அனைத்து ஆலை இயந்திர சாதனங்கள் மற்றும் பொருத்துதல்கள் அனைத்தும் உள்ளடக்கியது.

| இயந்திர விபரிப்பு / நிலைமை | தயாரிப்பு மற்றும் மாதிரி | தொடர் இல./ Chassis No. | உற்பத்தியான நாடு | உற்பத்தி செய்த வருடம் | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 2 வரி பிஸ்கட் சாண்விச் இயந்திரம் | RICHENG/RCJ-221 | 22365 | இலங்கை | N/A | 01 |
| 4 வரி பிஸ்கட் சாண்விச் இயந்திரம் | RICHENG/RCJ-421 | 20160807 | இலங்கை | N/A | 01 |
| முழு தானியங்கி, கூடிய வேகம், கூடிய துல்லியம், செங்குத்து வடிவம் நிரப்பும் மற்றும் சீல் இயந்திரம் | SAI/H/60/A/S/G (Fusion) | 476, 485, 496 | இலங்கை | N/A | 03 |
| முழு தானியங்கி, கூடிய வேகம், கூடிய துல்லியம், செங்குத்து வடிவம் நிரப்பும் மற்றும் சீல் இயந்திரம் | SAI/H/FP/30 (Fusion) | 458, 469, 480 | இலங்கை | N/A | 03 |
| முழு தானியங்கி, கூடிய வேகம், கூடிய துல்லியம், செங்குத்து வடிவம் நிரப்பும் மற்றும் சீல் இயந்திரம். 10 தலை எடைபோடுதல் (தரநிலை எடைபோடுதல்) மற்றும் நிலைக்குத்து FFS இயந்திரம் - நியூமடிக் வகை | HIGHDREAM/AC – 810-2B-1X and BX-400 (Pneumatic) | 1312004 1312005 1312006 | இலங்கை | N/A | 03 |

அநுராதபுர பிரசித்த நொத்தாரிசு வசன தரங்கனி இருகல்பண்டார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 21.02.2018 ஆம் திகதியிடப்பட்ட, 491 மற்றும் 494 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் **கிரெளன் பிஸ்கட் கம்பெனி (தனியார்) லிமிடெட் மற்றும் பிறமானகே சந்தன உப்புல் குமார ராஜபக்ச என்பவர்களை கடனாளியாக கொண்டு தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ க்கு** அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

**தேசிய அபிவிருத்தி வங்கி பி எல் சி எமக்கு வழங்கிய அதிகாரத்தின் அடிப்படையில்**
மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில் விற்கிறேன் திங்கட்கிழமை 28 பிப்ரவரி 2022 அன்று பி. ப.10.45 மணிக்கு குறித்த இடத்தில் இடம்பெறும்.

**இயந்திரத்தை அடையும் முறை: -**
கிரெளன் பிஸ்கட் கோ.பிரைவேட் லிமிடெட், விமானநிலைய வீதி, நெலுக்குலம, அனுராதபுரம்

**கொடுப்பனவு செய்யும் முறை: -**
ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) (விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவொர் கட்டணம் 1000 ரூபா
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி ரூபாய் 2000

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.

பொது முகமையாளர் - தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ
இலக்கம்: 255, தம்புத்தேகம பிரதான வீதி
தொலைபேசி. 0252276872, 0252276873
தொலைநகல். 0252276807

- **முன்னறிவிப்பு இன்று ஏல விற்பனையை நிறுத்த வங்கிக்கு உரிமை உண்டு.**
- **சுகாதார அமைச்சின் கோவிட் 19 பாதுகாப்பு சட்ட நடவடிக்கைகள் கடுமையாக பின்பற்றப்பட்டு ஏலம் இடம்பெறும்.**

DK's AUCTIONS To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, கல்தேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com

# 'ஐஸ் பிரேகர் 2022'

## மோட்டார் வாகன ஓட்டுநராக உஷான் பெரேராவும் சிறந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநராக ஜாக் குணவர்தனவும் தெரிவு





இலங்கை மோட்டார் வாகன ஓட்டுநர்களின் சங்கம் (SLADA) ஏற்பாடு செய்த "ஐஸ் பிரேகர் 2022" இவ்வாண்டின் முதல் மோட்டார் வாகன மற்றும் மோட்டார் சைக்கிள் சுற்றுப்போட்டியில் சிறந்த மோட்டார் வாகன ஓட்டுநராக உஷான் பெரேராவும் சிறந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநராக ஜாக் குணவர்தனவும் தெரிவு செய்யப்பட்டு கிண்ணங்களை வென்றுள்ளனர்.

எம். எக்ஸ் ரேசிங் மோட்டார்சைக்கிள் இரு போட்டி பிரிவுவுகளிலும் ஜாக் குணவர்த்தன சிறந்த முறையில் வெற்றிபெற்றதுடன் 350 சீ.சீ. முதல் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற உஷான் அதன் இரண்டாவது சுற்றில் வெற்றிபெற்றார். அனுராதபுரம் சாலியபுரயில் அமைந்துள்ள கஜபா ரெஜிமெண்ட் வளாகத்தில் அமைந்துள்ள ஓடுபாதையில் இச் சுற்றுப்போட்டிகள் நடைபெற்றன. இதில் 10 சுற்றுகள் மோட்டார் வாகன போட்டிகளும், அதேயளவான மோட்டார்சைக்கிள் சுற்றுப் போட்டிகளும் நடைபெற்றன.

தேசிய மோட்டார் போட்டியில் சிறந்த வீரராகத் திகழும் அஷான் சில்வா இத் தொடரில் 3500 சீ. சீ. சுப்பர் போட்டி இரண்டில் முதல் சுற்றில் பெற்றிபெற்றதுடன், இரண்டாவது சுற்றில் அவரது வாகனம் திடீரென பழுதானதால் அவர் இத் தொடரில் இரண்டாம் இடத்துககுத் தள்ளப்பட்டார். இந்த வேகமான மோட்டார் வாகன இரு சுற்றுப் போட்டிகளில் முதல் சுற்றில் இஷாக் வஹாப் மூன்றாவது இடத்துக்கு வந்ததுடன் இதன் இரண்டாவது சுற்றில் மற்றொரு சிறந்த மோட்டார் வாகன போட்டியாளரான அரவிந்த பிரேமதாச மூன்றாவதாக போட்டியை நிறைவு செய்தார்.

இரண்டாவது வேகமான மோட்டார் வாகன போட்டியான எஸ். எல்./எச். 1600 சீ. சீ. மோட்டார் வாகன போட்டியில் இர்பான் புவாட் வெற்றிபெற்றதுடன் இப் பிரிவில் இரண்டாவது இடத்தை இர்ஷாட் பார்ம் பெற்றார். சிறந்த மோட்டார் சைக்கிள் வீரரும் வளர்ந்துவரும் மோட்டார் வாகன வீரருமான கேஷர கொடகே மூன்றாவதாக போட்டியை நிறைவு செய்தார். இத்தொடரில் இரு வகைப் போட்டியிலும் கலந்துகொண்ட ஒரே வீரர் இவரே. இதில் கலந்து கொண்ட ஒரே பெண் போட்டியாளரான ஷெஹாரா ஜயவர்த்தனவால் வெற்றி பெற முடியவில்லை.

எம். எக்ஸ். 100125 சீ. சீ. 2டீ, 175 250 சீ. சீ. டீ4 மோட்டார் சைக்கிள் இரு பிரிவுகளிலும் ஜாக் குணவர்த்தன வெற்றி பெற்றார். இதில் முதல் பிரிவில் இவோன் பியாஜ் குருசிங்க இரண்டாவது இடத்தையும், இரண்டாவது பிரிவில் இரண்டாவது இடத்தைப் கேஷர கொடகேயும் பெற்றனர். அதன் முதல் பிரிவில் மூன்றாவது இடத்தையும் கேஷர கொடகே பெற்றுக்கொண்டார். இரண்டாவது பிரிவில் டீ. எம். டீ. கல்ஹார மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இலங்கை இராணுவ மோட்டார் வாகன சங்க உறுப்பினரான மோட்டார் சைக்கிள் வீரர் சமீர பிரேமரத்ன இத்தொடரில் 100125 சீசீ ஸ்ட்ரேல் ட்ரேல் போட்டிப் பிரிவிலும், எம். எக்ஸ் 125 சீ. சீ. ரேசிங் போட்டிப் பிரிவிலும் வெற்றி பெற்றார். மேலும் சுப்பர் மோட்டார்ட் இரண்டாவது போட்டியிலும் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

அநேகரின் கவனத்தை ஈர்த்த போட்டியாக 9 வயதின் கீழ் 50 சீசீ மோட்டார் சைக்கிள் போட்டியில் யமிக் கிமீர ஜயரத்ன வெற்றி பெற்றதுடன் 12 வயதின் கீழ் மோட்டார் சைக்கிள் பிரிவில் ஷகீப் அஹமட் வெற்றி பெற்றார்.

## பாராளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தனின் முயற்சியால் கல்லடி வேலூர் பொது விளையாட்டு மைதான அபிவிருத்திக்கான அடிக்கல்

**கல்லடி குறூப் நிருபர்**



மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கல்லடி வேலூர் பொது விளையாட்டு மைதான அபிவிருத்திக்கான அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின்பால் நாட்டை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் தொகுதி ரீதியாக ஒரு விளையாட்டு மைதானத்தினை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடா, பட்டிருப்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய தொகுதிகளிற்காக மூன்று பாரியளவிலான அனைத்து வசதிகளுடனான விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்கான விளையாட்டு மைதானமான மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களது முன்மொழிவிற்கு அமைவாக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்லடி வேலூர் பொது விளையாட்டு மைதானத்திற்கான அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்தவைப்பதற்கான அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டது.

### டயலொக் – இலங்கை கிரிக்கெட் தேசிய சுப்பர் லீக்

## வெற்றிகளை குவித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறிய கண்டி அணி





இலங்கை கிரிக்கெட் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் டயலொக் இலங்கை கிரிக்கெட் தேசிய சுப்பர் லீக்கில் ஒருநாள் தொடரில் (10ம் திகதி ) நடைபெற்ற இரண்டு போட்டிகளில் கண்டி மற்றும் தம்புள்ள அணிகள் வெற்றிகளை பதிவுசெய்துள்ளன.

தொடர்ச்சியாக தோல்விகளை தழுவிவந்த தம்புள்ள அணி, இன்றைய போட்டியில் துவிந்து திலகரட்னவின் அபார பந்துவீச்சின் உதவியுடன் முதல் வெற்றியை சுவைத்ததுடன், கண்டி அணியானது தங்களுடைய 5வது வெற்றியை பதிவுசெய்து, இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை தக்கவைத்துள்ளது.




தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில், தொடர் தோல்விகளை தழுவிவந்த தம்புள்ள அணி, தங்களுடைய முதல் வெற்றியினை இன்று பதிவுசெய்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தம்புள்ள அணி களத்தடுப்பை தேர்வுசெய்தது. அதன்படி பந்துவீசிய தம்புள்ள அணிக்காக துவிந்து திலகரட்ன சிறந்த பந்துவீச்சினை வெளிப்படுத்த, காலி அணியால் ஓட்டங்களை குவிக்க முடியவில்லை. எனவே, 33.4 ஓவர்கள் நிறைவில் 125 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

காலி அணியின் ஹிமாஷ லியனகே மாத்திரம் அதிகபட்சமாக 29 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள, ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் துவிந்து திலகரட்ன 4 விக்கெட்டுகளை வீழ்த்த, அஷான் பிரியன்ஜன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய தம்புள்ள அணி எப்போதும் போன்று, துடுப்பாட்டத்தில் தடுமாறத்தொடங்கியது. 71 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், 83 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் இழந்து தடுமாறியது.

அஷான் பிரியன்ஜன் பெற்றுக்கொடுத்த 31 ஓட்டங்கள் மற்றும் துஷான் ஹேமந்த (28 ஓட்டங்கள்), சமீர சந்தமாலின் (26 ஓட்டங்கள்) இணைப்பாட்டத்தின் உதவியுடன் 24.5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து தம்புள்ள அணி வெற்றியிலக்கை அடைந்தது.

பந்துவீச்சில், இதன்மூலம், போட்டித்தொடரில் தங்களுடைய ஏழாவது போட்டியில் விளையாடி தம்புள்ள அணி தங்களுடைய முதல் வெற்றியை பதிவுசெய்துள்ளது.

கண்டி – பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இந்தப்போட்டியில், ஓசத பெர்னாண்டோ மற்றும் சஹான் ஆராச்சிகேவின் 128 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தின் உதவியுடன் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியை பதிவுசெய்தது.

இளம் துடுப்பாட்ட வீரரான நுவனிந்து பெர்னாண்டோ தம்புள்ள அணிக்கு எதிரான போட்டியில் சதமடித்தது மாத்திரமின்றி, இந்த போட்டியில் அபார சதமொன்றை விளாசி அணியின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுவளித்தார். நுவனிந்து பெர்னாண்டோ மற்றும் சம்மு அஷான் ஆகியோர் 4வது விக்கெட்டுக்காக 109 ஓட்டங்களை பகிர்ந்தனர்.

இறுதிநேரத்தில் விக்கெட்டுகளை தவறவிட்டதால், கொழும்பு அணி 49.3 ஓவர்கள் நிறைவில், 271 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது. நுவனிந்து பெர்னாண்டோ ஒரு சிக்ஸர் மற்றும் 7 பௌண்டரிகள் அடங்கலாக 112 ஓட்டங்களை குவித்ததுடன், சம்மு அஷான் 62 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் புலின தரங்க மற்றும் அசித பெர்னாண்டோ ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் களமிறங்கிய கண்டி அணியின் ஒவ்வொரு துடுப்பாட்ட வீரர்களும் சிறிய பங்களிப்பை வழங்கிய போதும், நான்காவது விக்கெட்டுக்கான ஓசத பெர்னாண்டோ, சஹான் ஆராச்சிகேவின் இணைப்பாட்டம் மற்றும் புலின தரங்க மற்றும் ஓசத பெர்னாண்டோ ஆகியோருக்கு இடையிலான ஐந்தாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டங்களின் உதவியுடன் 48.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து கண்டி அணி வெற்றியிலக்கை அடைந்தது.

ஓசத பெர்னாண்டோ அதிகபட்சமாக ஆட்டமிழக்காமல் 85 ஓட்டங்களை பெற, சஹான் ஆராச்சிகே 64 ஓட்டங்களையும், புலின தரங்க ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றியை உறுதிசெய்தனர். பந்துவீச்சில் லஹிரு மதுஷங்க 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தாங்கள் விளையாடிய 6 போட்டிகளில் ஐந்தில் வெற்றிபெற்று 24 புள்ளிகளை பெற்றுள்ள கண்டி அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறும் முதல் அணி என்ற பெருமையை பெற்றுள்ளதுடன், இரண்டாவது இடத்தில் ஜப்னா அணி 18 புள்ளிகளுடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சுதந்திர கிண்ண கால்பந்து தொடர்

## வடக்கு, கிழக்கு மோதல் சமநிலை சப்ரகமுவ அணி முன்னிலையில்

**அக்குறணை குறூப், திருகோணமலை குறூப் நிருபர்கள்**





மாகாண அணிகள் மோதும் சுதந்திர கிண்ண கால்பந்து தொடரில் வியாழக்கிழமை (10) இடம்பெற்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அணிகளுக்கு இடையிலான போட்டி சமநிலை பெற்றது. ரஜரட்ட அணியை இலகுவாக வெற்றி கொண்ட சப்ரகமுவ அணி தொடரின் தரப்படுத்தலில் முதலிடத்திற்கு முன்னேறியது.

தொடர்ந்து இடம்பெற்று வரும் சுதந்திர கிண்ண தொடரின் ஐந்தாவது கட்டத்திற்கான போட்டிகள் வியாழக்கிழமை (10) மத்திய மாகாணத்தில் ஆரம்பமாகின. ஒரு போட்டி நாவலபிடிய ஜயதிலக்க விளையாட்டரங்கிலும், அடுத்த போட்டி கண்டி போகம்பரை விளையாட்டரங்கிலும் இடம்பெற்றது.

போகம்பரை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 நிமிடங்களில், ரஜரட்ட பின்கள வீரர்கள் விட்ட தவறைப் பயன்படுத்தி, சப்ரகமுவ அணித் தலைவர் சிபான் போட்டியின் முதல் கோலைப் பெற்றார்.

முதல் பாதியில் எந்தவொரு கோலும் பெறப்படாத நிலையில் இரண்டாம் பாதியில் 68ஆவது நிமிடத்தில் ஏற்கனவே, முன்னைய போட்டியில் இரண்டு கோல்களைப் பெற்ற இளம் வீரர் முஷ்பிக் சபரகமுவ அணிக்கான இரண்டாவது கோலைப் பெற்றார்.

75 நிமிடங்கள் கடந்த நிலையில் எதிரணியின் கோல் எல்லைக்கு சற்று வெளியில் கிடைத்த பிரீ கிக் வாய்ப்பை இஜாஸ் நேராக கோலுக்குள் செலுத்தி, மூன்று கோல்களால் சப்ரகமுவ அணியை முன்னிலைப்படுத்தினார்.

அவ்வணிக்காக மாற்று வீரராக வந்த ரஷான், 85ஆவது நிமிடத்தில் அடுத்த கோலையும் பெற்றார். சப்ரகமுவ அணி பெற்ற இறுதி மூன்று கோல்களுக்குமான வாய்ப்பை அணித் தலைவர் சிபான் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

89ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி அசிகூர் ரஹ்மான் ரஜரட்ட அணிக்கான முதல் கோலைப் பெற்ற போதும், ஆட்ட நிறைவில் 4-1 என்ற கோல்கள் கணக்கில் சபரகமுவ அணி வெற்றி பெற்று, சுதந்திர கிண்ண கால்பந்து தொடரின் புள்ளிப் பட்டியிலில் தற்போது முதல் இடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

ஜயதிலக அரங்கில் இடம்பெற்ற இந்த மோதலின் முதல் பாதியில் வட மாகாண அணி ஆதிக்கம் செலுத்தினாலும், இரண்டாம் பாதியில் கிழக்கு மாகாண அணியும் சிறந்த கோல் முயற்சிகளை மேற்கொண்டு விளையாடியது. இரண்டு அணிகளது கோல் காப்பாளர்களான் அமல் ராஜ் மற்றும் முர்ஷித் ஆகியோரின் சிறந்த தடுப்புக்கள் காரணமாக போட்டி நிறைவில் எந்த அணியும் கோல் பெறாமையினால் ஆட்டம் சமநிலையானது.

சப்ரகமுவ மற்றும் வட மாகாண அணிகள் இரண்டும் தலா 10 புள்ளிகளைப் பெற்றுள்ள போதும், பெறப்பட்ட கோல்களின் வித்தியாசத்தில் வட மாகாண அணி புள்ளிகள் பட்டியலில் இரண்டாம் இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 12ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.